பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 4	ஞாயிறு 7-4-40 பிரமாதி௵ பங்குனி௴ 25௳	முத்து 1

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
உலக வர்த்தமானம்		2
புதிய யுத்த மந்திரி சபை		4
அதிகப் பிரஸங்கம்		6
இது தெரியுமா ?		7
உதிர்ந்த மணிகள்		8
ஹெம் ஹோல்ட்ஸ்	ஆர். கே. விசுவநாதன் எம். ஏ.	9
பொது அறைப் பேச்சு	"ராஜாராம்"	11
வாழ்க்கைச் சுடர்	"ஜ்யோதி"	13
தாய் நாடு	எஸ். சங்கரன்	17
சிறுவர் பகுதி	சீதா	21
புத்தக விமர்சனம்	...	23
சினிமா வானில்	"எஸ். எஸ்."	24

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பி
எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல,

உலக வர்த்தமானம்

இப்பொழுது நடந்துவரும் யுத்தத்தின் ஒரு பாகம் முடிவடைந்தது. ஓர் புதிய மற்ளுெரு பாகம் ஆரம்பிக்கப் போகிற தென்று தீர்க்கதரிசிகள் எதிர் பார்க்கின்றனர்.

சென்ற மார்ச்சு 30-ம் தேதி சர்ச்சில் செய்த ரேடியோ பிரஸங்கத்தில் ரோஷமும், கோபமும் கலந்திருந்தன. அதிலிருந்து யுத்தம் வலுக்கும் என்பது நன்கு விளங்குகிறது. இந்த யுத்தத்தில் பிரிட்டிஷ், பிரெஞ்சு ஒத்துழைப்பைப் பாராட்டிப் பேசினர். நடு நிலைமை வகிக்கும் நாடுகள் இந்த யுத்தத்தில் பட்ட கஷ்டங்களைக் குறித்து வருத்தப்பட்டார். ஆனல் "இந்த யுத்தம் சீக்கிரம் முடிய வேண்டும்; அல்லது யுத்தமே இல்லாமல் செய்ய வேண்டுமென்ருல், நம் கொள்கையில் நம்பிக்கையுள்ள நடு நிலைமை வகிக்கும் தேசங்கள் நம்முடன் கூடி நம் பலத்தைப் பெருக்க வேண்டும்" என்று அவர் கூறுவது நடு நிலைமை தேசங்களுக்குத் தகுந்த சமயத்தில் காட்டும் நல் வழி என்று கருதப்படுகிறது.

ஆங்கிலோ—பிரெஞ்சு ஒத்துழைப்பு பிக்க வலுத்திருக்கிறது என்பதற்கு ...லிகுறியாக சென்ற வாரத்தில் லண்டனில் ... கூடிய "ஸுப்ரீம் வார் கவுன் ஸிலி... ல் முக்கிய விஷயங்களைப் பற்றி இட... ரித்திருக்கிறது. இது வரையில் ஸம்வா... கையாண்டு வந்ததைக் காட்டிலும் கங்கள் ... ணும் தீவிரமாகச் சில முறைவும் இருக்... த்தில் கையாள வேண்டு யது அவ... வானித்தது. பொருளாதார யதில் நாட... திரியைப் பட்டினி போட வால்மீகியிடம் ... ன பிரயத்தனம் எடுத்துக்கொள்ளப் போவதாகத் நிச்சயித்தது. இவைகளைக் காட்டிலும் பன்மடங்கு முக்கியமானதான ஆங்கிலோ—பிரெஞ்சு ஒத்துழைப்பை ஊர்ஜிதம் செய்தது.

ஸ்காண்டிநேவிய பிரதேசங்களிலுள்ள பிரிட்டிஷ் மந்திரிகளை எல்லாம் லண்டனுக்கு அழைத்திருக்கிறர் லார்ட் ஹாலிபாக்ஸ். யுத்தத்தின் புதிய போக்கில் இந்நாட்டு மந்திரிகளுடன் வெளி நாட்டு மந்திரி லார்டு ஹாலிபாக்ஸ் நடத்தும் பேச்சுக்கள் மிகவும் முக்கிய மானதாக இருக்கும் என்று பலர் நம்புகிருர்கள்.

ஈஸ்டர் விடுமுறை காலத்திற்குப் பிறகு பார்லிமெண்டில் பிரதம மந்திரி சேம்பர்லின் தற்கால நிலைமை பற்றி ஒரு அறிக்கை வெளியிட்டார். இவ்வறிக்கை நடுநிலைமை நாடுகள் சம்பந்தப் பட்ட வரையில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டுவருகிறது. பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஒத்துழைப்பு பற்றி சேம்பர்லினும் எடுத்துக் கூறினர். "ஸுப்ரீம்வார் கவுன்ஸிலின்" தீர்மானங்களையும் விவரித்துக்கூறினர். கடைசியாக யுத்தம் வெற்றிகரமாக நடத்த ஜெர்மனியைப் பொருளாதார முறையில் தோற்கடிக்க வேண்டும் என்று கூறினர். அப்பொருளாதார யுத்தத்தில் நடுநிலைமை நாடுகளின் உதவியும் கூட்டுறவும் எவ்வளவு அவசியமானது என்று விளக்கிக் காட்டினர். நடு நிலைமை நாடுகள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் எந்த காரணத்தை முன்னிட்டும் ஜெர்மனிக்குஏற்றுமதி செய்வதை அதிகப் படுத்தக்கூடாது சமரஸம் நிலவ வேண்டுமானல் கூடாது என்று கண்டிப்பாகப் பேசினர். இந்த உத்தரவாதத்தை நடு நிலைமை நாடுகள் கொடுக்க வேண்டும் என்று கூறினர்.

சேம்பர்லின் அறிக்கை ஐரோப்பாவில் நடு நிலைமைப் பிரதேசங்களின் சுய உரிமைகளை அழிக்கக் கூடியதாக இருக்கிறது என்ற அபிப்ராயம் சில மூலைகளில் இருந்து வருகிறது. நடு நிலைமை நாடுகளின் மனோபாவம் இன்ன தென்று தெரிய வில்லை.

உள்நாட்டில்

ஜின்னாவின் இரு தேசக் கோரிக்கை இரண்டு கட்சிகளுக்கும் இடையில் அகப்பட்டுக் கொண்டு தவியாய் தவிக்கிறது. ஒரு பக்கத்தில் இந்து மகா சபையில் இடி; மற்றொரு பக்கத்தில் தேசிய முஸ்லிம்களின் குத்து; இதனிடையில் காங்கிரஸும் தன்னாலியன்றதை — உதை குத்து அல்ல—அஹிம்ஸா முறையில் அஸ்திரங்களைப் பொழிகின்றது. இரு தேசத் தீர்மானத்தின் கதி என்ன வாகுமோ? சமீபத்தில் கூட ஜின்னா அதற்கு முதுகைக் கொடுத்துத் தாங்கி நிற்க வைத்தார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர் அஸாப் அலியும் ஜின்னாவின் தீர்மானத்தைச் சக்கை போடு போட்டார். பஞ்சாபிலுள்ள முஸ்லிம்களும், சீக்கியர்களும் ஜின்னாவின் அழுக்கடைந்த கோரிக்கையை உதைத்துத் தள்ளுகிறார்கள்.

இந்திய அரசியல் வாதியின் உமி சாப்பிடும் வாய்க்கு அவல் கிடைப்பது போல் லண்டன் டைம்ஸ் பத்திரிகையின், இரு தேசத் தீர்மானத்திற்கு உரம் கொடுக்கும் தலையங்கம், கிடைத்தது. அத் தலையங்கத்தை சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் கசகசவென்று மென்று தின்கிறார்.

இந்திய விஞ்ஞான சாஸ்திரி ஒருவருக்கு சென்ற வாரத்தில் ஓர் அரும் பதவி கிடைத்தது. டாக்டர் கே. எஸ். கிருஷ்ணனை ராயல் சொஸைடியின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்து அவரைக் கௌரவப்படுத்தினார்கள். 1923-ம் வருஷமுதல் டாக்டர் கிருஷ்ணன் ஸர் ஸி. வி. ராமன் கீழ் ஒளி சம்பந்தமான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார். 1928-ல் ஸ்ரீ கிருஷ்ணன் டாக்கா சர்வ கலாசாலையில் "ரீடர்" ஸ்தானத்தைப் பெற்றார். 1933-ல் ஸர் ஸி. வி. ராமன் இந்தியன் ஸைன்ஸ் அஸோஸியேஷனை விட்டு பெங்களூருக்குப் போகும்போது ஸ்ரீ கிருஷ்ணன், அவருக்குப் பதிலாக இந்தியன் ஸையன்ஸ் அஸோஸியேஷனில் ஆராய்ச்சிப் பேராசிரியாக அமர்த்தப்பட்டார். பிறகு வெளி நாடுகளில் நடக்கும் சில மகாநாடுகளிலும் அவர் பிரஸன்னமாகித் தன் அறிவை வெளி தேசங்களுக்கும் பிரத்தியக்ஷப் படுத்தினார்.

இதுபோன்று ஐந்து இந்தியர்கள் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள் — காலஞ்சென்ற எஸ். ராமானுஜம்; காலஞ் சென்ற ஸர் ஜகதீஷ் சந்திரபோஸ்; ஸர் ஸி. வி. ராமன்; மேக்நாத் ஸஹா; ஆசிரியர் பீர்பால் ஸாஹ்னி.

நீங்கள் வாசிக்க!

திரு. வி. கலியாணசுந்தரனார் இயற்றிய நூல்கள்

பெரிய புராணம்—அரும்பத ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும்	7	0
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	2	8
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை	2	0
தமிழ்த் தென்றல்	2	0
நாயன்மார் வரலாறு	1	8
தமிழ்ச் சோலை அல்லது கட்டுரைத் திரட்டு—இரண்டு பகுதி	3	0
சைவத் திறவு	0	8
தமிழ் நாடும் நம்மாழ்வாரும்	0	8
கடவுள் காட்சியும் தாயுமானவரும்	0	4
சித்த மார்க்கம்	0	6

சுவேதாரண்ய ஆசிரமம்

7, வடக்குமாட வீதி, மயிலாப்பூர்

சென்னை.

புதிய யுத்த மந்திரிசபை

(கே. எஸ். வேங்கட ரமணி.)

தும்பை விட்டு விட்டு வாலைப் பிடித்துக் காளையை அடக்கி ஆளும் சூரனின் கதி மேல் நாட்டு ஏகாதிபத்தியத்திற்கு இப்பொழுது நேர்ந்து விட்டது. நான்கு தடவை முறை தப்பும் பொழுது விட்டு விட்டு, ஐந்தாங் தடவை முறை தப்பும் பொழுது கண்டித்தால் சுலபமாய் சீர்திருத்தம் செய்ய இயலுமோ? ஜப்பான் மஞ்சூரியாமேல் படை எடுத்த பொழுதும், இத்தாலி அபிஸீனியாவின் மேல் படை எடுத்து விழுங்கின பொழுதும், பார்க்காதது போல் தூங்கி நின்ற சர்வ தேச சங்கமும், பிரிட்டிஷ்—பிரெஞ்சு ஜனநாயகமும் இப்பொழுது தும்பை விட்டு வாலைப் பிடித்து ரேக்ளாவில் கட்டிச் சவாரி செய்யும் சூரன் போல் ஆகும். போனதைப் பற்றிப் பேசுவதில் லாபம் என்ன? கடந்து போனதைப் பற்றிக் கொட்டி அளப்பதில் பயனில்லை. வெற்றியடைய மேற்கொண்டு நடக்க வேண்டிய காரியங்களைக் கவனிப்போம்.

சென்ற குளிர் காலத்தின் கடுமையில் யுத்தம் பனிக்கட்டி போல் உறைந்து நின்ற சமயத்தில் "பாரதமணி" யிலும் இதர பத்திரிகைகளிலும் நான் ஓர் அறிக்கை விட்டிருந்தேன். சமாதானப் பேச்சிற்கு இதுதான் தக்க சமயம். நடுநிலைமை வகிக்கும் தேசத்தோடு யுத்தம் செய்ய இரு தரப்பார்களும் கலந்து பேசிக் கொண்டால், சமாதானத்துக்கு ஒரு வழி ஏற்படலாம். கையைக் கோர்த்து சேர்ந்து அடிவைத்தால் கல்லிலும் காட்டிலும் கூட ஓர் கால் வழிப்பாதை செய்து விடலாம். நடு நிலைமை நாடுகள் யுனைடெட் ஸ்டேட்ஸின் தலைமையின்கீழ் ஒன்று சேர்ந்து ஓர் சமாதானத் தூது, ரோம், லண்டன், பாரிஸ், பெர்லின், போக வேண்டுமென்று அந்த அறிக்கையில் நான் வேண்டிக் கொண்டேன்.

கொஞ்ச காலம் கழித்து, அப்படியே ஸம்னர் வெல்ஸ் என்பவர் யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்காரின் சார்பாக விஷய ஆராய்ச்சி தூதாக (Fact finding machine) சென்ற பொழுது, முஸோலினியின் உதவியைக் கொண்டு ஒரு விதமான சமாதானம் ஐரோப்பாவில் ஏற்படலாமென்று கருதினேன். ஆனால், அந்த எண்ணங்கள் எல்லாம் இப்பொழுது வீண் என்று கருதுகிறேன்.

ஏனென்றால், 30-3-40-ல் சர்ச்சில் செய்த ரேடியோ பிரசங்கத்தைக் கேட்ட மாத்திரத்தில் இனிமேல் ஐரோப்பாவில் சமாதானம் ஏற்படாது என்று விளங்குகிறது. மகாபாரத யுத்தம் ஒன்று நடந்த பிறகுதான் முடிவுபெற வேண்டும். சர்ச்சிலுடைய சொற்பொழிவு எப்பொழுதும் தூங்கும் தீயையே மூட்டிக் காட்டுத் தீயாக்கும் சக்தி யுடையது. வார்த்தைகளைச் சொக்கப் பானைபோல கொளுத்திக் காரியத்தைக் கரியாக்கி விடுகிறார். அவருடைய பிரஸங்கத்தின்கடுமையையும் வீராவேசத்தையும் பார்த்தால், யுத்தம் சிக்கிரத்தில் வலுக்கும் என்று தோன்றுகிறது. யுத்தம் வலுத்தால் மேல் நாட்டார் நிற்க நிலை ஏது?

இப்படிப்பட்ட புயற்காற்று யுத்தத்தில் ஜன நாயகம் வெற்றி பெற வேண்டுமென்றால், ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள, யுத்தத்தில் கலந்து நிற்கும் தேசங்களை ஒன்று சேர்த்து ஓர் புதிய யுத்த மந்திரி சபை ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் உண்மையான ஒற்றுமை ஜனநாயக கூட்டிற்குள் ஏற்படும். இந்த யுத்தமந்திரி சபையில் பிரிட்டனிலிருந்தும், பிரான்ஸிலிருந்தும், இந்தியாவிலிருந்தும், கானடா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்காவிலிருந்தும், மந்திரிகள் பொறுக்கி எடுக்கப்படவேண்டும். யுத்தநிர்வாகப் பொறுப்பை பூராவும் இவர்களிடம் ஒப்புவிக்க வேண்டும். இப்பொழுது பிரிந்துநின்று தொண்டு புரிந்து வரும் மந்திரி சபைகளால் இந்த

புதிய யுத்த மந்திரிசபை

யுத்தத்தை வெற்றிகரமாய் நடத்திச் சர்வாதிகாரிகளை ஒழித்து ஜன நாயகத்தை நிலை நாட்ட முடியாதென்று அச்சப் படுகிறோம். அதுவும் நமது பிரிட்டிஷ் பிரதம மந்திரி நெவில்லி சேம்பர்லின் சென்ற மூன்று வருஷ காலமாக அரசியல் நெருக்கடிகளில், திர்க்க தரிசியாய் இருந்து நடத்தி வந்தாரென்று தெரியவில்லை. பிறரைத் தூண்டி கிளர்ச்சி செய்து வீராவேசப் படுத்தித் தொண்டு புரியும் சக்தி வாய்ந்தவராயும் தெரியவில்லை. புழுதியில் உழுத காளையைச் சேடை உழவில் இறக்கினல் எப்படியோ, அப்படியே பரிதாபகரமாய் இருக்கிறது அவர் நிலை.

இப்பொழுது சர்வாதிகாரிகளின் கூட்டத்தின் ராணுவ பொருளாதார வலுவை ஒரு விதத்திலும் அவமதிக்க முடியாது. இந்த யுத்தம் 1914ம் வருஷத்திய யுத்தம் போல்அல்ல. அதன் அம்சங்கள் இதற்குக் கொஞ்சம்கூட இல்லை. எல்லாம் முக்கிய விஷயங்களிலும் மாறுபாடாய் இருக்கிறது. வெளி நாட்டு மந்திரியாயிருந்த லித்வினுப்பை அந்த ஸ்தானத்திலிருந்து விலக்கின உடனே ஐரோப்பிய அரசியல் சிட்டாட்டத்தில், கைகளைக் கலைத்து மாற்றி, ஸ்டாலின் ஆட்டம் ஆடப் போகிறார் என்று அப்பொழுதே நான் ஊகித்தேன். மூனிச் ஒப்பந்தமும் ரஷ்யா—ஜெர்மன் ஒப்பந்தமும் ஏற்பட்ட உடன் துருப்புகள் எல்லாம் சர்வாதிகாரிகள் கையில் வந்து குவிந்து விட்டன வென்று வியந்தேன். யுத்தம் வலுக்கப்போகிற தென்று பயந்தேன். பொருளாதார முறையிலும் ரஷ்யா—ஜெர்மன் ஒப்பந்தம் சர்வாதிகாரிகளின் கைகளை வலுப்படுத்தி நிற்கிறது. இதில் நாம் வெற்றியடைய வேண்டுமென்றால், ரேடியோ பிரசங்கத்தால் மாத்திரம் வெற்றி பெற முடியாது. விளம்பரத்தால் வெற்றி யடைந்த காலமும் போய் விட்டது.

ஆகையால் வெற்றிக்கு வழக்கம் போல் ஒன்றே ஒன்றுதான்உண்டு. ஜன நாயக தேசங்களை ஒற்றுமைப் படுத்த வேண்டியது தான். அமெரிக்காவின் ஒத்தாசையைக் கைக்கொண்டு இப்பொழுது நேச நாடுகள் தரப்பில் யுத்தத்தில் கலந்து நிற்கும் தேசங்களை ஐக்கியப்படுத்தி, ஓர் புதிய யுத்த மந்திரி சபையை நிர்மாணம் செய்து, அரசியல்நடத்தினல் நமக்கு, ஜன நாயகத்துக்கு நிச்சயம் வெற்றி உண்டு. மேல் நாட்டு நாகரீகத்தை வேரோடு அழியாமல் காப்பாற்றலாம். இந்த ஐக்கிய பாவத்திற்கும் முயற்சிக்கும் முதல் படியாக நிற்பது இந்தியாவின் சுயேச்சை தான். ஏணியில் அடிப் படி இல்லாமல் மேல்படி எப்படி ஏறமுடியும்?

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சுப்பையா முதலியார், தலைமைப் பிரசங்கம் ஆரம்பித்தார், "வஞ்சிமா நகர்" பற்றிப் பேசியவர்களில் பலர் திக்கித் தடுமாறித் திண்டாடிப் பேசினார்கள். வேர்த்து விறு விறுத்தனரா என்று எனக்குத் தெரியாது. இப் பிரசங்கங்களை நான் திருச்சி ரேடியோ மூலம் தான் கேட்டேன். இங்கிலீஷ், தமிழ், ஸம்ஸ்கிருதம் கலந்த மணிப்ரவாள பாஷையைத் தமிழ் பாஷையாகத் தமிழ் மஹா நாட்டில், தமிழன்பர்கள் பேசித் தள்ளினார்கள். உண்மையிலேயே பேசித் தள்ளினார்கள். ஏனென்றால் அவர்கள் வாயிலிருந்து வார்த்தைகள் லேசில் வெளியே வர மறுத்தன. ஸ்ரீ. ராமலிங்கம் செட்டியார் "... யர் திராவிடர்" ப்ரச்னையைச் ... தூண்டிவிட்டு, ஆங்கிலம் கலந்த த... தமிழ்த் தொண்டு தன்னால் முடிந்த... புரிந்தார். இவ்விவாதத்தின் மு... காலம் ஒன்றும் சொல்வதற் கி... பது தான்.

"அதிகப்...

அதிகப் பிரஸங்கம்

"நெருக்கடியில் கவியரசு"

சென்னையில் யுத்த நிலை மிகுந்த கவலைக் கிடமாகி வருகிறது. இதை முன்னிட்டு வியாபாரிகள் விலைகளை ஏற்றி விட்டார்களாம். இடையில் சுமார் 6 மைல்களை வைத்துக் கொண்டு, இரு பத்திராதிபர்கள் கொடும் போர் புரிகிறார்கள். பேனாக்களை வாள் போல் வீசி "மை" வெள்ளமாக்கி வருகிறார்கள். "த்யாகராஜ கீர்த்தனங்களுக்காக யுத்த மாரம்பித்து, சூர்ப்பனகையையும் ஸ்ரீராமனையும் சந்தியிலிழுத்து, கடைசியாகக் கம்பனையும் வால்மீகியையும் சங்கடத்தில் மாட்டிவிட" ஆரம்பித் திருக்கிறார்கள்.

இவர்கள் யுத்தம் செய்வதில் எனக்கு ஆக்ஷேபணையே இல்லை. 'மை' வெள்ளத்தில் மாட்டிக் கொள்ளாதபடி ஐந்தாறு மைல் தள்ளி நின்று கொண்டு இந்த வேடிக்கையைப் பார்க்கத் தயார். ஆனால், 'சில்பஸ்ரீ' தன் கடைசி "இதழால்" கம்பனை வம்பு செய்ய ஆரம்பித் திருப்பதை நான் ஆக்ஷேபிக்கிறேன். "சூர்ப்பனகை"யாக இருக்கும் முதல் கட்டுரையில், ஸ்ரீ ராமனை சூர்ப்பனகை சந்திக்கும் கட்டத்தை "வால்மீகி" யிலிருந்து முதலில் ஸங்கிரஹப் படுத்தி எழுதிவிட்டுப் பிறகு அதே கட்டத்தை ஸம்வாத ரூபமாகக் "கம்பராமாயண" த்திலிருந்து கொடுத்திருக்கிறார்கள். கம்பன் எழுதிய இந்த ஸம்வாதத்தை "தற்கால நாடக மேடைகளிலே போல தர்க்கம் தொடங்குகிறது" என்று வர்ணித்து ஒரு கூத்து செய்கிறார் மாயக் கூத்தன். கம்பனின் காவ்யத்திற்கு இதை அடைமொழியாகக் கொடுத்து இவ்விதம் ... வம்பு செய்ததேன்? இக்கூற்று ... விஷம வியக்யானங் களுக்கு ... கொடுக்கிறது. (1) கம்பன் எழுதிய ...கம், தற்கால நாடகமேடைத் தர்க்...போல் இழிவாகவும் ஆபாஸமாக...றது. ஆனால் வால்மீகி எழுதி...திலில்லை. (2) கம்பன் எழுதி...ரஸ மிருக்கிறது. ஆனால், ... இல்லை, என்று வியாக்யானங்கள் செய்ய இடமாகிற தல்லவா? இம்மாதிரி எழுதியதின் நோக்கம் என்ன? அது எதுவாக இருந்தாலும் இம்மாதிரியான மாயக் கூத்துகள், யுத்தத்தில் 'சில்ப ஸ்ரீ' பத்திராதிபருக்குப் பக்க பலமாக இருப்பதற்குப் பதிலாக அவரைக் "கேலிக் கூத்தி"ற் குள்ளாக்கும்.

இவ்விதம் வீண் வம்பி லிழுக்கப் படும் தமிழ்க் கவி யரசன் கம்பனின் திருநாள் செட்டி நாட்டில் சிறப்பாக நடைபெற்றது. புலவர் பலர் கூடிக் கம்பனின் கவிதா ரஸத்தைச் சொற்பொழிவுகள் மூலம் பொழிந்தனர்களாம். "சங்குவும்" கம்பன் பாடல்களை ஊதி—மன்னிக்க வேண்டும்—பாடினாராம். இப்பாட்டின் எதிரொலி திருச்சி ரேடியோவரை எட்டி, அங்கிருந்து மற்ற விடங்களுக்கும் பரவினது. இந்த எதிரொலியின் மறு ஒலியே என்னைப் பரவசப் படுத்திய தென்றால், அதை நேராகக் கேட்டவர்கள் எவ்வளவு ஆனந்த மடைந்தார்கள் என்பதை அவர்கள் அடிக்கடி செய்த கரகோஷமே கோஷித்தது.

ஆனால் இந் நிகழ்ச்சிகளை, எல்லோரும் கேட்கக் கூடா தென்ற நோக்கத்தினால் போல, மிகவும் அசந்தர்ப்பமான வேளையில் திருச்சி ரேடியோ நடத்தியது. இல்லா விட்டால் இரவு எட்டு மணி சுமாருக்கு நடைபெற ஏற்பாடு செய்திருக்க மாட்டார்களா? இக்குறையை நீக்க, இந் நிகழ்ச்சிகளின் ஒலிப் பதிவை, மறுபடியும் ஒலி பரப்பும்படி ரேடியோ அதிகாரிகளை வேண்டிக் கொள்கிறேன். நான் வேண்டிக் கொள்வது போதாது. ரேடியோவிற்கு அநேகர் மனுப் போட்டால் தான் அதிகாரிகள் மறு முறை நடத்துவார்களாம். ஆகையால் தமிழன்பர்கள் அனைவரும் திருச்சி நிலையத்திற்கு எழுத வேண்டும்.

"Ladies and Gentle men" என்று திருப்பதி "தமிழ் மகா நாட்டில்" திரு

(5-ம் பக்கம் பார்க்க.)

இது தெரியுமா?

பால் ரேனாட்

பிரான்ஸில் முதல் தடவையாக பால் ரேனாட் என்பவர் பிரதம மந்திரியாக வந்திருக்கிறார். "'நியூஸ் கிரானிகிள்' நிருபராக நான் இருந்த காலத்தின் ஞாபகங்களுள், எனக்கு இவருடைய சிநேக பாவம் தான் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது" என்று ஜோஸ்லின் ஹென்னஸ்ஸி என்பவர் எழுதுகிறார்.

ரேனாட், தன்னையடுத்திருந்தவர்களுக்குத் தன்னைப்பற்றி ஒரு நல்ல அபிப்பிராயம் உண்டு பண்ணினார்; ஓர் உத்தம அரசியல் வாதியாக பிரகாசித்தார்.

இவரிடம் ஒரு அருங்குணம் இருக்கிறது. நெருக்கடிகளில் தன் பக்கத்தைப் பலப் படுத்திக் கொள்ளவாவது, தேர்தலில் வோட்டுக் காகவாவது தன் முறைகளை இவர் ஒரு போதும் வழுவவிட்டதில்லை. ஒரு பெருத்த மெஜாரிட்டி, தான் சொல்வதற்கு நேர்மாறாக எண்ணினாலும், சற்றும் தயங்காமல் தன் சொந்த அபிப்ராயத்தை வெளியிடச் சிறிதும் அஞ்சாதவர்.

அமோகமாக பணம் சம்பாதிக்கும் வக்கீல் (Barrister) பால் ரேனாட். நன்கு படித்தவர். புத்தி கூர்மையும், ரஸிக்குந் தன்மையும் வாய்ந்தவர். அழகாகச் சொற்பொழிவு ஆற்றுவதில் கை தேர்ந்தவர். அவர் பிரஸங்கம் கேவலம் ஜனங்களின் ஆக்ரோஷத்தைக் கிளப்பாமல், அவர்கள் அறிவை அதிகரிக்கிறது. சட்டங்கள் ஏற்படுத்துவதில் சமர்த்தர். தேசத்தின் செலவு, வருமானத்துக்கு மேல் இருக்கவே கூடாது என்பது அவருடைய சித்தாந்தம்.

பம்பாய் பிச்சைக் காரர்களின் யோகம்

பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் வருஷத்துக்கு ரூ 400க்கு மேல் சம்பாதிக்கிறார்களாம்.

இவர்களையடுத்து ஜீவிக்கும் "டௌட்டு"கள் பெரும்பணக்காரர்களாக ஆய்விட்டார்களாம். மாதம் ஒன்றுக்கு அவர்கள் ரூ. 300க்கு மேல் சம்பாதிப்பதாக தெரிகிறது. பம்பாயில் கணக்கிடப்பட்ட 12 வயதிற்குட்பட்ட பிச்சைகாரர்கள் எண்ணிக்கை சுமார் 2,000. அவர்களுடைய மொத்த வருஷ வருமானம் ரூ. $1\frac{1}{2}$ லக்ஷம் என்று கணக்கு போடப்பட்டிருக்கிறது.

பிச்சை கேட்பதற்கு வேண்டிய பயிற்சிகளைச் சிறுவர்களுக்கு நன்றாக சிலர் அளிக்கிறார்களாம். அதற்குக் காணிக்கையாகப்பிச்சை யெடுக்கும் சிறுவர்கள், நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கொணர்ந்து அவர்களிடம் கிருஷ்ணார்ப்பணம் என்று சமர்பித்து விடவேண்டுமாம். இப்படி பிச்சைக்கார சிறுவர்களைப் பழக்கி அவர்களை நம்பி ஜீவிக்கும் ஒரு "டௌட்"டின் வருமானம் ரூ. 300 க்கு மேல் இருக்கிறது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். சிறுவர் ரக்ஷக சபையார், இதை ஒழிக்க முயற்சி செய்து வருகிறார்களாம்.

யுத்தப் பட்டி

பிரான்ஸிலுள்ள 200, 000 பிரிட்டிஷ் துருப்புகளுக்குத் தினசரி 500 டன் உணவுப் பொருள் போகவேண்டும்.

போன வருஷத்து நவம்பர் — டிஸம்பரில் பல தொழில்களில் உள்ள 400, 000 பிரிட்டிஷ் தொழிலாளர் அதிகச் சம்பளம் பெற்றனர்—யுத்தகால விலை யதிகரிப்பையும், தொழி லபிவிருத்தியையும் உத்தேசித்து.

தரைப் படையில் ஒரு போர் வீரனுக்கு வருஷாந்திரச் செலவு £ 600; கடற் படையில் £ 650; ஆகாயப் படையில் £ 2, 500.

உதிர்ந்த மணிகள்

நாம் முன் பல சமயங்களில் கெடுத்துக் கொண்டோம். சைனு, அபிஸீனியா, ஸ்பெயின், செக்கோஸ்லோவேகியா, ஆகிய தேசங்கள் சம்பந்தப்பட்ட வரையில் நாம் நடந்து கொண்டதன் பலனைத்தான் இப்பொழுது அனுபவிக்கிறோம். போலிஷ் மக்களை ஆபத்துக் காலத்தில், துண்டுப் பிரசுரங்களால் மாத்திரமல்லாமல், இன்னும் தீவிரமான முயற்சிகளால் உதவி செய்யாததன் குற்றம்தான் இப்பொழுது நாம் அனுபவிக்கும் கஷ்டத்துக்குக் காரணம். இப்பொழுது சர்க்காரை நடத்திவரும் தலைவர்களை இனிமேலும் நடத்த இடங்கொடுத்தோமானால், இதையும் அனுபவிக்க வேண்டும்; இன்னும் கூடவும் அதிகமாக அனுபவிக்க வேண்டி வரும். சேம்பர்லினின் தோல்விக்குக் கணக்கு வழக்கில்லை.

எச். என். ப்ரேயில்ஸ்பார்ட்

* * *

வரப்போகும் தலைமுறைக்கு நல்ல பயிற்சி அளித்து, அவர்களுக்கு, தங்கள் தங்கள் காரியங்களை சரிவரச் செய்து கொள்ள வேண்டிய சில அம்சங்களை அவர்களிடம் இருக்கும்படி செய்யவேண்டிய காலம் இப்பொழுதுதான் வாய்த்திருக்கிறது. மனித வாழ்க்கையின் சரித்திரத்தில் இதுவரையில் இதுபோன்ற சர்தர்ப்பம் ஏற்படவில்லை. வெல்ஸ் சமீபத்தில் வெளியிட்ட 'புதிய உலக ஏற்பாடு' என்ற புத்தகத்தில், "நாம் அதிருப்தியடைந்த பல யுவர்களை எதிரிட்டு நிற்கிறோம். அவர்களுடைய இயற்கை பேராசையாலும், அவசரத்தாலும், எந்த விதத்தில் தொந்திரவு கொடுக்கலாம் என்று தெரிந்த மாத்திரத்தில் அவர்கள் விஷமம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள்" என்று கூறுகிறார். அவர்களிடத்தில், சக்தி, அதிருப்தி, எமாற்றம் மூன்றும் ஒருங்கே குடி இருக்கின்றன. இப்பொழுது இருக்கும் சமுதாயம் கெடாமல் ஓர் புதிய நல்ல நிலைமைக்கு வரவேண்டுமென்றால், வரப்போகும் தலைமுறையின் அறிவும் சக்தி அதிகரிக்க வேண்டும்; அவர்களின் மனப் பான்மை நல்லதாக மாற வேண்டும்.

ஸர். மிர்ஸா இஸ்மெய்ல்

* * *

ஜின்னுவும் முஸ்லிம் லீகும் வெளியிடும் இரு தேசத் தீர்மானம் நடைமுறைக்கு நேர் விரோதமானது. தேசிய உணர்ச்சியே இல்லாதிருப்பவர்களால் தான் அத்தீர்மானம் வெளியிடப்படும். இதுபோன்ற அநியாயத் தீர்மானங்களை நான் கடைசி வரையில் எதிர்க்கப்போகிறேன்.

ஸர். சோதுராம்

* * *

வெற்றி சமரஸத்தைக் கொண்டு வராது. அதுவே வேறொரு யுத்தத்துக்கு வித்தாக மாறலாம்.

ஸ்ரீமதி சரோஜினி நாயுடு

* * *

நாம் சுயேச்சை யடையும் வரையில் நான் ஜீவித்திருந்தால், நூல் நூற்பதையே ஓர் முக்கிய வேலையாக செய்வேன். ஆனால் நாம் சுயேச்சை அடையும்போது என் தலைமை நீங்கிவிடுகிறது. சுயேச்சை அடைந்த நீங்கள் உங்களுக்கு வேண்டிய தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

காந்திஜி

* * *

முஸ்லிம் லீகின் லாகூர் கூட்டத்தில் ஆதரிக்கப்பட்டது ஜின்னுவின் அற்பாயுள் திட்டம். அத்திட்டத்தை எந்த முஸ்லிமும் ஆதரிக்கமாட்டார். நிச்சயமாக இந்து இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். முஸ்லிம் பெரியோர்கள் முன் வந்து ஜின்னுவிடம் "போதும், போதும்; அதற்குமேல் வேண்டாம்," என்று கூற இதுவே சமயம்.

எஸ். ஸத்தியமூர்த்தி

"ஹெம் ஹோல்ட்ஸ்"

[ஆர். கே. விசுவநாதன், எம். ஏ., அண்ணாமலை நகர்]

சென்ற நூற்றாண்டிலிருந்த பிரபல விஞ்ஞானிகளில் ஜெர்மன் தேசத்து ஹெம்ஹோல்ட்ஸ் என்ற பெரியார் ஒருவர். இளம்வயதிலேயே பௌதிக ஆராய்ச்சியிலிருந்த இவரது ஊக்கத்தையும் திறமையையும் கண்டு எல்லோரும் மெச்சினார்கள். அவர் வைத்தியத் தொழிலுக்காகப் படித்தபோதிலும், அவருடைய அறிவு விஞ்ஞானத்தின் எல்லாத் துறைகளிலும் சோபித்தது. ஒலி, ஒளி மின்சார வியல்களில் நூதனமாக அனேக விஷயங்களை ஆராய்ந்து எடுத்துக்காட்டியிருக்கிறார். நிற்க, விஞ்ஞானத் துறைகளில் மிகுந்த அளவில் பலரைக்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தும் முறையையும் அம்முடிவுகளைக் கொண்டு பொது ஜனங்களின் நலனுக்குப் பயன்படுத்தக்கூடிய வழியையும் ஜெர்மனி தேசத்திற்கு மட்டும் அன்றி, மற்ற தேசங்களுக்கும் முதன் முதலில் எடுத்துக்காட்டியவர் இவர்தான். தவிர, பொது ஜனங்களுக்கு இதைப் பற்றிப் பிரசங்கம் செய்வதில் மிகுந்த ஆற்றல் வாய்ந்தவர். படிப்பு முடிந்ததும் ராணுவத்தில் இரண வைத்தியராகச் சிறிதுகாலம் கழித்தார். அதனின்று விலகிச் சொற்ப காலம் வைத்திய ஆசிரியராக இருந்தார். பின்பு பெர்லின் சர்வ கலாசாலையில் பௌதிக நூலாசிரியராக நியமிக்கப்பட்டார். இருபது வருஷகாலம் இவ்வேலையைப் பார்த்து வந்தார். கடைசியில் விஞ்ஞான ஆராய்ச்சிக்குத் தனியே அந்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள நிலயத்திற்கு நிர்வாகியாகச் சில ஆண்டுகளிருந்து காலமானார்.

இவரது ஆராய்ச்சிகள் ஒவ்வொன்றும் முக்கியமான போதிலும், அதில் சில வற்றை மட்டும் இவ்விடம் குறிப்பிடுவோம். கணிதத்தில் சொற்ப பயிற்சியே இருந்தும் இவர் நீர்ச்சுழல்களின் சித்தாந்தத்தை (theory of vortex rings) விளக்கியது எல்லோரையும் வியக்கச் செய்தது. இவர் வைத்திய ஆசிரியராக இருந்தபொழுது கண்ணின் அக்ஷிப் படலத்தைப் பரிசோதிப்பதற்குண்டான ஒரு கருவியைக் (opthalmoscope) கண்டு பிடித்தார். மின்காந்த அலைகளை முதன் முதலில் உண்டாக்கிக் காட்டிய பெருமை "ஹெர்ட்ஸ்" என்ற பெரியாருக்கே உரித்தானபோதிலும், அதில் ஒரு பகுதி இவரைச் சேரவேண்டியது. ஏனெனில் "ஹெர்ட்ஸ்" என்பவர் இவர் கீழ்தான் அவ்வாராய்ச்சியை நடத்தினர். அவ்வப்போது அவருக்கு ஊக்கமும், உதவியும் இவர்தான் அளித்துவந்தார். ஆகையினால் ரேடியோ மூலம் சமாசாரத்தை அயல் நாடுகளுக்கு அனுப்பக்கூடும் என்று முதலில் காட்டிய பெருமையில் இவருக்கும் பெரும் பங்கு உண்டென்று சொல்வது மிகையாகாது. தவிர, இவர் அநேக கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார். அவற்றில் ஒளி சம்பந்தமாகவும் ஒலி சம்பந்தமாகவும் இயற்றிய "பார்வையின் தத்துவம்", "ஒலியின்உணர்ச்சி" என்ற இரண்டு பெரிய நூல்கள் குறிப்பிடத் தக்கவை. ஒலி சம்பந்தமாக அநேக ஆராய்ச்சிகளை நடத்தி, அதன் முடிவுகளை இரண்டாவது புத்தகத்தில் விளக்கியுள்ளார். சங்கீதத்தில் மிகுந்த தேர்ச்சி பெற்றதினால் அநேக நுட்பமான விஷயங்களை அறிந்து எடுத்துக் காட்டியிருக்கிறார்.

ஒரே சுருதியும், முழக்கமும் கொண்ட பல ஒலிகள் பல வேறு கருவிகளிலிருந்து தோன்றும் போது, அவற்றை வேறுபடுத்தி நம்முடைய காது அறிவதை யாவரும் உணர்வார்கள். புல்லாங் குழலின் ஓசையும் மனிதனது குரலும் ஒரே சுருதியையும், முழக்கத்தையும் கொண்டிருந்தாலும் வேறு படுகின்றன. இவ்வேறுபாட்டிற்குக் காரணமாயுள்ள ஒலியின் சிறப்பியல்புக்குப் பண்பு (quality) என்று பெயர். பண்பு ஒவ்வொரு வாத்தியத்திலும் ஒவ்வொரு விதமாக இருப்பதற்குக் காரணத்தை முதன் முதலில் கண்டறிந்து காட்டியவர் இவரே யாவர். ஒலிகளெல்

உதிர்ந்த மணிகள்

நாம் முன் பல சமயங்களில் கெடுத்துக் கொண்டோம். சைனு, அபிஸீனியா, ஸ்பெயின், செக்கோஸ் லோவேகியா, ஆகிய தேசங்கள் சம்பந்தப்பட்ட வரையில் நாம் நடந்து கொண்டதன் பலனைத்தான் இப்பொழுது அனுபவிக்கிறோம். போலிஷ் மக்களை ஆபத்துக் காலத்தில், துண்டுப் பிரசுரங்களால் மாத்திரமல்லாமல், இன்னும் தீவிரமான முயற்சிகளால் உதவி செய்யாததன் குற்றம்தான் இப்பொழுது நாம் அனுபவிக்கும் கஷ்டத்துக்குக் காரணம். இப்பொழுது சர்க்காரை நடத்திவரும் தலைவர்களை இனிமேலும் நடத்த இடங்கொடுத்தோமானல், இதையும் அனுபவிக்க வேண்டும்; இன்னும் கூடவும் அதிகமாக அனுபவிக்க வேண்டி வரும். சேம்பர்லினின் தோல்விக்குக் கணக்கு வழக்கில்லை.

எச். என். ப்ரேயில்ஸ்பார்ட்

* * *

வரப்போகும் தலைமுறைக்கு நல்ல பயிற்சி அளித்து, அவர்களுக்கு, தங்கள் தங்கள் காரியங்களை சரிவரச் செய்து கொள்ள வேண்டிய சில அம்சங்களை அவர்களிடம் இருக்கும்படி செய்யவேண்டிய காலம் இப்பொழுதுதான் வாய்த்திருக்கிறது. மனித வாழ்க்கையின் சரித்திரத்தில் இதுவரையில் இதுபோன்ற சர்தர்ப்பம் ஏற்படவில்லை. வெல்ஸ் சமீபத்தில் வெளியிட்ட 'புதிய உலக ஏற்பாடு' என்ற புத்தகத்தில், "நாம் அதிருப்தியடைந்த பல யுவர்களை எதிரிட்டு நிற்கிறோம். அவர்களுடைய இயற்கை பேராசையாலும், அவசரத்தாலும், எந்த விதத்தில் தொந்திரவு கொடுக்கலாம் என்று தெரிந்த மாத்திரத்தில் அவர்கள் விஷமம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள்" என்று கூறுகிறார். அவர்களிடத்தில், சக்தி, அதிருப்தி, ஏமாற்றம் மூன்றும் ஒருங்கே ..டி இருக்கின்றன. இப்பொழுது இருக்கும் சமுதாயம் கெடாமல் ஓர் புதிய நல்ல நிலைமைக்கு வரவேண்டுமென்றால், வரப்போகும் தலைமுறையின் அறியும் சக்தி அதிகரிக்க வேண்டும்; அவர்களின் மனப் பான்மை நல்லதாக மாற வேண்டும்.

ஸர். மிர்ஸா இஸ்மெய்ல்

* * *

ஜின்னவும் முஸ்லிம் லீகும் வெளியிடும் இரு தேசத் தீர்மானம் நடைமுறைக்கு நேர் விரோதமானது. தேசிய உணர்ச்சியே இல்லாதிருப்பவர்களால் தான் அத்தீர்மானம் வெளியிடப்படும். இதுபோன்ற அநியாயத் தீர்மானங்களை நான் கடைசி வரையில் எதிர்க்கப்போகிறேன்.

ஸர். சோதுராம்

* * *

வெற்றி சமரஸத்தைக் கொண்டு வராது. அதுவே வேருெரு யுத்தத்துக்கு வித்தாக மாறலாம்.

ஸ்ரீமதி சரோஜினி நாயுடு

* * *

நாம் சுயேச்சை யடையும் வரையில் நான் ஜீவித்திருந்தால், நூல் நூற்பதையே ஓர் முக்கிய வேலையாக செய்வேன். ஆனல் நாம் சுயேச்சை அடையும்போது என் தலைமை நீங்கிவிடுகிறது. சுயேச்சை அடைந்த நீங்கள் உங்களுக்கு வேண்டிய தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

காந்திஜி

* * *

முஸ்லிம் லீகின் லாகூர் கூட்டத்தில் ஆதரிக்கப்பட்டது ஜின்னவின் அற்பாயுள் திட்டம். அத்திட்டத்தை எந்த முஸ்லிமும் ஆதரிக்கமாட்டார். நிச்சயமாக இந்த இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். முஸ்லிம் பெரியோர்கள் முன் வந்து ஜின்னவிடம் "போதும், போதும்; அதற்குமேல் வேண்டாம்," என்று கூற இதுவே சமயம்.

ஏஸ். ஸத்தியமூர்த்தி

"ஹெம் ஹோல்ட்ஸ்"

[ஆர். கே. விசுவநாதன், எம். ஏ., அண்ணாமலை நகர்]

சென்ற நூற்றாண்டிலிருந்த பிரபல விஞ்ஞானிகளில் ஜெர்மன் தேசத்து ஹெம்ஹோல்ட்ஸ் என்ற பெரியார் ஒருவர். இளம்வயதிலேயே பௌதிக ஆராய்ச்சியிலிருந்த இவரது ஊக்கத்தையும் திறமையையும் கண்டு எல்லோரும் மெச்சினார்கள். அவர் வைத்தியத் தொழிலுக்காகப் படித்தபோதிலும், அவருடைய அறிவு விஞ்ஞானத்தின் எல்லாத் துறைகளிலும் சோபித்தது. ஒலி, ஒளி மின்சார வியல்களில் நூதனமாக அனேக விஷயங்களை ஆராய்ந்து எடுத்துக்காட்டியிருக்கிறார். நிற்க, விஞ்ஞானத் துறைகளில் மிகுந்த அளவில் பலரைக்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தும் முறையையும் அம்முடிவுகளைக் கொண்டு பொது ஜனங்களின் நலனுக்குப் பயன்படுத்தக்கூடிய வழியையும் ஜெர்மனி தேசத்திற்கு மட்டும் அன்றி, மற்ற தேசங்களுக்கும் முதன் முதலில் எடுத்துக்காட்டியவர் இவர்தான். தவிர, பொது ஜனங்களுக்கு இதைப் பற்றிப் பிரசங்கம் செய்வதில் மிகுந்த ஆற்றல் வாய்ந்தவர். படிப்பு முடிந்ததும் ராணுவத்தில் இரண வைத்தியராகச் சிறிதுகாலம் கழித்தார். அதனின்று விலகிச் சொற்ப காலம் வைத்திய ஆசிரியராக இருந்தார். பின்பு பெர்லின் சர்வகலாசாலையில் பௌதிக நூலாசிரியராக நியமிக்கப்பட்டார். இருபது வருஷகாலம் இவ்வேலையைப் பார்த்து வந்தார். கடைசியில் விஞ்ஞான ஆராய்ச்சிக்குத் தனியே அந்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள நிலயத்திற்கு நிர்வாகியாகச் சில ஆண்டுகளிருந்து காலமானார்.

இவரது ஆராய்ச்சிகள் ஒவ்வொன்றும் முக்கியமான போதிலும், அதில் சில வற்றை மட்டும் இவ்விடம் குறிப்பிடுவோம். கணிதத்தில் சொற்ப பயிற்சியே இருந்தும் இவர் நீர்ச்சுழல்களின் சித்தாந்தத்தை (theory of vortex rings) விளக்கியது எல்லோரையும் வியக்கச் செய்தது. இவர் வைத்திய ஆசிரியராக இருந்தபொழுது கண்ணின் அக்ஷிப் படலத்தைப் பரிசோதிப்பதற்குண்டான ஒரு கருவியைக் (opthalmoscope) கண்டுபிடித்தார். மின்காந்த அலைகளை முதன் முதலில் உண்டாக்கிக் காட்டிய பெருமை "ஹெர்ட்ஸ்" என்ற பெரியாருக்கே உரித்தானபோதிலும், அதில் ஒரு பகுதி இவரைச் சேரவேண்டியது. ஏனெனில் "ஹெர்ட்ஸ்" என்பவர் இவர் கீழ்தான் அவ்வாராய்ச்சியை நடத்தினர். அவ்வப்போது அவருக்கு ஊக்கமும், உதவியும் இவர்தான் அளித்துவந்தார். ஆகையினால் ரேடியோ மூலம் சமாசாரத்தை அயல் நாடுகளுக்கு அனுப்பக்கூடும் என்று முதலில் காட்டிய பெருமையில் இவருக்கும் பெரும் பங்கு உண்டென்று சொல்வது மிகையாகாது. தவிர, இவர் அநேக கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார். அவற்றில் ஒளி சம்பந்தமாகவும் ஒலி சம்பந்தமாகவும் இயற்றிய "பார்வையின் தத்துவம்", "ஒலியின் உணர்ச்சி" என்ற இரண்டு பெரிய நூல்கள் குறிப்பிடத் தக்கவை. ஒலி சம்பந்தமாக அநேக ஆராய்ச்சிகளை நடத்தி, அதன் முடிவுகளை இரண்டாவது புத்தகத்தில் விளக்கியுள்ளார். சங்கீதத்தில் மிகுந்த தேர்ச்சி பெற்றதினால் அநேக நுட்பமான விஷயங்களை அறிந்து எடுத்துக் காட்டியிருக்கிறார்.

ஒரே சுருதியும், முழக்கமும் கொண்ட பல ஒலிகள் பல வேறு கருவிகளிலிருந்து தோன்றும் போது, அவற்றை வேறுபடுத்தி நம்முடைய காது அறிவதை யாவரும் உணர்வார்கள். புல்லாங் குழலின் ஓசையும் மனிதனது குரலும் ஒரே சுருதியையும், முழக்கத்தையும் கொண்டிருந்தாலும் வேறு படுகின்றன. இவ்வேறுபாட்டிற்குக் காரணமாயுள்ள ஒலியின் சிறப்பியல்புக்குப் பண்பு (quality) என்று பெயர். பண்பு ஒவ்வொரு வாத்தியத்திலும் ஒவ்வொரு விதமாக இருப்பதற்குக் காரணத்தை முதன் முதலில் கண்டறிந்து காட்டியவர் இவரே யாவர். ஒலிகளெல்

நான் பார்த்தேன். எல்லாருமாச் சிரிச்சா. அவ்வளவு தான்."

"அதென்ன சார் எழுதி யிருந்தது?"

"நான்தான் சொன்னேனே, 'என்னத் தையோ அந்த முன்ஸீப் பெண்ணையும் நம்மண வின்னனையும் பத்தித்தான்! ஆருக்குப் பிடிக்கிறது?"

* * *

"ஸார், மஹாத்மா காந்தி என்ன சொல்லறுர் தெரியுமோ?........."

"ஏன் பயமுறுத்தரேள், சொல்லி டுமே!"

"உயர்தரப் படிப்பு வேண்டா மென்று தான் சொல்லறுர்."

"அதுக்கு நீரென்ன சொல்லறேள்?"

"காந்தி யடிகள் சொல்லறது சரிதான். ஸந்தேக மென்ன?"

"பின்னே உம்முடைய வேலையை ராஜீ நாமா பண்ணிட்டுப்போம்."

"அது என்ன ஓய்! நீரென்ன அண்ணு வியா!"

* * *

"நான் தான் சொல்லிக்கொண்டே யிருந்தேனே, என்னைக் கேலி பண் ணேளே. எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார் ஒத் தருக்கும் பயப்பட மாட்டாருன்னு சொல்லலையா. ஆனந்த விகடன் கோபா வேசத்தையும் பொருள் படுத்தாது தன் மனத்தி லிருப்பதைச் சொல்லுரே!" என்னதா னிருந்தாலும் இந்தக் கதர்ப் பேச்சு பைத்திய மென்று சொல்ல லாமா?"

"ஏன் சொல்லப் படாதையா?"

"உம்முடன் பேசத் தயாரில்லை அய்யா!"

* * *

இருவர் இரகசியமாக குசு குசு வென்று பேசிக் கொள்ளுகிறுர்கள்.

"ஏண்டா சோமு, ராமு ஏண்டா இங்க வரதில்லே?"

"இங்கே நாம் தாறுமாருய்ப் பேசி டயத்தை வேஸ்ட் பண்ணிண்டுருக்கோ மாம். அவன் சிலாக்கியமான மனஸுக் குப் பிடிக்கல்லையாம். நம்மோடே டூச் சண்டை போட்டுட்டான்!"

"அது போகட்டும்; அவன் புது கா ரைப் பார்த்தையோ!"

"அதுவும் காரணம்தான். அதின் மூஞ்சியையே பார்த்துண்டிருக்கான் ஆனு வாஸ்தவம் தான், அவன் மிஸ் ஸஸ்ஸை விட கார் அழகுதான்."

* * *

"ஏன் சிரிக்கரேள்?"

"இல்லே, நினைப்பு வந்தது."

"என்ன கேலி யிது!"

"நேத்திக்கு பரீக்ஷை நடந்துதே; நீங் களென்ன, மிஸ். ஸாவித்திரி பக்கமே மண்டையைத் திருப்பிண்டிருந்தேளே. கழுத்துப் பிடிச்சுண்டு கிடிச்சுண்டுடப் போறதேன்னு கவலையா யிருந்தது. ஆத் துக்குப்போய் ஸாவித்திரியின் புடவை பார்டரைப் போல் படம் வரைந்தேளாமே, வாஸ்தவம் தானு?"

"சீ, சீ, என்ன பேச்சு. மிஸ் ஸாவித் திரி களங்கமற்ற பெண். பார்டரை மட் டும் படம் போடுவானேன்? அவளழகு சொல்ல முடியாதது. எவன் மனதையும் கவரும்......ஆனல்......"

"அதென்னய்யா......ஆனல்!"

"ஆனல் கண்டிராவி தலை எற்கனவேயே நிரைக்க வாரம்பிச்சுடுத்து.....அதை நினைத்துத் தான் நான் பெருமூச்சு விட் டுக் கொண்டிருந்தேன்."

* * *

"அட செக்ரிடரி, அதென்னடா காபி? ராஜினமா செய்ய வேண்டியது தான் போலிருக்கிறது."

"செய்யுமே ஓய், ஆருக்கென்ன! குடி முழிகிப் போயிடாது."

"கோச்சுக்காதையும் ஓய். பியூனைக் கூப்பிட்டு மண்ணெண்ணையைப் பாலில் கொட்டினையான்னு கேளும்."

இதற்குள் நான்கு மாணவர் நுழைந்து ஓரத்தில் உட்கார்ந்திருக்கும் பூகோள உபாத்தியாயரிடம் செல்லுகிறுர்கள். மாணுக்கர்களைக் கண்டதும் எல்லா உபாத்

(16-ம் பக்கம் பார்க்க)

வாழ்க்கைச் சுடர்

"ஜ்யோதி"

கோபால் பி. ஏ. பாஸ் செய்து மூன்று ஆண்டுகள் ஆயின. ஆனால் வேலைமட்டும் கிடைக்கவில்லை. வேலைதான் கிடைக்கவில்லையே என்று அவன் சென்னையை விட்டுத் தன் கிராமத்திற்குச் சென்று விடவில்லை. கலியாணமும் ஆகாமலிருக்கவில்லை. சென்னையிலேயேதான் இருந்தான். மாமனாரிட மிருந்து மாதம் செலவிற்கு இருபத்தைந்து ரூபாய் வந்துக் கொண்டிருந்தது. இவன் ஓர் ஹோட்டலில் ஓர் அறையை வாங்கிக்கொண்டு வசித்து வந்தான். அதே ஹோட்டலில் சாப்பிட்டும் வந்தான்.

சென்னையில் இருபத்தைந்து ரூபாயில் கண்ணியமான வாழ்க்கை நடத்துவது சிரமம்தான். ஆனால் இவன் எப்படி நடத்திவந்தான் என்பதும் ஓர் மூடுமந்திரம் தான். கோபால் சுமாராகப் பாடக்கூடியவன். நல்ல சாரீரமும் இருந்தது. ஆகையால் மாதம் ஒரு முறை அல்லது இரு முறை ரேடியோவில் பாடும் சந்தர்ப்பம் கிடைக்கும். மேலும் நல்ல சமயங்களில் தனது சிநேகிதர்கள் வீட்டிலும் பெரிய மனிதர்கள் வீட்டிலும் கச்சேரி நடத்துவான். இவைகளில் அவனுக்கு மேற்செலவிற்குப் பணம் கிடைத்துவிடும். ஆகையால் ஒருவிதமாக கோபால் சென்னையில் காலத்தைக் கழித்து வந்தான். ஆனால், இதைப்போல் எத்தனை நாட்கள் நடத்தமுடியும் என்ற கவலை அவனைப் பிடித்து வாட்டி வந்தது.

ஒரு நாள் சாயங்கிரம் சுமார் ஐந்துமணியிருக்கும். 'ரமா கேப்' வாசலில் ஓர் மோட்டார்கார் வந்து நின்றது. அதிலிருந்து நாற்பது வயதுடைய ஓர் ஆடவர் இறங்கி,புரப்ரைட்டரை "மிஸ்டர் கோபால் இருக்கும் கேப் இதுதானே? அவர் ரூம் நம்பர் என்ன?" என்று படபடவென்று கேட்டார், பட டைரக்டர் சாம்பு அய்யர். "பாடகர்தானே! அவர் நம்பர் அஞ்சரூம்" என்று கூரையை நோக்கியவண்ணம் சொன்னார் புரொப்ரைடர். ஏனெனில் வாயில் புகையிலை.

கோபால் அப்பொழுது ஏதோ கவலையுடன் உட்கார்ந்திருந்தான். டைரக்டர் குப்பு அய்யர் உள்ளே நுழைந்து அங்கு போடப்பட்டிருந்த நாற்காலியில் தானாகவே அமர்ந்துவிட்டார். ஸ்தூல சரீரம். 'என்ன, ஸார், நீங்கள் தானே மிஸ்டர் கோபால்? போனமாதம் 27-ம் தேதி காம்போதி ராகத்தில் ரேடியோவிலே வெளுத்த ஆசாமி நீர்தானே?" என்று ஆவலுடன் விசாரித்தார்.

"ஆமாம், நான்தான் அது. அதற்கென்னவந்தது இப்பொழுது" என்று ஒரு விதமாகப் பதில் சொன்னான்.

இவ்விதம் அன்று சம்பாஷணை தொடங்கி சாயங்காலம் ஆறரை மணிக்கு, கோபால், பிலிம் டைரக்டர் குப்பு அய்யர் எடுக்கப்போகும் 'ராஜா ரமணி' யென்ற படத்தில் கதாநாயகனாக நடிப்பதான சம்மதத்துடன் முடிவிற்கு வந்தது.

* * *

மத்தியானவேளை. மோகனூரில் ராஜம் அய்யர் தன் வீட்டின் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு அருகில் செல்லப் பெட்டியிலிருந்து தாம்பூலத்தைத் தரித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது தபால்காரன் அவரிடம் ஓர் கவரைக் கொடுத்து விட்டுப்போனான். அதேசமயத்தில் ஏதோ வேலையாக வாயிற்புறம் வந்த அவருடைய சிமந்த புத்திரி ஜானகி அக்கடிதத்தை உற்று நோக்கினாள். அவ்வளவுதான்! அவளுக்குக் கடிதம் எங்கிருந்து வந்திருக்கிறது என்பது புரிந்துவிட்டது. சந்தோஷம் சொல்லி முடியாது "அம்மா........ அம்மா.....:" என்று கத்திக்கொண்டே உள்ளே ஓடினாள். கடிதத்தைப் பிரித்துக் கொண்டிருந்த ராஜம் அய்யர் திடுக்கிட்டுப் போனார்.

அடுக்குள்ளில் ஏதோவொரு வேலையில் மூனைந்திருந்த ஜானகியின் தாயாரும் திடுக்கிட்டுப்போய், "என்னடி! என்ன?" என்று அலறிப் புடைத்துக்கொண்டே ஓடிவந்தாள்.

"ஒண்ணு மில்லையம்மா......உம்...... உம். அவரண்டையிருந்து கடுதாசி வந்திருக்குடி" என்று கையைப் பிசைந்துகொண்டே சொன்னாள். ஏனெனில், வெட்கமும் பயமும் அவள் உள்ளத்தில் ஏககாலத்தில் குடி கொண்டிருந்தன.

"இவ்வளவு......தானே......" என்று சொல்லிக்கொண்டே ஒரு பெரு மூச்சு, விட்டாள் தாயார்.

"அடியே" என்று புருஷக்குரல் இடியைப்போல் உள்ளே வந்தது. ஜானகியின் தாயார் தன் புடவையைச் சரிப்படுத்திக்கொண்டு வாசலில்போய் வாசற்படியண்டை அடக்க ஒடுக்கமாய் நின்றாள். அவள் வந்த குறிப்பை யுணர்ந்த ராஜம் அய்யர், "மாப்பிள்ளை எழுதியிருக்காண்டி அவளுக்கு" என்றார்.

ஜானகி, பாவம்! தனது கணவன் இந்த மாதம் வரவேண்டுமே, இன்னும் வரவில்லையே என்ற ஏக்கம் அவளை வாட்டிற்று! வதைத்தது! ஒவ்வொரு நாளும் எதிர்பார்ப்பாள். ஆனால் ஒவ்வொரு நாளும் ஏமாற்றம்!

அன்று தினந்தோறும் எடுத்துச் செல்லும் கற்பூரத்தைக் காட்டிலும் அதிகமாகவே எடுத்து வந்திருந்தாள். ஸ்நானம் செய்தாள். நெற்றிக்கு திலகமிட்டுக் கொண்டாள். பூசை செய்து விட்டு "காவிரி அம்மனே! நீ இவ்வளவு வேட்கைத் தாகத்துடன் உன் கணவரை நாடி செல்லுகிறாயே! அதேபோல் ஏழை எனக்கு எவ்வளவு இருக்கும்? உனக்கு இப்பொழுது எவ்வளவு குதூகலம்! தாகம்! நான் என்று உன்னைப்போல் களிப்பெய்துவது? என்று என் தாகத்தைத் தணித்துக் கொள்ளுவது? என்று நான் இத்துயரற்று என் ஆருயிர்க் கணவரைக் கண்டு இன்புற்று வாழ்வது? ஆம்! நான் உன்னைப்போல் சுயேச்சை உடையவளாயிருந்தால், என் கணவரை நாடிச் செல்வேன். அம்மையே! எனது நிலைமை உனக்குத் தெரியாதா? எனது பெற்றோர்கள் எனக்குச் சிறிது அளவுதான் சுதந்திரம் கொடுத்திருக்கிறார்கள் என்பது நீ அறியாயோ? என் மேல் கிருபை செய்யலாகாதோ? நீ மனம் வைத்தால் எல்லாம் நடக்கும். என்னை என் கணவருடன் கூட்டி விடு அம்பிகையே! அம்மனே! காவிரி தேவியே!" என்று தன் மனத்திற்குள் பலவாறு புலம்பி யழுதுவிட்டு, சூடத்தை ஏற்றி ஆரத்தி எடுத்து விட்டு வெற்றிலையில் வைத்து ஆற்றில் மிதக்க விட்டாள்.

சில வினாடிகள் சென்றன. ஜானகி ஆற்றிலிருந்தபடியே பார்த்தாள். "என் எண்ணம் நிறைவேறிவிடும் போலிருக்கிறதே" என்று சற்று தலையைத் தூக்கிப் பார்த்தாள். என்ன வேகம்! அவளால் பார்க்க முடியவில்லை. சிறிது யோசனை செய்தாள். கடைசியில் ஓர் முடிவிற்கு வந்தாள். அதாவது ஆற்றின் கரையோரத்திலுள்ள ஒரு மரத்தில் ஏறிப் பார்ப்பது என்பதே. ஆனால் அப்படிச் செய்வதில் ஓர் இடையூறு இருந்தது. அது என்னவெனில் ஒரு கல்யாணமான பெண் குரங்கு மாதிரி மரத்தின் மேல் ஏறுவதா என்ற எண்ணமே இருந்தும்கூடப் பரீக்ஷையில் தேறினேமோ இல்லையோ என்பதைப் பார்க்க அவள் மனம் விரும்பிற்று. ஆகையால் ஐந்து ஆறு மரங்களுக்கு அப்பாலுள்ள ஒரு மரத்தில் ஏறிப் பார்க்க ஓடினாள்.

"வேலையாகி விட்டதாம் ஆறு மாதம் தான் வேலை பார்க்க வேண்டுமாம். நல்ல சம்பளம் தருகிறார்களாம். ஆறு மாதமான உடன் ஊருக்கு வருகிறானாம்" என்றார்.

இதை உள்ளேயிருந்து கேட்டுக் கொண்டிருந்த ஜானகி புளகாங்கிதமடைந்தாள். ஆனால் ஆ...ஆ...று மாதம் அல்லவா பொறுத்திருக்க வேண்டும்.

* * *

அன்றுதான் 'ராஜா ரமணி' என்ற படத்தின் ஆரம்ப தினக்கொண்டாட்டம் ஸ்டூடியோ முழுவதும் ஒரே பர பரப்புட

னிருந்தது. மாலை மணி ஐந்து அடித்து விட்டது. பெரிய பட முதலாளிகளும், பிரசித்தி பெற்ற டைரக்டர்களும், பிரபல நடிகர்களும், நடிகைகளும் ஒருங்கு கூடியிருந்தனர். டைரக்டர் குப்பு அய்யர் தன் இருப்பிடத்தை விட்டு எழுந்து "சகோதர! சகோதரிகளே!! இன்று நான் எடுக்கப்போகும் ராஜா ரமணி என்ற படத்தின் ஆரம்ப தினம் என்பது உங்களுக்குத் தெரியும். இதுவரை நீங்கள் வெள்ளித் திரையில் காணுத இருவர் இப் படத்தில் கதா நாயகனுகவும், கதாநாயகியாகவும் நடிப்பார்கள். அவர்கள் தான் என் அருகில் இவ்வமயம் அமர்ந்துள்ள மிஸ்டர் கோபாலனும் மிஸ் ரமணியுமே ஆவார்கள். இப் படத்தின் பெயரும் எனது டைரக்டிங் வல்லமையும் இதை எடுக்கப் போட்ட முதலின் வட்டியும் இப் புது நடிகர்களின் கீர்த்தியும் இவர்கள் நடிப்பைத்தான் நம்பியிருக்கின்றன. ஆகையால், நான் இவர்களைத் தங்களுள் ஒருமனப்பட்டுத் தங்கள் முழு கவனத்தையும் செலுத்தி, நடித்தல் வேண்டும் என்று உங்கள் சார்பாகவும் என் சார்பாகவும் கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்குக் கடவுளும் அருள் புரிவாராக" (கரகோஷம்) என்று கூறிவிட்டுத் தன் ஆசனத்தில் அமர்ந்து விட்டார். இத்துடன் அன்றையக் கொண்டாட்டம் முடிமுடிவிற்கு வந்தது.

நாளடைவில் மிஸ்டர் கோபாலுக்கும் மிஸ் ரமணிக்கும் அன்பு முதிர்ந்து ஒரு மனப்பட்டனர். அதிலிருந்து மிஸ்டர் கோபால், ரமணிக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராயிருந்தான். தன் வீட்டு ஞாபகமற்று அவள் மையலில் வீழ்ந்து கிடந்தான். வேலை கிடைத்தது என்று எழுதியதுதான்! அதன்பின் ஒன்றுகூட எழுதவில்லை. அவனுக்கு தன் கரங்களால் தாலி கட்டிய ஓர் மனைவி யிருக்கிறுள் என்பது கூட ஞாபகத்திலில்லை போலும்!

* * *

கோபால் தன் மாமனுருக்குக் கடிதம் எழுதிய பிறகு ஆறு மாதங்கள் பறந்து சென்றன. ஐப்பசி மாதமும் பிறந்து சில நாட்கள் ஆயின. காவிரியில் வெள்ளம் கரை புரண்டோடிக் கொண்டிருந்தது. காலை வேளை சுமார் மணி நான்கு இருக்கும் மோகனூரிலுள்ளார் யாவரும் ஆற்றில் ஸ்நானம் செய்யக் கிளம்பி விட்டனர். பெரியவர்கள் தங்கள் சிநேகிதர்களுடனும் பந்துக்களுடனும் பேசிக் கொண்டே ஆற்றை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

அவர்களுக்கு அடுத்தபடியாக ஸ்த்ரீகள் தங்கள் பக்கத்து வீட்டுப் பெண்மணிகளுடன் இடுப்பில் குடமும் மற்றொரு கையில் குங்குமம், மஞ்சள், அக்ஷதை கற்பூரம் முதலியவைகளுடன் பேசிக் கொண்டே நதியை நோக்கிச் சென்றனர்.

இவர்களுக்கு அடுத்தபடியாக கிராமத்து இளம் பெண்கள் கூட்டம் கூட்டமாகப் பேசிக்கொண்டே நடந்தும் ஓடியும் ஆற்றை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். இவர்களில் ஒருகூட்டத்தில் கலியாணமானவர்கள்; ஆனுல் புருடன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் இருந்தனர். இவர்களுடைய சங்கத்தில் நமது ஜானகியும் ஒருத்தி.

ஆடவர்கள் தங்கள் துறையில் போய் குளித்துக் கொண்டிருந்தனர். சிலர் துணி தோய்த்துக் கொண்டிருந்தனர். சிலர் குளித்துவிட்டு நெற்றிக்குக் குங்குமம் இட்டுக் கொண்டு தங்கள் மனமிச்சையை நிறை வேற்றும்படி அம்மனை நிர்மல மனத்தாய்த் தியானித்து, கற்பூரம் ஏற்றி, ஒரு வெற்றிலையில் வைத்து ஆரத்தி எடுத்து, வெள்ளத்தில் மிதக்க விட்டனர்.

ஆஹா! என்ன மனேரம்மியமான காட்சி! ஆயிரம் சூரியர்கள் ஏககாலத்தில் தோன்றினுற் போலிருந்தது! அங்கு குடிகொண்டிருந்த காரிருள் இவ்வொளியைக் கண்டு பறந்து சென்றது.

இதுபோன்ற காவிரி பூஜையில் ஒரு புதிய ஐதீகம் நிலவி வந்தது—எவளுடைய கற்பூர ஆரத்தி எல்லோருடையதையும் வென்று எரிந்து கொண்டே முன் செல்லுகிறதோ அவளுடைய கோரிக்

கையை அன்று காவிரி அம்மன் நிறை வேற்றி வைப்பாள்—

அது ஒரு புளியமரம். அங்குள்ள மரங்களில் அது தான் வயது முதிர்ந்தது என்று அதனுடைய தோற்றத்திலிருந்தே தெற்றென விளங்கும். அம்மரத்தின் ஒரு கிளை மிகப் பருத்து, ஆற்றின் பக்கம் வளைந்திருந்தது. அக்கிளை நதியின் அகலத்தில் பாதி தூரம்வரை வியாபித்திருந்தது. அக்கிளையில் ஜானகி ஏறிநின்று கொண்டாள். "அடேயப்பா! அவ்வளவு தூரம் அதற்குள் போயிடுத்தே.........! நாம் விட்ட ஆரத்திக்கு முன் மற்றொன்று போகிறதே......! அதையும் வென்று விடும் போலிருக்கே! இன்னும் மங்கவில்லை.......

...நன்ற சுடர் விட்டு எரிகிறது! இன்னும் ஒரு க்ஷணத்தில் என்னுடையது கம்பீரமாகச் செல்லும்: என்ன தேஜஸ்!

"ஆஹா வென்று விட்டது! வென்று விட்டது! என்னுடைய மனோரதம் கைக்கூடிற்று!" என்று சொல்லிக் கொண்டே சந்தோஷ மிகுதியினால் அவளுடைய கைகள், பிடித்திருந்த கிளைகளை விட்டு விட்டுச் சர்வ சக்தியுடைய அம்பிகைக்குத் தன் வணக்கத்தை செலுத்தும் பொருட்டு அஞ்சலிசெய்ய சேரவிருந்தன.

ஹா! அபாக்கியவதி! வெள்ளத்தில் ஒரு பயங்கரக் கூக்குரலுடன் மூழ்கினாள். ஆனால் உள்ளத்தில் மட்டும் மகிழ்ச்சி அணையவில்லை.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

தியாயர்களும் கப்சிப் என்று மணப்பெண்கள் போல அமர்ந்திருக்கிறார்கள்.

* * *

ஒரு மாணாக்கன்: "ஸார், இப்படி திடீரென்று பாதி நோட்ஸ் குடுக்கர ஸமயத்தில் எழுந்து வந்துட்டேளே ஸார்! நாங்க பரீக்ஷைக்கு என்ன ஸார் பண்றது!"

பூகோள உபாத்தியாயர்: "போங்கோடா, மட்டிகளா, ஜடங்களா! மிருகங்களா, வால்களா! எவ்வளவோ ச்ரமபட்டு நான் நோட்ஸ் எழுதி குடுத்தா, நீங்கள் கழுதை போலே நடக்கறது. உஸ் ங்கரது. என்னடா உஸ் உஸ், உஸ்! இன்னமே உங்க மூஞ்சிலே கூட முழிக்க மாட்டேன்."

(எல்லா உபாத்தியாயர்களும் இந்த சொற் பொழிவைக் கவனித்துக் கேட்கிறார்கள்.)

"ஸார், தயவு பண்ணுங்கோ! ஒத்தரை உஸ் பண்ண, நாங்க என்ன ஸார் பண்ணறது! உங்க நோட்ஸ் இல்லாட்டா குடி கெட்டிடும் ஸார்! அதையே நம்பியிருக்கோம் ஸார்!"

முகத்தில் ஆயிரம் வலிப்புடன் பூகோளம் பதிலளிக்கிறார்: "வம்பு, வெறும் வம்பு. ரெஸ்பான்ஸிபிலிடி கிடையாது. உங்களுக்கு ரைட்ஸ் ஆர் பங்க்ஷனல் (Rights are functional) என்று கூடத் தெரியவில்லை. காரக்டர் கிடயவே கிடையாது. உஸ், உஸ், என்ன உஸ் வேண்டியிருக்கிறது! ஹோப்லஸ்! ஜடம்! எங்க காலத்திலிப்படியா! வீ ரெட் எ லாட் இன் தோஸ் டேஸ்! (We read a lot in those days.) 127 நோட்புக்குகள்—பவுண்ட் நோட்புக்குகள்—நிறைய எழுதியிருக்கிறேன். நூத்தி இருபத்தியேழு!!! நீங்களோ! வெட்கம், வெட்கம்! உஸ், உஸ், உஸ்......"

தாய் நாடு

[எஸ். சங்கரன், திருவல்லிக்கேணி]

மாலி தகப்பனாரின் கணக்குகளை சரி பார்த்துக் கொண்டிருந்தாள். சாங் வழக்கம்போல் வார்த்தைகளை விழுங்கி விழுங்கிப் பேசவில்லை. போனதும் போகாததுமாகத் திடீரென்று "மாலி! நீ இப்பொழுது என்னுடன் சைனாவுக்கு வரப் போகிறாயா இல்லையா!" என்றான். மாலி ஒருவித ஆச்சரியத்துடன் அவனை நோக்கினாள். பிறகு தன் கண்களை இடுக்கிக் கொண்டு "நானா! நான் ஏன் சைனாவுக்கு வரவேண்டும்? நான் ஒரு அமெரிக்க ஸ்திரீ. மேலும் சீனாவுக்கு வர எனக்கு இஷ்டமில்லையே!" என்றாள். சாங் பொறுமையை இழந்து "கட்டாயம் வர வேண்டும். ஏனென்றால் சைனாவுக்கு உன் உதவி தேவையாயிருக்கிறது. அது உன்னை வேண்டும்போது நீ இங்கே உல்லாசமாகக் கொம்மாள மடித்துக் கொண்டிருப்பதுதான் தர்மமா!" என்றான். மாலி ஸாவதானமாகப் பென்ஸிலை தலையில் சொருகிக் கொண்டு "பார்க்கலாம். ஆனால் இப்பொழுதல்ல, எலக்ட்ரிக் லைட்டுகளும், மின்சார அடுப்புகளும் ஏற்படும் பொழுது யோசிக்கிறேன்" என்றாள். சாங் தன்னையே மறந்து விட்டான், "ஓஹோ! யோசிப்பாயா! உண்மையான தாய் நாட்டின் புதல்வி இம்மாதிரிதான் கூறுவாளா? இல்லை. நீ கட்டாயம் வரத்தான் வேண்டும்." என இறைந்தான். மாலி மெதுவாக சாங்கின் தலையிலிருந்து கால் வரை ஏற இறங்க நோக்கினாள். பிறகு சிறிது கண்டிப்பான குரலில் "சாங்! என்னை யாராக நினைத்துக் கொண்டிருக்கிறாய்? ஒரு அமெரிக்க மாதினிடம் இம்மாதிரி கூற உனக்கு எவ்வளவு துணிச்சல்!—மேலும் நான் எதற்காக உன்னுடன் சைனாவுக்கு வரவேண்டும்?" என்றாள். சாங்கிற்கு தான் என்ன பேசுகிறோமென்றே தெரியவில்லை, 'ஏனென்றால்... ஏனென்றால்... நான் உன்னை காதலிக்கிறேன்...' என்று திடீரென்று உளறி விட்டான். பாவம்! இப்படிக் கூறவேண்டுமென்று அவன் நினைக்கவே இல்லை. வார்த்தைகள் அவனை அறியாமல் திடீரென்று வெளிப்பட்டு விட்டன. மாலி ஆச்சரியத்தினால் தன் இளம் விரல்களால் கோவைப் பூப்போன்று சிவந்த உதடுகளை மூடிக்கொண்டு. "சாங்! உன் வேலையைப்பார். விளையாடாதே"

"இல்லை. இது விளையாட்டல்ல....... மனப் பூர்வமாக சொல்லுகிறேன்........ ...."

"இல்லை. இது விளையாட்டுதான். உம். நான் ஏன் சைனாவுக்கு வரவேண்டும்? அதுவும் உன்னுடன்!" மாலி தன் உதட்டை பிதுக்கிக் கொண்டு கணக்கு புஸ்தகத்தின் ஏடுகளைப் புரட்டலானாள். அவனை ஏறெடுத்து பார்க்கவேயில்லை. சாங் தயங்கித் தயங்கி கதவு வரை போனான். மாலி திடீரென்று "நான் உன்னை விரும்புகிறேன் என்று சொன்னால் சைனாவுக்கு போகாமலிருப்பாயா!" என்றாள். அடிபட்ட புலிபோல் அவன் திரும்பினான். என்ன! இத்தனை நாட்களாக கனவு கண்டு கொண்டிருந்த ஸ்வதேசத்தை இவளுக்காகத் துறந்து விடுகிறதா! இந்த படாடோபப் பட்டுப்பூச்சிக்காக தன் வாழ்க்கையின் லக்ஷியங்களை—எதிர்கால இன்பங்களை—பாழாக்கிக் கொள்வதா? "முடியாது" என்று அழுத்தமாகவும் கண்டிப்பாகவும் கூறி விட்டான் சாங். "அப்படியானால் உன் சீனாவைக் கட்டிக்கொண்டு அழு" என்று தன் வெறுப்பை தெரிவித்து விட்டு மாலி வேலையில் ஈடுபட்டாள். சாங் புனராலோசனை செய்வதற்குள் ரயிலில் துறைமுகத்தை நோக்கி பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அவன் தன் நிலைமையைப்பற்றி சிந்திப்பதற்குள் கப்பலின் மூன்றாவது வகுப்பு அறையில்

அமர்ந்து நீலக்கடலை ஆழ்ந்து நோக்கிக் கொண்டிருந்தான்.

அவளுடைய கனவு இச்சைகள் இப்பொழுது ரூபம் பெற முடியாது. தாய் நாட்டின் பெருமை, தான் ஓர் ஒப்பற்ற பெரும் தலைவனாகி, தேசோத்தாரணம் செய்வது, சைனாவின் கலைப் பொக்கிஷங்களை ஒன்று சேர்த்து உலகத்திலேயே அதற்கு தலைமை ஸ்தானம் கிடைக்கும்படி செய்வது, ஆகிய எண்ணங்களுக்குப் பதிலாக அமெரிக்க நவீன உடைகளுக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் சீன மாலி அவன் முன் தோன்றி அவனை சித்திர வதை செய்து கொண்டிருந்தாள். அவள் அவன் கூட ஸ்வதேசம் திரும்ப மறுத்து விட்டாள்!

பெரு மூச்சுடன் சாங் கப்பலின் மேல் தளத்தில் உலாவிக் கொண்டிருந்தான். அவனுக்கு மாலியின் மேல் கோபம் வரவில்லை. அவள் மீதுள்ள காதலும் குறையவில்லை. மாலியின் மேல் குற்றங் குறைகளை யெல்லாம் சுமத்தி அவள் வெறுக்கப் பார்த்தான். ஆனால் அவள் தன் பக்கத்தில் இப்பொழுதில்லையே, என்ற குறை அவனை வெகுவாக பாதித்தது. தோள்களைக் குலுக்கிக் கொண்டு தாய் நாட்டின் திசையை நோக்கினான். ஞாபகம் தான் மாலியை மெய்மறக்கச் செய்தது!

அந்த புதிய ஸ்வர்க்கத்தில் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டும். தன் எதிர் காலக் கனவுகளை நனவுகளாக்க வேண்டும். பிறகு தனக்கு ஈடான — மாலியையல்ல — ஒரு சீன ஸ்திரீக்கு வேண்டிய ஸகல லக்ஷணங்களும் நிறைந்த ஒரு வனிதையை மணம் செய்து கொண்டு பிள்ளை குட்டிகளைப் பெற்று......

ஆனால் இவைகளுக் கெல்லாம் முதலில் அவன் தன் தாய் நாட்டைக் கண்டு பிடிக்க வேண்டும். சாங் ஒவ்வொரு தீவையும் நிம்மதி யின்றிப் பார்த்துக் கொண்டே வந்தான்.

அதி காலையில் மூடுபனியினூடாக சாங், முதன் முதலில் சைனாவின் உயர்ந்த சிகரங்களைப் பார்த்தான். அவன் ஹிருதயத்தில் ஒரு நூதன உணர்ச்சி ஊடுருவிப் பாய்ந்தது. வெகு சீக்கிரம் கப்பல் சீனத்துறை முகத்தின் நீண்ட கைகளினால் தழுவப் பட்டது. அவன் மனதிற்கு தன் தாய் நாடே ஆர்வத்துடன் தன்னை வரவேற்பது போல் தோன்றிற்று. இத்தனை வருஷங்களாக மனதிற்குள் எரிந்து கொண்டிருந்த ஆர்வத்தீ இப்பொழுது தான் அணைந்தது. கப்பலி லிருந்து திடீரென்று குதித்து தாய் நாட்டின் மண்ணை ஸ்பரிசிக்க வேண்டு மென்று ஒரு ராக்ஷஸ ஆவல் அவன் மனதில் உதித்தது.

ஆனால் ஒரு நொடிப் பொழுதில் இவைகளெல்லாம் மறைந்து விட்டன. கப்பல் மெதுவாக கரையை அடைந்தது. எங்கும் உயர்ந்த நவீன மாளிகைகள் தென்பட்டன. சளசள வென்ற ஜனங்களின் சப்தமும் வண்டிகளில் இரைச்சலும் அவன் காதை செவிடாக்கின. தனக்குத் தெரியாத ஒரு பாஷையில் அவர்கள் ஏதோ பேசிக் கொண் டிருந்தனர். சாங் மவுனமாக தன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு கப்பலி லிருந்து இறங்கி, பிரயாணிகள் தங்குவதற்கான தகரக் கொட்டகையை அடைந்தான். அந்த கும்பலில் அவனுக்குத் தெரிந்த ஒரு முகங்கூட இல்லை. அவனை வரவேற்க ஒரு உயிர் கூட இல்லை; அவன் மனதில் சிறிது சபலம் தட்டிற்று. ஆனால், உடனே விழித்துக் கொண்டான். ஆம், அவன் இதற்குள் தைரியத்தைக் கைவிட்டு விடக் கூடாது. அவன் கனவுபூமி இன்னும் வரவில்லை. இந்த துறை முகத்தைக் கண்டு அவன் கலங்கி விடக் கூடாது.

சாங் ஒரு ரிக்ஷாக்காரனுக்கு சைகை செய்தான். அடுத்த நிமிஷம் அவன் அதில் போய்க் கொண்டிருந்தான்.

ஹோட்டலில் தன் அறையில் கயிற்றுக் கட்டிலின் மேலுட்கார்ந்து கொண்டு சாங் தெருவை நோக்கினான். அதில் தான் அவன் சிற்றப்பா அவனுக்கு ஒரு ஹோட்டல் பார்த்து வைத்திருந்தார். அந்த பழைய கட்டடத்திலிருந்து அழுக்கு பிடித்த பெண்களும் பையன்களும் ஓடியாடிக் கொண்டிருந்தனர். அவர்

களைத் தொடர்ந்து, தலையை பறக்கவிட்டுக் கொண்டு விகாரமான ஸ்த்ரீகள் கைகளில் அகப்பைகளுடன் வந்து போய்க் கொண்டிருந்தனர். புருஷர்கள் அபினி மயக்கத்தில் ஆடி விழுந்துகொண்டிருந்தனர். அவர்களையெல்லாம் அவன் எத்தனையோ தரம் பார்த்திருக்கிறான். அவர்கள் அவன் வம்சத்தினரல்லர். ஆயினும் அவர்கள் கண்கள், நிறம், தலைமயிர், எல்லாம் அவனுடையதைப் போலிருந்தன. ஆயினும் அவர்கள் அவனைச் சேர்ந்தவர்களல்ல. அவன் சிற்றப்பா சொன்னார்: "சாங்! இதுதான் உள்ள ஹோட்டல்களில் நேர்த்தியானது. இதைவிட நல்ல இடம் கிடைப்பது மிகவும் கடினம்"

"ஆனால் மிகவும் அஸிங்கமாயிருக்கிறதே!" என்றான் சாங் முகத்தைத் திருப்பாமல்......"நீ இப்பொழுதுதான் வந்திருக்கிறாய். காலக்ரமத்தில் எல்லாம் சரியாய்விடும்" என்றார்.

சாங் சிற்றப்பா வீட்டிற்கு மூன்று தடவை வந்திருக்கிறான். ஆனால் மூன்று தடவையும் சண்டை போட்டுவிட்டுத் திரும்பியிருக்கிறான். இவர்தான் தன் சிற்றப்பா என்று கூட நினைக்க அவனுக்குக் கஷ்டமாயிருந்தது. அவர் சுமார் எட்டு குடித்தனமுள்ள ஒரு பழைய வீட்டில் வஸித்து வந்தார். அங்கே அனேகம் குழந்தைகள் கண்டபடி திரிந்துகொண்டிருந்தனர். ஸ்த்ரீகள் ஸதாகாலமும் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் இவ்வளவு பேர்களிருந்தும் மேஜையில் டீ கப்பை சுற்றியுள்ள ஈக்களை ஓட்ட ஒருவரும் முன் வரவில்லை. ஆனால் சிற்றப்பா ஏழையில்லை. அவன் தகப்பனாரின் கடையில் (Curio Shop) அமர் பங்காளி. எந்த புத்த விக்ரகங்களையும், படங்களையும், கண்டு சாங் வியந்தானோ அதே விக்ரகங்களை இந்த சிற்றப்பாதான் அனுப்பி வந்தார்.

சிற்றப்பாவுக்கு பெண்கள் கூட இருந்தனர். ஆனால் அவர் தனக்கு ஏதாவது வேண்டியிருந்தால் முரட்டுத்வனியில் ஒரு சப்தம் செய்வார். உடனே யாராவது பயந்து நடு நடுங்கி தேவையானதைச் செய்வார்கள். தன் பெண்களைப் பற்றி சிற்றப்பா சாங்கிடம் பின் வருமாறு கூறி பெருமை யடித்துக் கொள்வார்: "சாங்! பார்த்தாயா? அவர்களை எப்படி வளர்த்திருக்கிறேன்? பள்ளிக்கூடம் என்ற வார்த்தையே அவர்கள் காதில் படாதவாறு பத்திரப் படுத்தி யிருக்கிறேன். இந்த காலத்தில் படித்த பெண்களால் பெற்றோர்களுக்கும் கணவன் மார்களுக்கும் துன்பங்களைத் தவிர வேறொன்றையும் காணோம்! (கதவருகில் நின்று கொண்டிருந்த இளைய பெண்ணிடம் கோபமாக) கிழட்டு நாயே! புருஷர்கள் பேசும்போது ஒட்டுக் கேட்கக் கூடாதென்று எத்தனை தரம் சொல்வது? (அவள் போன பிறகு) பார்த்தாயா! இதே போல்தான் ஒரு காலத்தில் தன் கணவன் முன்பும் இவள் பயப்படுவாள்"

சாங் தன் விடுதிக்கு வந்த பிறகு சிற்றப்பாவின் பெண்ணைப் பற்றி நினைத்துப் பார்த்தான். அவன் அமெரிக்காவில் எதிர் பார்த்தபடியேதான் அவளிருந்தாள். உருண்டை முகம், இடுங்கின கண்கள், மறு வார்த்தை பேசாத அடக்க குணம், எல்லாம் பொருந்தி யிருந்தது அவளிடத்தில். அவள் ஒரு பொம்மையைப் போலிருந்தாள். அப்பொழுதுதான் திடீரென்று அவன் மனத்தில் உதித்தது, அவள் முகத்தில் மௌடீகம் குடிக்கொண்டிருக்கிறதென்று. கிளிப் பிள்ளையைப் போல் சொன்னதையே சொல்லும், செய்யும் ஒரு பொம்மையை மணம் செய்து கொள்ள முடியுமா! ஆனால் மாலி இப்படி இருப்பாளா! அவளுக்கு இஷ்டமில்லாத ஒரு காரியத்தைச் செய்யும்படி கட்டாயப் படுத்த தேவர்களால்தான் முடியுமா? இப்பொழுது மாலியின் குறும்புச் சிரிப்பு தவழும் முகம் அவன் முன் தோன்றிற்று. பிறகு தான் அவனுக்கு மெதுவாக புலப்பட்டது. இதுவல்ல அவன் தாய் நாடு. சளசள வென்று வீண் வம்பு பேசும் மனிதர்களும் வண்டிகளுமல்ல. அவன் கனவு பூமி அது எங்கேயோ தொடு வானத்திற்கப்பால் இருக்கிறது. அவன் இன்னும் முயற்சிக்க வேண்டும்.

அவன் சைனு முழுதும் சுற்றினன். எங்கும் அதே சோம்பல் நிறைந்த ஜீவனற்ற காட்சிகள். அவன் எதையும் சாப்பிட அஞ்சினன். இரவில் கொசுக்கள் அவன் உடம்பின் ரத்தத்தை ஆனந்தமாகக் குடித்துக் களித்தன. போகு மிடங்களி லெல்லாம் விரூபமான ஸாதுக்கள் அவனிடம் யாசித்தனர். அவர்களும் அவனைச் சேர்ந்த மனிதர்கள்! தெருவில் நடமாடும் பிச்சைக் காரர்கள், தூர்நாற்ற மடிக்கும் உடைகளணிந்து களையற்ற முகங்களையுடைய தடித்த ஸ்திரீகள், நிர்வாணமாகப் புழுதியில் புரளும் குழந்தைகள்—எல்லாரும் அவன் மனிதர்கள்! அவன் இருதயத்தைப் பீறிட்டுக் கொண்டு தோல்வி வெளிப்பட்டது. "இது தானு நான் இத்தனை வருஷங்களாக எதிர்பார்த்த தாய்நாடு. கடவுளே! என் ஜீவியத்தில் இவர்களில் ஒருவரையாவது என்னல் சீர்திருத்த முடியுமா? என்று அரற்றினன். தகப்பனரின் சுத்தமான வீடும் அமெரிக்காவின் தார் ரோடுகளும் அவனுக்கு இப்பொழுது தேவலோகமாக விளங்கின. மளமள வென்று ஒரு பேப்பரை எடுத்து பின் வருமாறு எழுதினன்: "அங்கேயே இரு. நீ சொன்னது தான் ஸரி. நான் ஒரு பெருத்த மடையன்."

மறுபடியும் அவன் மாலிக்கு அனேகம் கடிதங்களெழுதினன். ஒவ்வொன்றிலும் தன் தேசத்தின் நிலைமையை நன்றாக விளக்கி—தன் வயிற்றெரிச்சல்களை யெல்லாம் கொட்டி — எழுதியிருந்தான். "......உணவுத் தட்டுகளைச் சுற்றி வட்டமிடும் பல்லாயிரக் கணக்கான ஈக்களையும், பிச்சைக்காரர்களையும் நான் தினமும் பார்க்கிறேன். எப்பொழுதும் கண்ணில் எண்ணெயை விட்டுக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிடில், என் பொருள்கள் களவாடப்பட்டு விடும். எவ்வளவோ பெண்கள், ஆடவர்களால் அபகரித்துச் செல்லப் படுகின்றனர். ஆனல் கேள்வி முறை கிடையாது......"

அவன் மனம் கொஞ்சம் சாந்தியடைந்தது. பல நாட்கள் கழித்து எதிர் பாராத விதமாக மாலியிடமிருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. (தொடரும்)

புத்தகங்கள் வரப்பெற்றோம்

கி. லக்ஷ்மண சர்மாவின் மொழி பெயர்ப்பு குநாமண வசன மாலை. பிரசுரகர்த்தர்கள்: இயற்கை இல்லம், புதுக்கோட்டை. விலை அணு 12.

கி. லக்ஷ்மண சர்மா இயற்றிய டீ இயற்கை இல்லப் பிரசுரங்கள் :—பூரண சக்தி: (விலை அணு 4); உபவாஸ தத்துவம் : (விலை அணு 4); பத்திய உணவு (விலை அணு 2); மருந்தில்லா வைத்தியம் (விலை அணு 4); வாயு பலம் : (விலை அணு 2).

அரவிந்தயோகி : ஆசிரியர் : கு. ப. ராஜகோபாலன், பி.ஏ.; அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரம். விலை அணு 8.

ரமண சந்நிதி முறைகள்: ஆசிரியர்: பாரத்வாஜி முகவைக்கண்ண முருகனர்; விலை ரூ. 2-8-0.

Songs of Devotion by K. Vaidyanathan, B. A. with an introduction by K. S. Venkataramani.

என். விஸ்வநாதய்யர் இயற்றிய நாடகங்கள் :

		அணு
ஸ்ரீ ராமதாஸர்	விலை	12
வீரஸிம்ஹன்	,,	8
கண்ணப்பன்	,,	8
மாத்ரு பக்தி	,,	10
வீர பத்னி	,,	12
ராஜசேகரன்	,,	8
அப்பூதி அடிகள்	,,	8

கம்பன் கவிதை : நவயுகப் பிரசுராலயம் வெளியீடு.

தங்கத் தட்டு

[ஸீதா, கும்பகோணம்]

காசிக்கோவிலின் அர்ச்சகர் ஒரு நாள் காலை வழக்கம்போலப் பூஜை செய்ய உள்ளே சென்ற பொழுது சுவாமிக்கெதிரில் ஒரு தங்கத் தட்டு கிடந்தது. அதன் மேல் கீழ்க்கண்ட வார்த்தைகள் எழுதி யிருந்தன: "யார் பிறரிடம் அதிக அன்பு செலுத்துகிறானோ, அவனுக்குக் கடவுள் அனுப்பிய பரிசு."

உடனே குருமார்கள், "ஒவ்வொரு நாள் மத்தியானமும் கடவுள் அனுப்பி யிருக்கும் இப் பரிசுக்குத் தான் லாயக்கானவன் என்று நினைப்பவர்களெல்லாம் இங்கே வந்து கூடலாம். அவர்கள் செய்திருக்கும் காருண்யச் செய்கைகளைக் கேட்டுத் தகுதியானவனுக்கு அப்பரிசை அளிப்போம்," என்று விளம்பரம் செய்தனர்.

இச்செய்தி வெகு வேகமாகப் பரவிற்று. மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் பிரபுக்களும், ஏழைகளும், சந்நியாசிகளும், மாணாக்கர்களும் வந்தார்கள். எல்லோரும் தாங்கள் செய்திருக்கும் காருண்யச் செய்கைகளைப் பற்றிச் சொல்லிக்கொண்டனர். குருமார்களும் அவர்கள் சொன்னதைக் கேட்டுக் கடவுளின் பரிசுக்கு லாயக்கில்லை என்று ஒவ்வொருவராகத் தள்ளிக்கொண்டு வந்தனர். இப்படியாக ஒரு வருஷம் சென்றது.

கடைசியாக, மனித சமூகத்திடம் மிகுந்த அன்பு கொண்டவன் என்று தங்களுக்குத் தோன்றியவனுக்கு அத்தட்டைக் கொடுத்தார்கள். அவன் ஒரே வருஷத்தில் தன் நிலங்கள் அனைத்தையும் ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்து விட்டான். அம் மனிதன் சந்தோஷம் பொங்கத் தட்டை எடுக்கப்போனான். ஆனால் அந்தோ, அவன் கைவிரல் பட்டதுமே அத்தங்கத் தட்டு முழு ஈயமாக மாறிவிட்டது. எல்லாரும் திகைத்து நின்றனர். அந்த அதிர்ஷ்டஹீனன் தட்டைக் கீழே போட்டதும், அது மறுபடியும் தங்கமாக மாறிப் பிரகாசிக்கத் தொடங்கியது.

மறுபடியும் ஒரு வருஷம் சென்றது. மூன்று தரம் குருமார்கள் அத்தட்டைப் பரிசளித்தனர். ஆனால் மூன்று தரமும் கடவுள் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அங்கஹீனர்களான பிச்சைக்காரர்கள், பரிசை அடையத் தவிக்கும்

மனிதர்களிடமிருந்து ஏதாவது அடையலாம் என்று கோவில் வாசலில் கூடிக் கிடந்தார்கள். அதுவும் அவர்களுக்கு நல்லதாகவே முடிந்தது. கோவிலுக்கு வருகிற ஒவ்வொரு மனிதனும் இப்பிச்சைக்காரர்களுக்குப் பிச்சை போடுவதனுல் கடவுளின் பரிசை அடைந்து விடலாமென்று நினைத்து, கை நீட்டியவர்களுக்கெல்லாம் பணத்தை வாரி வழங்கினுன். ஆனுல் பிச்சை போட்டால் மாத்திரம் பிறரிடம் அன்புகொண்டிருக்கிருன் என்று ஆகிவிடுமா? இம்மாதிரி பிச்சை போட்டவர்கள் யாரும் அப் பிச்சைக்காரர்களின் மனத்தில் இருக்கும் துயரத்தைக் கவனிக்க முன்வர வில்லை.

இப்பொழுது இரண்டாவது வருஷமும் அநேகமாகக் கழிந்து விட்டது. ஆனுல் இன்னும் அத் தட்டு யார் தொட்டாலும் ஈயமாக மாறிக்கொண்டே இருந்தது. இந்த சமயத்தில் ஒரு குடியானவன், சுவாமிக்குத் தன் பிரார்த்தனையைச் செலுத்துவதற்காகக் காசிக்கு வந்தான். அவனுக்குக் கடவுள் அனுப்பி யிருக்கும் அப் பரிசைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அங்கே கூடியிருந்த பிச்சைக்காரர்களுக்கு மத்தியில் போகும்பொழுது அவன் மனம் உருகிவிட்டது. கண்களிலிருந்து நீர் வழிந்தது. கோயில் வாசற்படிக்கருகில் ஒரு பரிதாபகரமான குருட்டுப் பிச்சைக்காரன் படுத்திருந்தான்.

ஆனுல் அப் பார்வை யிழந்த முகத்தையும், முடமா யிருக்கும் கைகளையும் பார்த்ததும் குடியானவனுல் மேலே போகமுடியவில்லை. அவனருகில் முழந்தாள் படியிட்டு அவனுடைய இரு கைகளையும் தன் கைகளால் பிடித்துக்கொண்டு, "சகோதரனே, உன் கஷ்டத்தைத் தைரியமாகப் பொறுத்துக்கொள். கடவுள் நல்லவர்," என்று இதமாகச் சொன்னுன். பிறகு அக் குடியானவன் கோவிலுக்குள் சென்றுன். அங்கே பிராகாரத்தில் குருமார்களின்முன்னுல் எல்லாரும் தத்தம் பெருமையைச் சொல்லிக் கொண்டிருந்தனர். அதைச் சற்று நேரம்வருத்தத்துடன்கவனித்துக் கொண்டிருந்துவிட்டுப் போவதற்குத் திரும்பினுன். ஆனுல் பூஜாரியின்மனத்தில் ஏதோவொன்று அத் தங்க தட்டை அக்குடியானவனுக்குக் கொடுக்கும்படி தூண்டிற்று. குடியானவன் அழைக்கப்பட்டு அவ்விடத்திற்கு வந்தான். அவனுக்கு இன்னும் அப்பரிசைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவன் கை பட்டதும் ஆகா! அத்தட்டு முன்னிலும் மும்மடங்கு பிரகாசத்துடன் ஜ்வலித்தது. "மகனே, கடவுளின் பரிசு உன்னுடையதுதான். நீதான் உண்மையில் அதிக அன்பு செலுத்துகிறவன்," என்று குருமார்கள் ஆனந்தக் கூச்சலிட்டனர். எல்லாரும் அதுவே சரியென்று ஒப்புக்கொண்டனர். ஆனுல் குடியானவன் அத்தட்டின் அருகிலேயே முழந்தாள் பணிந்து கடவுளைத் தொழுது கொண்டிருந்தான். அதே சமயம் கடவுளின்அருள் அவன்மேல் பிரவாக மெடுத்துக்கொண்டிருந்தது.

புத்தக விமர்சனம்

'கரட்டூர் ராமு'—சீதாராமய்யர். [விலை ரூ. 1.]

[பெருமாள் மலை, செம்பகனூர் தபால், கொடைக்கானல் தாலுக்கா].

கதை சாதாரணமானதுதான். படித்த மேதாவி ராமுவின் ஒழுங்கான உத்தியோக வாழ்வு ஒரு சதியினால் தடைப்படுகிறது. சிறைவாசம், இயற்கை வாழ்விலீடுபட்ட பலருடன் பழக்கம், நாகரீக வாழ்க்கையில் வெறுப்பு இவையெல்லாம் சேர்ந்து ராமுவை ஒரு இலட்சிய புருஷனாக்குகிறது. கரட்டூர் தோட்டத்தில் புது உலகம் சிருஷ்டியாகிறது. பெரும் சமதர்மிகளும் புகழ்ந்து பாராட்டும் வகையில் உலகிற்கு வழிகாட்டுகிறார் தியாகி ராமு.

மொத்தத்தில் கதைப்போக்கும், வாசக நடையும் நன்றாயுள்ளது. கொஞ்சம் அதிகமாகவே ஸம்ஸ்கிருத பதங்களைக் கையாண்டுள்ளார். அதிலும் தமிழோடு தமிழாய்க் கலக்காத வடமொழிச் சொற்கள் (ஸ்புரிக்கின்றன, ஜுகுப்ஸை போன்றன) வாராமலிருந்தால் நன்றாயிருக்கும். தவிர திருநெல்வேலி தமிழின் 'கொச்சை' வார்த்தைகள் வெகுவாய்க் காணப்படுகின்றன. இச்சிறு குறைகளைத் தவிர, மொத்தத்தில் இந்நூல் தெளிவாகவும், அழகாகவும் அமைந்துள்ளது. அதன் உன்னத நோக்கமே எவர் மனத்தையும் கவருவது திண்ணம்.

'புதுமைப் பித்தன் கதைகள்'—[நவயுகப் பிரசுராலயம்—விலை ரூ. 2]

இக் கதைக்கொத்து நேர்த்தியாகவெளியிடப்பட்டுள்ளது. அழகான தாளில் தெளிவாக அச்சிடப்பட்டு, கண்ணைக் கவரும் அட்டையுடன் அமைந்துள்ளது. உள்ளிருக்கும் உன்னதப் பொருளுக்குகந்த வெளித்தோற்றம்!

இத்தொகுதியின் முன்னுரையே ஓர் உயரிய கவிதைச் சித்திரம். ஆனால் முன்னுரையாளர் முடிவில் கூறுவதுபோல், "ஒரு கவியுள்ளம் - சோகத்தினால் சாம்பிய கவியுள்ளம் - வாழ்க்கை முட்களில் விழுந்து இரத்தம் கக்குகிற உள்ளம் - கதைகள் மூலம் பேசுவதை" நாமும் காண்கிறோமென்று நிச்சயமாய்க் கூறுவதற்கில்லை.

முதலிரு கதைகளின் நடை, கரடுமுரடான பாதையில் தட்டுத்தடுமாறி நடப்பதைப் போன்றுள்ளது. கதைப் பொருளிலும் அசாதாரணமான தனித்தன்மையொன்றையும் காணோம். ஆனால் போகப் போக நடையும் பொருளும் ஒருங்கே அழகு பெறுவதைக் காணலாம். முக்கியமாக, 'துன்பக்கேணி' ஓர் உன்னத சோகச் சோபையுடன் விளங்குகிறது. 'தெருவிளக்கு' ஓர் உருக்கமான சிறு சித்திரம். 'கவந்தனும் காமனும்', 'பொன்னகரம்' இரண்டும் சமூகத்தின் அழுகலான மூலைமுடுக்குகளை ஒரு 'டார்ச்' லைட்டின் ஒளியால் அறியாமை யிருளில் உழலும் உலகுக் கெடுத்துக் காட்டுகிறது. இந்நூலில் அடிக்கடி 'இருள், காரிருள்' என்ற சொற்களில் இடறி விழுகிறோம். இயற்கை யிருளையும், அறியாமை யிருளையுந்தான் அவ்வப்போது கதாசிரியர் களைந்தெறிவதில் ஈடுபட்டுள்ளாரே!

கடைசிக் கவிதை—ஆமாம், கதையல்ல, கவிதை யாகத்தானிருக்க வேண்டுமிது—சாமானிய அறிவுக்கெட்டாத நிலையில் உலாவுகிறது. இதன் தலைப்பு '?' மிகவும் பொருத்தமாகத்தான் நம் சாதாரண அறிவிற்குத் தோன்றுகிறது.

நீ. ராமஸாமி

சினிமா வானில்

"எஸ் எஸ்"

காந்திஜீயின் பெயரைக் கேட்காதவர்களோ, 'அவரைப் பற்றி அறியாதவர்களோ யாரும் இவ்வுலகில் இருக்க முடியாது என்பது நிச்சயம். ஆனல் அவரை நேரில் பார்த்திருக்காதவர்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் இருக்கலாம். "இந்த முழத்துண்டு பக்கிரிதான 36 கோடி இந்திய மக்களுக்குப் பிரதி நிதியாகவும், பிரிட்டிஷ் அரசாங்கத்தை ஆட்டிவைப்பவராகவும் விளங்குகிருர்" என்று ஐயுறும் வண்ணம், ஸினிமா வானிலே தோன்றிக் காட்சியளிக்கப் போகிருராம்.

"சுமங்கலி"யில் ஒரு காட்சி.

ஸ்ரீ ஏ. கே. செட்டியார், இதற்காக வேண்டி ஏராளமான பணச் செலவையும், தேக சிரமத்தையும் கருதாது, உலகில் காந்திஜீ விஜயம் செய்த இடங்களையெல்லாம் படரூபமாய்ப் பிடித்து வந்திருக்கிருராம். இதன் மூலம், காந்திஜீயின் வாழ்க்கை பூராவும், தெளிவாய்ச் சித்தரிக்கப்பட்டு, கிராமாந்தரங்களில் இரண்டு அங்குல செருப்பும், மழை தாங்கும் முண்டாசும் தரித்திருக்கும், சகோதரர்கள் கண்டு களிக்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டு வருகிறதாம். தென் அமெரிக்கா போயர் யுத்தத்தில் சேவை, இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டில் விஜயம், தண்டி உப்பு சத்தியாக்கிரக யாத்திரை, 53வது ராம்கார் காங்கிரஸில் சொற்பொழிவு, இன்னும் அவர் ஈடுபட்ட பல முக்கிய சம்பவங்கள் படத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவாம். அநேகமாக இப்படம் உலகத்திலுள்ள பல பாஷைகளிலும், தயாரிக்கப்பட்டு எங்கும் காட்சியளிக்கும்படி செய்யப்படும் எனத் தெரிய வருகிறது. பம்பாயில் இதனுடைய எடிட்டிங் வேலை ஜரூராக நடந்துகொண்டிருக்கிறதாம்.

* * *

டைரக்டர் கே. சுப்ரமண்யம், கல்வி விஷயம் பற்றி ஓர் படத்தைத் தயாரித்துக் கொண்டிருப்பதாயும், அதற்காக வேண்டி, சென்ற சில தினங்களுக்குமுன், திருவனந்தபுரம் திவான் ஸர். பி. ராமஸ்வாமி அய்யரால் திறந்து வைக்கப்பட்ட பள்ளிவாசல், ஹைட்ரோ-எலக்ட்ரிக் திட்டத்தின்படி நடந்துவரும் வேலைப்பாடுகளின் காட்சிகளில் சிலவற்றை ஸ்ரீ ஸி. எஸ். வி. அய்யரைக் கொண்டு பிடிக்க ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரியவருகிறது. இப்படத்தில் கைத்தொழில், விவசாயம், முதலியவற்றின் ஆராய்ச்சி பற்றியும், அவைகள் வெற்றிகரமாய் வேலை செய்யப்படுகிற விஷயம் பற்றியும், தொகுக்கப்பட்டிருக்கின்றனவாம். இப்படப் பிடிப்பிற்குத் திருவனந்தபுரம் கவர்ன்மெண்டாரும் பல தென்னிந்திய சமஸ்தானங்களும், தென்னிந்திய ரயில்வே கம்பெனியாரும், தங்களுடைய பூரண ஒத்துழைப்பை அளித்துள்ளதாயும் சொல்லப்படுகிறது. படம் காட்சிக்குத் தயாரானல், கல்விக் கழகங்கள் மட்டுமின்றி, சினிமா ரஸிகர்களும், ரஸிப்பார்கள் என்று ஸ்ரீ சுப்ரமண்யம் உறுதி கூறுகிருர்.

போகிற போக்கில்



இன்றைய தினம் புது வருஷ பிறப்பு. ஆண்டுவிழா. விழாக்கள் கொண்டாடுவதில் "பாரதமணி"க்கு மிக்கப் பிரியமென்று நமது நேயர்களெல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். நதி தீரத்தில் பிறந்து வளர்ந்த நாகரீகத்திற்கே விழாக் கொண்டாட்டம் அதிகம்தான். பருப்பும், பாயசமும், வெல்லமும், தேனும் ஜலப் பிரளயம்தான். "பாரதமணி"யும் நதி தீரத்தில் பிறந்த நாகரீக செல்வத்தைப் பெருக்குவதற்குத்தானே பிறந்த ஈசனளித்த பிச்சை.

* * *

ஆனால் பத்திரிகை யுலகில் ஆண்டு விழாக் கொண்டாட்டம் உண்மையில் மேலுக்குத்தான். எளியவன் வீட்டில் ஏழாம் பெண்ணுக்குக் கலியாணம் போல்! ஆசிரியருக்கு விழாவில் ருசை, பெரிய வக்கீல்களுக்குச் சாப்பாட்டில் ருசை போல—ஜட்ஜை மடக்குவதிலும், 'கேஸ் லா'வில் தியானம் செய்வதிலும் கண், அன்னத்திலும் பாயசத்திலுமா கண்? ஈசன் அளித்த மர ஆப்பைபோல் கை, வாய்க்கு உதவி புரியும்! இங்கும் அப்படியேதான். கலிகாலத்தில் எல்லாத் தொழில்களும் அத்வைத மயமாய்த்தா னிருக்கின்றன.

* * *

அளவில்லா வானத்தை நோக்கி நிற்கும் கபாலீச்வரர் கோபுரத்தை நான் பார்த்துக்கொண்டு பல கவலைகளுடன் ஊஞ்சலில் சற்று ஆடிக்கொண்டிருந்தேன். பிறருக்கு ஊஞ்சல் உல்லாஸ வாகனம்; எனக்கு அப்படியில்லை. ஸ்னனம் ஸந்தியாவந்தனம் ஆய்விட்டது. காலை வேளை. மணி சுமார் ஏழு இருக்கும்; வருஷப் பிறப்பு. தினசரி இந்த நேரத்திற்குள் "பாரதமணி" சேடை உழவில் பூட்டப்பட தயாராயிருப்பேன். ஆனால் இன்றைய தினம் வருஷப் பிறப்பாச்சே—யாராவது ஒரு நண்பரைப் போய் பார்த்தால் தேவலையென்று தோன்றிற்று. புது வருஷமாவது நன்றாய்ப் பிறக்கலாமே. சந்தாதார்கள் வேட்டையையும், விளம்பர இயக்கத்தையும் விலக்கி, நான் அவாக் கொண்ட கைங்கர்யத்தை எண்ணிய திட்டப்படி மனமாற உயர்தரமாய் நடத்தலாமே. ஆனால் எந்த நண்பர் இன்னம் நமக்கிருக்கிறார், (இரண்டு வருஷம் வாரப் பத்திரிகை நடத்தின பிறகு) என்று எண்ணி ஏங்கித் தயங்கி நின்றேன்.

* * *

உடனே பழைய நண்பர் கோபுவின் ஞாபகமும், இன்னும் அவரிடமிருந்து கிடைக்க வேண்டிய ஒரு கோப்பை காப்பியையும், மின்னல் கொடி போன்ற அவர் தர்ம பத்தினியின் ஞாபகமும் வந்தது. நாச்சியப்ப செட்டித் தெருவை நோக்கி காலில்கூட செருப்புப் போட்டுக்கொள்ளாமல், விரைந்து சென்றேன்.

கோபுவின் வீடு பூட்டியிருந்தது! கதவு கம்பியில் 'டுலெட்' அட்டை கட்டித் தொங்கவிட்டிருந்தது. நல்லசகுனமென்று கலங்கி, சற்று நின்றேன்.

* * *

எனக்கு வெகு நாளாய்த் தெரிந்த பழைய பால்காரன் ஒருவன் கன்றுக்குட்டியைப் பின்பக்கம் பிடித்து தள்ளிக்

கொண்டே—அதற்கு நடக்கக்கூட சீவனில்லை,—ஹைகோர்ட் காரிடாரில் பெரிய வக்கீல்களின் மாப்பிள்ளைகளா யில்லாத ஜூனியர் வக்கீல்களைப் போல—வந்தான். அவனைக் கேட்டேன், கோபு எங்கே யென்று.

“வாருங்கோ, சாமி, சௌக்கியமா? ரொம்ப நாளாய்க் காணோமே. என்னைத் தெரிகிறதா — ஐயா, நல்ல சாமி” என்று சொல்லிக்கொண்டே கன்றுக் குட்டியை மறுபடியும் தள்ளினான். அவன் என் பால்காரனாக இருக்கும் பொழுது அவன் எவ்வளவு நீர் பாலோடு கலந்தாலும், அதை பால் அங்கீகரிக்கிறது போல், நானும் அவனை அங்கீகரிக்கிறது வழக்கம். ஆகையால்தான் “ஐயா, நல்ல சாமி.”

“நானும் அங்கேதான் சாமி, போகிறேன், கோபு ஐயர் வீட்டிற்கு. அவங்கள் இப்பொழுது இந்த வீட்டை விட்டு மாறி விட்டார்கள். பங்களாவிற்குப் போய்விட்டார்கள். அவங்களுக்கு அதிர்ஷ்டம் வந்துவிட்டதாம். திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் ஏராள சொத்து அந்த அம்மாவிற்குக் கிடைத்து விட்டதாம். அந்த அம்மா தங்கம், லெக்ஷ்மிதான். எப்பொழுதும் சிரித்த முகமும், கையில் நன்கொடையும்தான்.”

“ஆகையால், பால்காரனான உனக்கும் அதிர்ஷ்டந்தான்” என்று பேசிக் கொண்டே போனோம்.

* * *

“என்ன நம்ப கோபுவிற்குக் கூடவா லக்ஷ்மி கடாக்ஷம் வந்துவிட்டது. என்ன கலிப் பிரட்டு. ஆனால் அவன் நல்லவன்” என்று சொல்லிக் கொண்டே பால்காரனும் நானும் சென்றோம். கோபுவின் அழகிய சிறிய பங்களாவிற்குள் நுழைந்தோம்.

வீணையின் நாதமும், அதற்கொத்த இனிய குரலில் பாட்டும் காதிற்கு எட்டியது. நான் தயங்கினேன். கோபுவின் புதிய பங்களாவைப் பார்த்தவுடன் என் பழைய தைரியம் போய்விட்டது.

* * *

“வரவேணும், வரவேணும், மணி ஐயர்வாள். பேபரில் உங்களுடைய யாத்திரையை, திக்விஜயத்தை நாங்கள் இருவரும் படித்து சந்தோஷமடைந்தோம். உள்ளே வா, மணி—ஒருவருமில்லை. என் சம்சாரம் பாடி நீ கேட்டதில்லையே—அவள் உன் புஸ்தகங்களையெல்லாம் நன்றாய்ப் படித்து களித்திருக்கிறாள். அதின் மூலம் தானும் எழுத ஆரம்பித்திருக்கிறாள். “பாரதமணி”க்கு இரண்டு கட்டுரைகள் தயாராயிருக்கின்றன. அனுப்பத்தான் யோசனை.”

“என்ன யோசனை? தாராளமாய் அனுப்பு. ஸ்திரீகளின் கவிதைக்கு “பாரதமணி” நாத்தங்காலாய்த்தானே ஏற்பட்டிருக்கிறது” என்றுசொல்லிக்கொண்டே படி ஏறினேன். கன்றுக்குட்டி பசுவில் ஊட்டி பால் கறக்க வேண்டுமே என்ற கவலையில் தேங்கி நின்றான், பால்காரன்.

“ஸரஸ்வதி, இவர்தான் என் பழைய நண்பர், மணி, “பாரதமணி”யின் ஆசிரியர். உன் பாட்டில் ஒரு பாட்டைப் பாடி அவரை இன்றைய வருஷப்பிறப்பு தினம் அழைப்போம். அவர் வரவு நல்வரவு. பிறகு காப்பி சாப்பிடலாம்.”

* * *

“என்ன, கோபு, பெரிய பங்களாவிற்கு வந்துவிட்டாயே. எங்கேயாவது ‘டர்பி ஸ்வீப்பில்’ உனக்குப் பணம் கிடைத்ததோ? என்னையும் “பாரதமணி”யையும் அப்பொழுதே ஒரு கூட்டு சேர்த்துகொள்ளக்கூடாதா?”

“மணி, டர்பிஸ்வீப் ஒன்றுமில்லை. எதிர் பாராத ஓர் அதிருஷ்டம். என் பணமுமல்ல. அவள் பணம்” என்று கோபு சொல்லி முடிக்குமுன், ஸரஸ்வதி சொன்னாள்: “தாங்கள் கொடுத்த பிச்சைதான்— நாங்கள் கஷ்ட தசையில் இருக்கும்பொழுது நீங்கள் கொடுத்த ஒரு மூட்டை அரிசியே எங்களுக்கு லக்ஷ்மீ கடாக்ஷமாய்விட்டது. என் சிறிய தகப்பனார் ஒருவர் ரங்கூனில் மர வியாபாரம் செய்து ஏராள பணம் சம்பாதித்தார். பிள்ளை குட்டிகள் கிடையாது. அதை

இப்பொழுது, அவர் இறக்கும் சமயத்தில், எங்களுக்கு எழுதி வைத்து விட்டார்."

"ரொம்பவும் சந்தோஷம், கோபு. உன் அதிருஷ்டம் என் அதிருஷ்டமே."

'சில்க் ஜிப்பா'வில், புதிதாய் ரக்கை முளைத்த மினு மினுப் பூச்சிபோல், கோபு ஒளியை பரப்பினன். கஜூர் பக்கத்தில் அவன் காங்கிரஸ் தொண்டு செய்து ஜெயிலுக்குப் போனபொழுது, அவன் கதறணித்த ஞாபகம் எனக்கு வந்தது. இருவரும் ஐந்து நிமிஷம் பேசாமல் மௌனமாயிருந்தோம்.

* * *

"என்ன விசேஷங்கள்? சொல்லு, மணி. ரிஷிகேசம் வரையில் போயிருந்தாயே. "பாரதமணி"யை மார்க்கண்டேயனுய்ச் செய்ய ஹிமோத் பர்வதத்திலிருந்து மூலிகைகள் கொண்டுவந்திருக்கிறுயா ?"

செல்வத்தின் சிறப்பில் கோபுவிற்கு ஸரஸ்வதியின் கடாக்ஷம்கூட ஏற்பட்டு விட்டது. "கோபு, நான் தம்பதி சகிதமாய் காசியாத்திரையல்லவோ போயிருந்தேன். கயாசிராத்தம் செய்தேன். தீர்த்தாடனம் பண்ணினேன். "பாரதமணி"யை சிரஞ்சீவியாக்க மூலிகையா ! அச்சில்லாத் தேர் ஓடுகிறது என்கிற பழமொழி கேட்டிருக்கிறுய். ஆனல் அச்சும், சக்கரமுமில்லாமல் என் தேர் ஓடுகிறது, ஈசனருளால்" என்றேன்.

"நாக்கில்லாத மணி ஓசை உயர்தரந்தானே—கடலோசை போல் ஸ்வயமாகவே உற்பத்தி" என்று ஸரஸ்வதி இனிய குரலில் சொன்னுள்.

"என்ன சிரமமிருந்தாலும், மணி, "பாரதமணி"யை நடத்து. விட்டு விடாதே. தொட்டதை விட்டுவிடக் கூடாது. நமது நாட்டில் மேடைப் பிரசங்கத்தைத் தவிர காரிய ரூபமாய் ஒன்றும் செய்து முடிக்க முடிகிறதில்லை. இலக்கியப் பெருக்கன்னியில், ஒருவித செல்வப் பெருக்கும், தொழில் பெருக்கும், அரசியல் பெருக்கும், நமது நாட்டில் இயலாது" என்று, கோபு தீர்மானமாய்ப் பிரசங்கம் செய்தான். ஸரஸ்வதி தலையை அழகாய் ஆட்டி ஆமோதித்தாள்.

"விடப்போகிற தில்லே, பாரதமணியை. கோபு, விடவும் முடியாதுபோலிருக்கிறது, ஸ்ரீரங்கத்துஉலக்கைபோல்."

"ஆனல் ஒரு கேள்வி. உனக்குத் தாய் பாஷையில் இவ்வளவு பிரியமிருந்தும், மணி, ஏன் ஆசிரியர் பெயரை "கே. எஸ்." என்று பதிவுசெய்து வருகிறுய்? எது தமிழ்நடையோ, அப்படியே செய்யக் கூடாதா, என்று நான்மாத்திரம் கேட்கவில்லே; ஸரஸ்வதியும் அடிக்கடி கேட்கிறுள். சிறு வயதில், மணி, நாம் காலேஜில் படிக்கும்பொழுது, நீ "ஈஸ்ட் அண்டு வெஸ்ட்" பத்திரிகைக்கு ஆங்கிலத்தில்கூட எழுதும்பொழுது உன் பெயரை நீ 'காவேரிப்பட்டண சித்தநாத வேங்கடரமணி' என்று ஆங்கிலத்தில் வங்காளி போல் எழுதிவந்தாயே, அப்படியே இப்பொழுதும் தமிழில் செய்யவேண்டாமா?"

"தவிர அதுவும் இப்பொழுது ஒத்திருக்கும். காசிக்குப் போய்விட்டு வந்த பிறகு,—கா. சி. வேங்கடரமணியாகும்" என்று புன்சிரிப்புடன் சொல்லிவிட்டு, மான்போல் ஒரு பாய்ச்சலாய்ப்போய் ஸரஸ்வதி இரண்டு கோப்பை காபி கொண்டுவந்தாள். கோபுவின் அக்காள் சமீபத்தில் இவ்விடம் வந்து சமையல் பொறுப்பை ஒப்புக்கொண்டு விட்டாளென்று தெரிந்துகொண்டேன். இல்லாவிட்டால் காலேவேளேயில் ஸரஸ்வதிக்கு வீணைப் பயிற்சிக்கு அவகாசம் ஏற்படுமோ ?

"ஆமாம், கோபு, ஒப்புக்துக்கொண்டேன். புதிய வருஷத்திற்கு நல்ல யோசனே. கவர் பேஜில் காசியைக் காண்போம். இன்னும் பின்தொடரும் பாக்கி ஆங்கிலச் செடுக்கை ஒழிப்போம். "கே.எஸ்."ஸைக் "கா. சி."யாக மாற்றி பாரதமணியின் அதிருஷ்டத்தைப் புது வருஷத்தில் புதுப்பித்துப் பார்ப்போம்" என்று சொல்லித் தீர்மானித்தேன்.

"குழந்தை ஸரஸ்வதி, உன் கட்டுரைகளைக் கொண்டுவா. "பாரதமணியில்" வெளியிடுவோம். அதற்கு இரண்டு கப் காபி இன்னொருநாள் எனக்கு உண்டு" என்று சொல்லி என் வீடு திரும்பி, சேடை உழவில் இறங்கினேன்.

மணி

இரு மனோநிலைகள்

(டி. ஆர். வேங்கடராம சாஸ்திரி)

'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' ஆசிரியர், தங்கள் வருஷ அனுபந்தத்திற்கு ஒரு கட்டுரை அனுப்புமாறு என்னைக் கேட்டார். பின்வருவதே என் விஷயதான மாகும். கட்டுரை முழுவதும் என்னுடையதன்று. முன்னுரையும் முடிவுரையுமான இரு பாகங்களே என் கைவேலை. மிகுதியெல்லாம் என் உயிருக்குயிரான ஒரு வெகுகாலைய நண்பருடையது. எதைப் பற்றி எழுதுவதென்று நான் தலையைச் சொரிந்துகொண்டு சிந்தித்திருந்த போது அவர் உள்ளே வந்தார். நான் மூளையைக் குழப்பிக் கொண்டிருப்பதைக் கண்டு, அவ்வேலையை இரண்டு நாட்களுக்கு ஒத்திப் போடச் சொல்லிச் சென்றார். மறுமுறை அவர் வந்தபோது, என்னை விளம்பி யெழுதப்பட்ட ஒரு வியாசத்தைக் கொணர்ந்தார். அதைப்படித்து, முடிவுல் ஒரு பாரா சேர்த்ததும், ஒருவனே இரு மனோநிலைகளில் எழுதிய ஒரேகட்டுரையின் ஒருமை யிருப்பதைக் கண்டேன். இந்த முகவுரையுடன் ஆசிரியருக்கு இதை அனுப்பத் துணிந்தேன்.

நண்பர் எழுதியது இதுதான் :—

காலம் மாறிவிட்டது, பழைய பழக்க வழக்கங்கள் போய்விட்டன. நம் முன்னோர் புண்ணிய காரியங்களாய்க் கொண்டவை யெல்லாம் இப்பொழுது அப்படிக் கருதப்படுவதில்லை.

மனு எழுதியதாய்ச் சொல்லப்படும் பண்டைப் பழமொழி கூறுவதாவது :

உண்மை யெதுவோ அதைப் பேசு, இனிமையான வற்றையேகூறு ;

மனக்கசப்பை விளைவிக்கும் இனிமையற்ற, உண்மையையும் கூறாதே ;

இனிமையான பொய்யையும் கூறாதே : இதுதான் எக்காலத்துக்கும் உகந்த தர்மம்.

இன்று இதை ஒத்துக்கொள்கிறீர்களா? இல்லையென்றே சொல்வேன். சமூக நோக்கங்களும் அவற்றையடையும் மார்க்கங்களும், கொள்கைகளாலும் உயர்ந்த இலட்சியங்களாலும் கட்டுப் படுவதில்லையே. இக்காலை,இனிமையானதும் விரும்பத் தக்கதுமான நோக்கங்களையே நாம் பின்பற்றுகிறோம். எவ்வழியிலும் அந்நோக்கத்தை யடைவதில்தான் நம்குறி. மார்க்கங்களைப்பற்றி அதிகக் கவலை கிடையாது. நாம் செல்லும் பாதை எதுவாயிருப்பினும் பாதகமில்லை ; ஆனால் நம் நோக்கம் கிட்ட வேண்டுவதவசியம். அவசியமான, அவசரமான நோக்கத்திற்கெதிரே மற்ற பேச் செல்லாம் ஒதுங்கி நிற்கவேண்டும்.

உண்மை யென்பதும் சத்தியமென்பதும் வெறும் வெட்டிப்பேச்சு. சத்தியம் என்பதற்காகவே உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை. நம்நோக்கத்திற்கனுசரணையாய்அது இருக்கலாம். அப்படியெனில் அதை உபயோகிக்கலாம். ஆனால் அதனால் உபயோகமில்லாவிடின், நமது லட்சியம்தான் அதைவிட அவசியமானது. உண்மை ஒரு நல்ல ஊழியன ; ஆனால் அவ்வளவு நல்ல எஜமானனல்ல. தங்கள் தேசம், இனம், வகுப்பு, இவைகளுக் குழைக்க வேண்டுமாயின், எவனும் ஒரு கட்சிவாதியாயன்றி யிருத்தல் முடியாது. ஒரு கட்சியைப் போலவே மற்றக் கட்சியிலும் ஒவ்வொருவனும் தான் கைக்கொண்ட வேலையை என்ன வந்தாலும் தாங்கவேண்டும். அதற்கான தியாகங்களில் உண்மையைக் கைவிடுதல் முதலாவதாயு மிருக்கலாம். அதையும் செய்ய வேண்டியதுதான். நம் தேசம், இனம், வகுப்பு இவைகளைப் பாதிக்குமளவிற்குச் சத்தியத்தைக் கடைப் பிடிக்கலாமாவென்பதே கேள்வி. அவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்க முடியாது. உண்மைச் செய்திகள் ஒளிக்கப்பட வேண்டுமாயின், அப்படித்தான் செய்யவேண்டும்; வேறு பேச்சிற் கிடமில்லை. செய்திகளைத் திரித்துக் கூறவேண்டுமா? ஆமாம், அவசிய

மானால் அதுவுந்தான். நிகழ்கால, வருங் காலத்திற் கெல்லாம் சமூகத்திற்கு ஒரு குறிப்பிட்ட வழியில் கல்வியளிக்க வேண் டுமா? தவக்கமன்னியில், செய்யவெண்டி யதுதான். தற்காலப் போக்கு இவ்வகை யிலுள்ளதாகவே எனக்குப் படுகிறது.

பழைய காலத்திலும் சத்தியத்தையே கடைப்பிடித்து நடப்பதாய்க் கூறியவர் அதனின்றும் பிறழாமலில்லை. காரியத் தில் சத்தியத்தைக் கைவிட்டாலும் வெளிக்காவது தங்கள் சத்தியத் தன்மை யைப் பறை சாற்றுவது வழக்கம். அவர் களது கொள்கையும் காரியமும் வேறு படத்தான் செய்தது. கொள்கையை உண்மையுடன் ஒப்புக்கொள்ளினும், காரிய வகையில் குறைபாடுதான் இருந்தது; இக்குறை என்றும் இருக்கக் கூடியது தான். இதற்குக் காரணம், கொள்கை பிறரை நோக்கும்போது கடுமையாயும் தன்னைப்பற்றிய வரையில் லேசாயும் இருப்பதுதானென்று நினைக்கிறேன். இப்பொழுது நம்முடையே, வெளிப்பேச் சில்கூட உயரியகொள்கைகளைக் காணோம். இப்படியாகக் கொள்கைகளே சந்தேகாஸ் பதமாயுள்ளது; கிரியாம்சையிலோ கேட்க வேண்டியதில்லை. வெளிவேஷமாகக் கூட அது உன்னத கொள்கைக் குட்பட்டதா யிருக்க வேண்டிய நியதியற்று விட்டது.

பிறரிடம் இனிமையாய் நடப்பதையோ, பிறர் மனதை வருத்தாமலிருப்பதையோ பற்றிப் பேசவேண்டியதேயில்லை. இதைப் பற்றி எவரும் அக்கரைப் படுவதில்லை. இனிமையான பொய்யுரை யாடுவதைவிட, மனக்கசப்பைத் தரும் உண்மைகளைப் பேசுதல் ஒரு சிறிதளவே குறைபாடற்ற தென்று உண்மையில் நம்பிய சிலர் எப் பொழுதும் உண்டு. இனிமையான பொய் தவறுனதுதான். தற்காலத்தில் பெரும் பான்மையோரின் கருத்தில் மனக்கசப்பை யுண்டாக்கும் மெய்யை மறைப்பதுவும் பொய்தான். மனத்தாங்கலுக் கிடமாகும் உண்மையை மறைப்பதினல், அவனைப் பற்றி நீ தாழ்வான எண்ணம் கொண் டுள்ளதை எதிராளி அறியான். இச் செயல் மெய்யை மறைத்துப் பொய்யை வெளியிடுவதாகும். இப்பெரும்பான்மை யோரின் எண்ணப்படி, ஒருவனைச் சரி யான காரணங்களால் வெறுத்தால் அவ னைப் பிறரிடையே அவமானப்படுத்த வேண்டியது கடமையாகும். நான் மிகைப் படுத்திக் கூறுவதாகத் தோன்றலாம். ஆனல், விரும்பத்தகாதவர்களுக்கு விட் டுக்கொடுத்துப் பேசுவதைக் கண்டிக்கும் பலரை நேரே கேட்டிருக்கிறேன். பிசகு, குற்றம், பாவம், இவை செய்பவருக்கு விட்டுக்கொடுத்து நிதானமாயிருத்தல் அக் குற்றங்களுக் குடந்தையாயிருப்பது போல்தானம்.

நாம் ஒரேபாதையில் வெகுதூரம்போய் விட்டதாக எனக்குத் தோன்றுகிறது. நம்மால் முடிந்த அளவில் பிறரிடம் இனி மையாய் நடக்கலாமென்பதோ, அவசிய மிருந்தாலொழிய பிறர் மனத்தைப் புண் படுத்தாமலிருக்க வேண்டுமென்பதோ இப்பொழுது பேச்சில்லை; அவசியமில்லா மலே நாம் எவ்வளவு ஆபாஸமாய் நடந்து கொள்ளலாமென்பதே கேள்வி. ஆபாஸ மாய் நடக்க இடமேற்பட்டால் ஏன் அதை விடவேண்டும்? ஆபாஸமாய் நடப்பதைப் போல், பெருந்தன்மையுடன் நடப்பதால், அவ்வளவு தூரம் பிறர் கவனத்தை நம் மிடம் திருப்பமுடியாது. பெருந் தன்மை யைப் போலன்றி, ஆபாஸ நடத்தைக்கு ஒருவித விளம்பர மதிப்புண்டல்லவா?

அஹிம்ஸை

எங்கும் சத்தியம், அஹிம்ஸை என் பதே பேச்சு. ஆனல் காரியத்தில் எவ்வ ளவுக்கெவ்வளவு இது குறைவு படு கிறதோ, அவ்வளவிற்கு அதிகம் பேச் சில். இன்றைய உலகில் அஹிம்ஸைக்குச் சிறிதேனும் 'சான்ஸ்' இல்லை. என்றுமே அதற்கு அதிக இடமிருந்த தில்லை. அப் படி யிருக்க, இக்காலத்தில் இடமேது? தேசிய அஹிம்ஸையைப் பற்றி நான் பேசவில்லை. தவிர, மகாபாரதமும் கீதை யும் அஹிம்ஸையைப் போதிக்கின்றனவா, அல்லது நற்காரியங்களுக்காக பலாத்கார யுத்தத்தை ஆதரிக்கின்றனவா என்பதும் இங்கு விவாதிக்கப் படவில்லை. நன்னோக் கங்களுக்காக யுத்தத்தை அவை ஆதரித் தால் தானென்ன? இப்பொழுது எந்த

நோக்கத்துடனும் யுத்தம் கூடாதென நாம் முடிவு செய்யக் கூடாதா? ஆனால், தற்கால நிலையில் அஹிம்ஸையைப் பற்றிய பேச்சுக்கே இடமில்லையென்றுதான் தோன்றுகிறது. ஒரு நாட்டிற்குள் அஹிம்ஸையின் உபயோகத்தைப் பற்றிக் கவனிக்க இடமிருக்கலாம். சர்வதேச அஹிம்ஸை, நடைமுறையில் சமீபகாலத்திற்குள் சாத்தியப்படப் போவதில்லை. கைகூடாத காரியங்களும் சில லட்சியவாதிகளின் பிரசாரத்தால் கை கூடுவதும் தெரிந்ததே. எவரேனும் சிலர் அப் பிரசாரத்தை நடத்த வேண்டியதுதான். ஆனால் தற்போது, கிரியாம்சையில் அதற்கிடமில்லை. இந்திய சர்க்காரை அஹிம்ஸா முறையில், பிறரது அஹிம்ஸையை, எதிர்பார்த்து நடத்த முடியாது.

உலகம் யுத்தத்தில் இறங்கியுள்ளது; அஹிம்ஸா முறையில் நடக்கவேண்டுமென்று அது விரும்பவில்லை. அஹிம்ஸை தத்துவத்தை எதிர்த்தே போராடுகிறதென்று சொல்லலாம். அஹிம்ஸைக்கு ஏதாவது இடமிருந்தால் அது தனி மனிதர்களிடையே தான், நாடுகளிடையே கொஞ்சமும் கிடையாது. சமணரிடையும், சந்நியாசிகளிடத்தும் அஹிம்ஸை முக்கிய லட்சியமாயிருந்தது. வகுப்புக்களிடையே இத்தத்துவம் பலன் பட்டாலே பெரும் வெற்றியாகும். வகுப்புக்களிடையே கைகூடாத ஒன்று இரு நாடுகளுக்கிடையே நடைபெறுமென்றும், இவ்வகுப்புக்களை தனி நாடுகளாகப் பிரித்தால் நன்றாயிருக்குமென்றும் பலர் எண்ணுவதாகவே காணப் படுகிறது. ஒரு சிலராவது உண்மையில் அஹிம்ஸா தத்துவத்தில் நம்பிக்கையுடனிருந்தால், அதுவே பெரிய காரியமாகும். உண்மையென்னவெனில், பலர், மனதில் பலாத்கார சிந்தையுடன் வெளிக்கு மட்டும் அஹிம்ஸை பேசி வருகிறார்கள். பெருவாரியான மனிதர் உண்மையான நம்பிக்கையின்றி, அதைப் பெரும் லட்சிய மெனக் கூறுகிறார்கள். உண்மையில் 'சத்தியம், அஹிம்ஸை', இவைகளை நம்பும் ஒருவரேயுள்ளார்; அவரும் அநேக சமயங்களில் நம் அறிவுக்கெட்டாதபடி நடக்கிறார். மற்றவரெல்லாம், அந்தரங்கமாய் அத் தத்துவத்தில் நம்பிக்கையின்றி, அப்பேச்சின் லோகாயத பலனை யறிந்தே அப்படி நடக்கிறார்கள்.

நிதானம்

அஹிம்ஸையை அடிப்படையாகக் கொண்ட பிறிதொரு குணம் நிதானமும், பிறருக்கு விட்டுக்கொடுப்பதுமாகும். இதுவும் அஹிம்ஸையைப் போலவே காண்பதற்கரிதாயுள்ளது. தன் கொள்கைகளில் ஒருவன் கொண்டுள்ள தீவிரத்தைவிடக் குறைவாயும் நிதாமுடனு மிருக்கவேண்டுமென்று யாரும் கேட்க முடியாது. ஆனால் தான் கோரும் உரிமையைப் பிறருக்கும் விட்டுக் கொடுக்கவேண்டுமென்பதை அவன் உணரவேண்டும். தங்களிஷ்டப்படி நடக்க இடம் கொடுக்காவிட்டால் எவரும் கோபிப்பர். ஆனால், பிறர் அவர்களிஷ்டப்படியே நடக்க அனுமதிப்பது வெகு சிலரேயாகும். பிறர் செய்வது எல்லாம் தவறென்றும், தாமே சரியென்றும் நினைப்பதாலேயே, நாம் நமக்குக் கோரும் உரிமையைப் பிறருக்கும் அளிக்க உடன்படுவதில்லை. அரசியலைவிடச் சமூக சீர்திருத்தத்தில் நான் கண்ட அனுபவம் இதுதான். சீர்திருத்தக்காரச் சிறுபான்மையினர், முதலில் தங்களிஷ்டப்படி நடக்கும் உரிமைய்யைக் கோருகின்றனர். அவர்கள், அதிகாரம் கைக்கு வந்தவுடன், தங்களிஷ்டப்படி நடக்கும் சுதந்திரத்துடன் நிற்பதில்லை; பிறரும் தங்கள் கொள்கையை ஒத்துக்கொள்ளவேண்டுமென நிர்ப்பந்திக்கிறார்கள்; பெரும்பான்மையினர் தங்களிஷ்டப்படி நடக்க அனுமதிக்கப்படுவதில்லை. இதுதான் அதிகாரத்தின் மகிமை.

“அரச அதிகாரம் மூளையை மாற்றி மது மயக்கத்தை யளிக்கிறது; நன்னடக்கை விதிகளை அதிகாரம் கவனிப்பதில்லை; அது தர்மத்தைக் கடைப்பிடிப்பதில்லை; அது சத்தியத்தை அடிப்படையாகக் கொள்வதில்லை.” இப்படியாகப் பாணன் பன்னிரு சகாப்தங்களுக்கு முன்னே கூறிப் போந்தனன்.

இவையெல்லாம் அரசியலில்—அரசியலதிகாரத்தைப்பற்றி. ஆனால் எல்லாவித

அதிகாரமும் இவ்விஷயத்தில் ஒரே விதம் தான்.

தன்னைப்போல் பிறரையும் மதிப்பது எவருக்கும் எளிதில் வரக்கூடியதல்ல. மற்றோரை மதியாதிருத்தல் இப்பொழுது ஒரு குறையாகவும் கருதப்படுவதில்லை. எதிராளியின் நிலைமையைப் பற்றி நினைப்பதுவும், எதிர் கட்சியின் சரியான வாதத்திற்குரிய மதிப்பைத் தருவதும், ஒரு குறையாக மதிக்கப்படுவதை நான் கேட்டிருக்கிறேன். பிறர் கட்சியைக் கூர்ந்து நோக்கி, அதற்குள்ள மதிப்பை விட்டுக் கொடுத்தல் தனி மனிதனின் மூடத்தனமாகவும், பொது நன்மைக்குத் தீங்காகவும், கருதப்படுகிறது.

வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும், இந் நற்குணங்களெல்லாம் காரியசித்திக்குக் குறுக்கே நிற்கும் குறைகளாகக் கொள்ளப்படுகிறது. உண்மை பேசுவதும், ஸாத்வீக முறையில் நடப்பதும், பிறரை மதிப்பதும், பிறர் உரிமைகளை விட்டுக்கொடுப்பதும், நீ எதிர்பார்க்கும், உன்னிஷ்டப்படி நடக்கும் சுதந்திரத்தைப் பிறர்க்கு அனுமதித்தலும், நற்குணங்களாயிருக்கலாம்; ஆனால் குறிப்பிட்ட காலத்திற்குள் பொது நன்மைக்குகந்த எக்காரியமும் இவ்வகையில் சாத்தியமாகாது. இப்படிப்பட்ட நம்பிக்கை சரியாக விருக்கலாம். எந்த நற்காரியத்தையும் சிறிது சிறிதாகத்தான் சாதிக்க முடியும். உன்னைச் சுற்றியுள்ளவர் இடம் கொடுப்பதை விட அதிக வேகமாய் அதை நிறைவேற்றல் இயலாது. ஒரு வகுப்பாரின் புரட்சிகரமானதும் நாசகரமானதுமான எதிர்ப்பைக் கிளப்பாமல் செய்யப்படும் முன்னேற்றமே சாஸ்வதமானது.

கட்டுரை வெகுவாய் வளர்ந்துவிட்டது: அதை சீக்கிரம் முடிக்கவேண்டும்.

அஹிம்ஸா முறையை அடிப்படையாயுள்ள வேறு பல காரியங்களும் உள்ளன. பிறர் செய்கையில் சுயநலப் போக்கைக் காண்பதாகக் கூறாதே; அவதூறான பேச்சுக்குப் பலம் கொடாதே; தீவிர வாக்குவாதங்களில் ஈடுபடாதே; ஒருவனைப் பற்றிப் புறம் கூறாதே; கொள்கை வேற்றுமைகளுக்கு விட்டுக் கொடுத்துப் பேசு; இவை யெல்லாம் அதே தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவையாம். வேற்றுமைக்கு விட்டுக்கொடுத்தலை வெகு தூரம் கொண்டுபோவதைக் கண்டித்து நீயே முன்னொருதடவை பின் வருமாறு எழுதியுள்ளாய்:

“ஒரு நல்ல குணத்தை அளவுக்கு மிஞ்சி அனுசரித்தலும், ஒரு சிறந்த கொள்கையைத் தவறான வழியில் பயன்படுத்தலும்கூடும். அளவுக்கு மிஞ்சிய நிதானமும், பொறுமையும் இருத்தல் கூடும். மனிதரைப்பற்றியன்றி, தவறுகளைப்பற்றிச் சிறிது வேகமும், பொறுமையின்மையும் உபயோகமானதே. இக் குறைகளை நீக்குவதில் இடைவிடாது முயற்சிசெய்தல் அவசரமும் நிதானமின்மையு மாகுமானால், இக்குணங்கள் அதிக அளவில் அவசியமே. பிறருக்கு விட்டுக் கொடுக்கும் மனோபாவத்தில் அறியாமையை அப்படியே விட்டு வைத்துள்ளோம். மூட நம்பிக்கைகளைக் கண்டித்தோமில்லை; அசுத்தம், ஆபாசம், துயரம் இவைகளை அப்படியே விட்டுவிட்டோம்; அவைகளை அகற்ற ஒரு முயற்சியும் செய்யவில்லை. சமூக அமைதியைக் குலைத்து விடுமோவென்று உண்மை அறிவைப்பரப்பாமலிருந்து விட்டோம்.”

இதை எங்கு, எப்பொழுது எழுதினையென்று உனக்கே தெரியும். எவ்வளவு ஜாக்கிரதையாய் எழுதியிருந்தாலும், இது நல்ல காரியத்தில் அமிதவாதத்தை ஆதரிப்பதாய்த் தோன்றவில்லையா? எக்காரியத்திலும் மிதமாயிருத்தலைப் போதிக்கும் கொள்கையை வழிபடும் ஒருவருடைய பேச்சைக் கவனி:

“நமது ஆக்கவேலையைப் பாதிக்காத வகையில் செல்ல வேண்டுமாயின், நிரந்தரமான நிதானப் போக்கை கைக்கொள்ள வேண்டும். நமது கொள்கைகளை வெளிப்படுத்துவதில் தயங்கக் கூடாதுதான்......... ஆனால் என் இஷ்டத்திற்கு மாறாக ஏதாவது வாக்குவாதம் கிளம்புமானால், வேறு காரியம் இருப்பதாகச் சொல்லி, அவ்விடத்தை விட்டகலுவதே சரியென்று கண்டுள்ளேன். இது ஏனெனில், என் நிதான குணத்தில் எனக்

குப் பூர்ண நம்பிக்கையின்மையாலும், அசாதாரணமான தூண்டுதலின்பேரில் என் நடத்தை அமிதமாய் போய்விடலாமென்று அஞ்சுவதாலுமே யாகும்"— லார்ட் பான்ஸன்பி.

* * *

எனக்குச் சூடு கொடுக்கும் என் நண்பரது கட்டுரை இதோடு முடிகிறது.

என் நண்பரை நான் நன்கறிவேன். வயது வந்தவருக்குச் சகஜமான அலுப்பு வேகத்தில் எழுதப்பட்டதாகும் இக்கட்டுரை. ஆனால் என் நண்பர் எப்பொழுதும் இதே குணமுடையவரல்லர். இது ஒரு க்ஷணப் போக்காகும். பழைய காலம் மாறித்தான் போயுள்ளது; அது தான் இயற்கை. ஆனால் பழைய பழக்க வழக்கங்கள் அடியோடு மாறிவிடவில்லை. மனித சமூக சகவாஸத்தில் உண்மையும், நேசமும், இனிய நடத்தையும், பிறரிடம் மதிப்பும், நிதானமும் உள்ள பலர் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். கிராமங்களிலும் சரி, கரங்களிலும் சரி, இப்படிப்பட்ட பலர் இருப்பதைக் காணலாம். இங்குமங்கும், கிராமங்களைவிட்டுப் போட்டியும், ஐக்கியமின்மையும், அரசியல் வாதங்களும் அபரிமிதமாய் உலவும் நகரங்களில், பழைய பழக்கங்கள் போய்விட்டதாகப் படலாம். சமூக வாழ்வில், தனி மனிதருக்கிடையே சரஸமான இன்ப வாழ்விற் கின்றியமையாததாய் என்றும் இருந்துவந்த அளவிற்கு இன்று அவை குறையவில்லை. என் நண்பர், இதற்கு வேறுபட்ட மனநிலையில், இதை அறிவதைப்போல அவ்வளவு எளிதில் வேறெவரும் இதை ஒத்துக்கொள்ளார். நான் 'திருவேணி'யில் எழுதியதிலிருந்து நம் எவர்க்கும் 'மாறுபடும் மனோநிலைகள்' பலவுண்டென்பது விளங்கும். அவர் இங்கு சொல்வதையெல்லாம் நானே வேறு மனநிலையில் கூறியிருக்கலாம். அதனால்தான் இதையெல்லாம் 'இரு மாறுபட்ட மனோநிலைகள்' என்கிறேன். நாம் வாழும் காலப்போக்கின் எதிரொலியாகும் இவை.

இந்தியன் பாங்க், லிமிடெட்.

(ஸ்தாபிதம் : 1907)

தலைமை ஆபீஸ் :—சென்னை, வடக்கு பீச் ரோட்.

லோகல் ஆபீசுகள் :

எஸ்பிளநேட்	: பிராட்வே	புரசைவாக்கம் :	புரசைவாக்கம் ஹைரோட்
திருவல்லிக்கேணி	: பெரிய தெரு	ராயப்பேட்டை :	பஜார் ரோட்
மைலாப்பூர்	: வடக்கு மாடவீதி	சௌகார்பேட்டை :	சைனா பஜார் ரோட்
தியாகராயநகர்	: பிரகாசம் ரோட்.		

பிராஞ்சுகள் :

அடோனி, ஆலப்பிழை, பெங்களூர், பெங்களூர் கண்டோன்மென்ட், பெஜவாடா, பம்பாய், கொச்சி, கோயம்பத்தூர், கொழும்பு, ஈரோடு, குண்டூர், காரைக்குடி, கும்பகோணம், மதுரை, புதுக்கோட்டை, கொல்லம், சேலம், திருநெல்வேலி, திருப்பூர், திருவாரூர், திருச்சூர், திருச்சினாப்பள்ளி, தூத்துக்குடி கள்ளிக்கோட்டை.

சப் ஆபீசுகள் : குடிவாடா, தெனாலி, பீமாவரம், ரேபள்ளி, தனுகு, துக்கிரிலா, நரசராவ்பேட்டை, தேவக்கோட்டை, உடுமலைப்பேட்டை, மருதெரு.

லண்டன் நியூயார்க் ஏஜண்டுகள் : **நேஷனல் ஸிடி பாங்க் ஆப் நியூயார்க்**

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	**47,92,800**
கோரப்பட்டு, செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	**12,79,280**
ரிஸர்வ்களும், மற்ற நிதிகளும்	ரூ.	**17,92,762**
ஷேர் ஹோல்டர்களின் ரிஸர்வ் பொறுப்புகள்	ரூ.	**35,19,520**
31—12—39-ல் வொர்க்கிங் பண்டுகள்	ரூ.	**4,70,31,536**

N. கோபால அய்யர், காரியதரிசி.

கிராம சேவா சங்கம்

('கௌண்டின்யன்')

'வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவது போலும்' என்பது வசனம். அதன் பொருளைத் தற்காலம் உலகப் போக்கில் எங்கும் காணலாம். காப்பி குடிக்க ஆசை யிருந்தும் கொட்டை வாங்கக் காசில்லாமல் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் நம் நாட்டில் நாக்கை சப்பிக் கொட்டிக் கொண்டிருக்க பிரேஸில் தேசத்தார் விலை கட்டவில்லை என்று 'டன்' 'டன்' ஆகக் காப்பிக் கொட்டையை சொக்கப்பானை கொளுத்துவது போல் எரித்ததாகக் கேட்டிருக்கிறோ மல்லவா? இவ்விதமே, 'வேலையில்லாத் திண்டாட்டம்' என்ற பெருங் கூச்சல் நாலாபுறமும் நம்காதைத்தாக்க, எத்தனைபேர்வந்தாலும் செய்து மாளாது என்று சொல்லும்படியான அவ்வளவு அலுவல் இந்தியத் தொண்டர்களை எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறது. தொண்டில் ஈடுபடும் பான்மை யுள்ளவர்களைத் தெரிந்தெடுத்து தேசசேவையில் சேர்ப்பதே சமூக முன்னேற்றத்தைக் கருதுவோர் நோக்கமாயிருத்தல் வேண்டும்.

கிராம முன்னேற்றம் என்ற மந்திரத்தை உச்சாடணம் பண்ணாதவர் இப்பொழுது அபூர்வம். ஆகிலும் எந்த கிராமத்திற்குச் சென்றாலும் முன்னேற்றத்தின் அறிகுறியே காணுவதற்கில்லை. கிராமப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டு, முதலிய ஆர்ப்பாட்டங்களுக்குக் குறைச்சலில்லை. இவைகளால் சண்டை சச்சரவுகள் விருத்தியடைகின்றனவே யொழிய, நன்மையே கிடையாது. வருஷப்பிறப்பன்றைய தினம் பிள்ளையார் கோயிலிலோ கூடிச் சுண்டலும் நீர்மோரும் பானகமும் வழங்கிய பின், அருகிலுள்ள பட்டணத்திலிருந்து அதற்கென்று விஜயம் செய்த பெரியார் அரிய சொற்பொழிவு நடத்திக் கேட்டு எல்லோரும் கரகோஷம் செய்து வீடு சேர்ந்தால், கிராம புனருத்தாரணத்தைப் பற்றி அன்று கட்டின மனக்கோட்டைகள் அடுத்த வருஷப் பிறப்பன்றும், அழியாத மனக்கோட்டைகளாகவே நிற்கின்றன. ஒரு வேளை, நம் தக்ஷிண தேசத்திற்குரிய ஆரம்ப சூரத்தனமாய் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடமோ, தண்ணீர்ப் பந்தலோ, வீதி விளக்கோ ஏற்பாடு செய்தோமேயாகில், சுமார் ஒரு வாரம் வெகு மும்முரமாக நடக்கும். இதைக் கண்டு சந்தோஷித்த ஒருவன் ஒரு மாதம் ஊரைவிட்டு வெளியே போய்த் திரும்பி வந்தால், தண்ணீர் பந்தலிருந்த விடத்தில் மோர்ப்பானையைக் கூட காண்பது துர்லபம். வீதி விளக்கில் இரண்டு பக்கத்து கண்ணாடி உடைந்திருப்பதும் தவிர, சிம்மனியை யார் வீட்டிலாவது ஸ்வாதீனமாய் உபயோகப்படுத்திக் கொண்டிருப்பதை விசாரித்துக் கண்டு பிடிக்கலாம். பள்ளிக்கூடத்து மாணாக்கர்களோ, உபாத்தியாயர் உபத்திரவம் இல்லாமல் மண்ணைக் குழைத்து விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

பொதுக் காரியங்களில் நீடித்த உற்சாகமும் விடா முயற்சியும் இல்லாததாலே தான் எந்தச் சீர்திருத்தமும் கைகூடாமல் போவது. ஒவ்வொருவனுக்கு பொதுக் காரியமும், தன் காரியம் என்று பார்க்கும் தன்மையும் சித்தித்தால்தான் தேசத்திற்கு விமோசனம். இந்த உணர்ச்சியை உண்டு பண்ண ஆங்காங்கு பொது நல உழைப்பே தன் கருமமாகக் கொண்ட ஒருவன் குடியேறி, அந்தச் சுற்று வட்டத்தில் உள்ள ஜனங்களுக்கு, யாதொரு பிரதிப் பிரயோஜனத்தையும் எதிர் பாராமல், தன்னால் இயன்ற மட்டும் எல்லாத் துறைகளிலும் ஹிதம் செய்து, பொது வாழ்க்கை என்னும் அனுபவத்தை அவர்கள் அடைய ஒரு வழிகாட்டியாய் நிற்றல் அவசியம். புது வெள்ளம் கரை புரண்டு வர, அது பயன் படாமல் சமுத்திரத்தை

யடையாதபடி நீர்த்தேக்கங்களில் தேக்கி விவசாயத்திற்கு உதவும்படி செய்வது போல், அவ்வப்பொழுது எழும்பி மறையும் குணமுள்ள நம்மவர் உற்சாகத்தைத் தேக்கிப் பாய்ச்சுவதே இவர்கள் கடமையாகும்.

இவ்வரிய சேவை செய்யப் போந்தவர் எத்தகைமை வாய்ந்தவரா யிருத்தல் வேண்டும்? நல்ல அறிவாளிகளாயும் படிப்பாளிகளாயும் இருப்பதோடுகூடச் சாமான்ய ஜீவனத்தைக்கொண்டு திருப்தியடைபவர்களாயும் இருக்கவேண்டும். பீ.ஏ. வரையில் படித்தவர்களாய் இருந்தால், ஒருவருஷகாலம் இதற்கென்று ஏற்படுத்தப்படும் 'டிரெயினிங் காலேஜு'களில், சுகாதாரம், கூட்டுறவு முதலிய கிராம முன்னேற்றத்துக்கு இன்றியமையாத சாதனங்களில் பயிற்சிபெறச் செய்யலாம். இவ்விதம் தயாரானவர்களிலிருந்து சுமார் 2000 ஜனங்களுக்கு மேற்படாதபடி ஒவ்வொரு ஜில்லாவையும் பல கிராமப் பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு கிராம அத்தியக்ஷர் நியமிக்க வேண்டும். தன் எல்லைக்குட்பட்ட கிராமமோ, கிராம சமூகமோ அதில் இருக்கும் ஜனங்களின் ஒவ்வொருவரையும் நேரிடைப் பழக்கம் செய்து, அவரவர்க்குத் தன் அறிவாலும் படிப்பாலும் செய்ய நேரும் உதவியை ஆயாசமின்றிச் செய்து அவர்கள் தன்னிடத்தில் பூரண நம்பிக்கையும் விசுவாசமும் உள்ளவர்களாய்ச் செய்துகொள்வதே அத்தியக்ஷர்களின் முதல் கடமையாகும். இப்படிச் செய்து கொண்டால் பொது நன்மைக்காகச் செய்யும் முயற்சிகளில் கிராமத்தாரை ஈடுபடச் செய்வது சாத்தியமாகும். அவர்களுக்குச் சிரமம் அதிகமாய் ஏற்படாதபடி வரி வாய்தா என்று அடிக்கடி கேட்காமல், லாபகரமான காரியங்களைக் காட்டி அவ்வழியில் கிடைக்கும் லாபத்தில் ஒரு பகுதியைக் கிராம வசதிகளுக்கென்று உபயோகப்படுத்தும் பழக்கத்தைக் கற்பிக்க வேண்டும். ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தால் அதற்குப் பிள்ளைகள் குறைவில்லாமல் தன் முயற்சியால் சேர்க்க வேண்டும். நம் நாட்டின் ஏழ்மையின் காரணமாக, கிராமந்தோறும் வைத்திய சாலை ஏற்படுத்துவதென்பது அசாத்தியமானபடியால், சொற்ப செலவில் சிகிச்சை செய்யும் நாட்டு வைத்தியர்களை அங்கங்கே வந்து தங்கும்படி செய்து அவர்கள் காலக்ஷேபத்திற்கு வருஷ வர்த்தனையாகக் கிராமத்தாரைச் சமுதாய நிலங்களிலிருந்து வருவாய் கொடுக்கச்சொல்லி அமர்த்துவதோடும் கூட, ஜுரம், வாந்திபேதி, விஷக்கடி முதலிய உபத்திரவங்களுக்குப் பிரயோசனப்படும் கைமருந்துகளை தானே வைத்துக் கொண்டு அவசர சமயத்தில் கொடுத்து உதவவேண்டும். ஊர் வீதிகளையும் பொது ஸ்தலங்களையும் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்து, வெளிச்சம் முதலிய வசதிகள் செய்யப் பஞ்சாயத்துக்கள் இருக்கும் இடங்களில் அந்தப் பஞ்சாயத்து வேலைக்காரர்கள் தங்கள் வேலைகளை ஒழுங்காய்ச் செய்கிறார்களா என்று கவனிப்பதோடு, தெருக்களில் அசுத்தம் செய்வது, அழுக்குத் துணிகளைக் குடிநீர்க் குளங்களில் தோய்ப்பது முதலிய கெட்ட பழக்கங்கள் நீங்கத் தன் நடத்தையாலும், சமயோசிதமான புத்திமதியாலும் ஜனங்கள் மனத்தையும் பழக்கங்களையும் திருத்தவேண்டும். வெட்டிப் பேச்சிலும், சீட்டாட்டம் முதலிய வீண் காரியங்களிலும் போகும் பொழுதை நல்ல பழக்கங்களிலும் லாபகரமான முயற்சிகளிலும் திருப்புவதே மற்றக் கடமைகளிலும் மேலானது. அதிகமுதல் தேவையில்லாததும், ஒழிவு நேரங்களில் செய்யக்கூடியதும், சுலபமாய் விலை போகக் கூடியதுமான கைத்தொழில்களைப் பிரசாரம் செய்து கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தி அவைகள் மூலம் தொழிலுக்கு வேண்டிய சாமான்களை மலிவாய் வாங்கவும், செப்பனிட்ட சாமான்களை லாபத்திற்கு விற்கவும் கிராமத்தாரைப் பழக்க வேண்டும். இரவிலும் மற்றும் ஒழிந்த நேரங்களிலும் ராமாயணம், பாரதம் முதலிய இதிஹாஸம், புராணம், தர்மசாஸ்திரமென்ற கிரந்தங்களை, படிப்பதும், வாக்கு வன்மையுள்ள புத்திமான்களைக் கொண்டு பிரசங்கிக்கச் செய்வதோடு,

"நான் இப்பொழுது ஸன்லைட் சோப் உபயோகிக்கிறேன் — அது துணிகளை நன்றாகச் சுத்தம் செய்கிறது.

என் பக்கத்து வீட்டுக்காரியின் துணிகள் எப்பொழுதும் என் துணிகளைவிட எவ்வளவோ சுத்தமாய் இருந்தன. அவள் ஸன்லைட் சோப் உபயோகிப்பது எனக்குப் பிறகு தெரியவந்தது. 'ஸன்லைட் சோப் உபயோகிக்க ஆரம்பித்த பிறகுதான் துணிகளைச் சலவை செய்தாற் போல் இருக்கிறது. ஏனென்றால் சோப்பில் உண்டாகும் நுரைதான் அழுக்கைப் போக்குகிறது. இந்த நுரையை ஸன்லைட் சோப் ஏதேஷ்டமாகக் கொடுக்கிறது.' என்று அவள் கூறினாள்.

நானும் என் துணிகளில் இப்பொழுது ஒரு பெரிய மாறுதலைக் காண்கிறேன். ஸன்லைட் சோப்பின் உதவியால் அவை பளிச்சென்ற வெண்மையுடன் விளங்குகின்றன."

ஸன்லைட் சோப்

தூய்மையான தாவர எண்ணெய்களை மட்டும் கொண்டு இந்தியாவில் தயார்செய்யப்படுவது

LEVER BROTHERS (INDIA) LIMITED S. 14-50 TM

உலக வர்த்தமானங்களையும் ராஜீய விஷயங்களையும், மேல் நாடுகளில் ஜன சமூக முன்னேற்றத்திற்காகக் கையாளப்படும் முறைகளையும், தெளிவாயும் நிஷ்பக்ஷபாதமாயும், புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் ஆதாரமாய்க் கொண்டு போதிக்க வேண்டும். இது காரணம் பற்றியே அத்தியக்ஷர் ராஜீயக் கக்ஷிகள் யாதொன்றிலும் தான் அங்கத்தினராய்ச் சேராமலும், சம்பந்தப்படாமலும், பஞ்சாயத்து முதல் சட்டசபை வரை பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் கூடின எந்த சபைக்கும் அபேக்ஷகராக நிற்பதில்லை என்ற கட்டுப்பாட்டுக்குட்பட்டவராயுமிருப்பது அவசியம்.

இத்தகைய தொண்டர் ஜீவிப்ப தெப்படி, என்ற கேள்வி நியாயமாய் ஏற்படுமல்லவா? அதற்கு இருவித பதில் அளிக்கலாம். அரசாங்கத்தார் கிராம முன்னேற்றத்தில் அக்கரையுள்ளவர்களாகில், ஒவ்வொரு மாகாணத்திலும் சேவாசங்கம் ஏற்படுத்தித் தொண்டர்களுக்கு மாதச் சம்பளம் போட்டு, அவர்கள் செய்யும் வேலையைப் பார்வையிட மேலதிகாரிகளும் நியமிக்கவேண்டும். இதனால் ஆகும் செலவு இப்பொழுது ராஜாங்க சிப்பந்திகளுக்குக் கொடுக்கும் சம்பளம் வகையறாச் செலவில் எட்டில் ஒன்று ஆகாது. இவ்வியக்கம் செலவைவிட நூறுமடங்கு லாபத்தையும் தேசத்திற்கு உண்டுபண்ணும். இந்த நோக்கத்துடன்தான் ஐக்கிய மாகாணத்தில் காங்கிரஸ் மாஜி பிரதம மந்திரியும், தீர்க்க தரிசியுமான ஸ்ரீ பண்டித வல்லபபந்த் கிராம சேவக சர்விஸ் ஒன்று ஏற்பாடு செய்துவந்தார்.

தற்காலம் இருக்கும் நிலைமையில் அரசாங்கத்தில் இம்முயற்சி நடக்குமென்றெண்ணுவதற் கிடமில்லை. ஆகையால், சமூக முயற்சியால்தான் இது நடத்தல் வேண்டும். யாதொரு ராஜீயக் கக்ஷிக்குப் சம்பந்தமில்லாத கிராம சேவா சங்கம் ஒன்று ஏற்படுத்தி, ஒவ்வொரு கிராமத்திலும் பிரசாரம் செய்து, அங்கங்கே மானியங்கள் விடச்செய்து அந்த மானியத்தின் வருவாயைக்கொண்டு அத்தியக்ஷர் தன் சொந்த காலக்ஷேபத்தை நடத்தும்படியான திட்டம் செய்தல்வேண்டும். இது சுலபமாய் ஆகக்கூடியதல்ல வென்றாலும், விடா முயற்சியும் ஊக்கமும் இருந்தால் இதைச் சாதிக்கலாம். இப்படிச் செய்தாலொழிய, கிராமாந்தரங்களிலுள்ள அஞ்ஞானம், ஏழ்மை என்ற இருள் அகன்று, க்ஷேமம் உண்டாகாது என்பது திண்ணம்.

மயிர் உதிர்வதை உடனே
நிறுத்தாவிட்டால் வழுக்கைத் தலைதான்

இன்றே
கேஸ்ரின்
வாங்கி, உங்கள் கேசத்தை அழகு
படுத்துங்கள்
ஒரு புட்டி 12 அணு
எல்லா ஷாப்பிலும் கிடைக்கும்
விக்டோரியா டிபோ
வடக்கு மாடவீதி, மைலாப்பூர்
சென்னை.

ராம்கார் காங்கிரஸ் பொருட் காட்சி

(ஆர். சந்திரசூடன், பி. எஸ்ஸி.)

காங்கிரஸ் மகா சபை இன்றைக்கு 53 வருடங்களாக வருட மொருமுறை அனேகமாகக் கூடிவந்த போதிலும், 20 வருடங்களாகத்தான் இம்மாதிரிப் பொருட்காட்சிகள் நடைபெற்று வருகின்றன. காங்கிரஸ் ஸ்தாபகர்களே நம் தேசத்தின் சுதந்திரப் போராட்டத்திற்குப் பொருளாதாரச் சுயேச்சையும் அத்யாவசியம் என்று நன்கு தெரிந்துகொண்டிருந்தனர். புராதின கைத்தொழில்களுக்குப் புத்துயிர் கொடுத்து, குடிசைத் தொழில்கள் பல நூதனமாக அவ்வவ்விடங்களுக்குத் தக்கவாறு ஏற்படுத்தினல், ஜனங்கள் சிறிது சிறிதாகச் செல்வாக்கு பெற்று, மனோ தைரியமும், உடல் வலிவும் பெற்று, சுயேச்சைப் போராட்டத்திற்குத் தகுதியான போர்வீரர்கள் ஆவார்கள் என்று உணர்ந்தனர். இதனல் வருடா வருடம் காங்கிரஸ் மகா சபை கூடுவதுடன், தொழில்கள் சபை (Industrial Conference)யும் கூடிவந்தது. இச்சபையின் பின் வளர்ப்பாக பொருட்காட்சியும் ஏற்படுத்துவதாகத் தீர்மானம் செய்யப்பட்டது.

பின்னர் தொழில்கள் மகாநாடு, காங்கிரஸ் கூட்டத்துடன் கூடி அந்த அவசர நேரங்களில் சில தீர்மானங்களே நிறைவேற்றிமட்டும் போவது நல்லதல்ல, பலனல்ல என்றும், அதற்காகத் தனியாக, மற்ற நெருக்கடிகள் இல்லாத சமயத்தில் வைத்துக்கொள்ளுவதுதான் உசிதம் என்றும் நிச்சயித்துத் தொழில் மகாநாடு

உயிர், உடைமைகளின் பூரண இன்ஷுரன்ஸ் பாதுகாப்பிற்குச் சிறந்தது

நேஷனல் இன்ஷுரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

(1906-ல் ஸ்தாபிதம்) (தலைமை ஆபீஸ்: கல்கத்தா)

அத்துடன்

நேஷனல் பையர் & ஜெனரல் இன்ஷுரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ்: கல்கத்தா)

மதராஸ் பிராஞ்சு:

நேஷனல் இன்ஷுரன்ஸ் பில்டிங்ஸ்,

362, சைனபஜார் ரோடு, எஸ்பிளநேட், மதராஸ்.

கிளை ஆபீஸ்:
171, புதுத்தெரு,
மதுரை.

கிளை ஆபீஸ்:
5, கெம்பேகௌடா ரோடு,
பெங்களூர்.

கூடும் நேரத்தைத் தள்ளி வைத்துக் கொண்டனர்.

மகாத்மா காந்தி அரசியலில் புகுவதன் முன் காங்கிரஸ் பொருட் காட்சியில் இந்தியாவில் உற்பத்தியாகும் எல்லாப் பொருட்களையும் காட்சியில் வைத்து வந்தனர். இந்தியருடைய முதல், அன்னியர் முதல் என்ற பாகுபாடும், இயந்திர உற்பத்தி குடிசைத் தொழில் உற்பத்தி, என்ற வேற்றுமையும் இல்லாமல் இருந்தது. காந்தியடிகள் வந்த பின்னரே ஒரு பெரிய மாறுதல் பொருட்காட்சியில் ஏற்பட்டது. குடிசைத் தொழிலும், கதரும், காட்சியில் முதன்மை ஸ்தானம் பெற்றன. இயந்திர உற்பத்தி சாமான்கள் பின்னணியில்தான் இடம் பெற்றன. அந்நாளிலிருந்து, அதாவது 1920 இலிருந்து, இதுவரை அந்த நோக்கத்துடனேயே காங்கிரஸ் பொருட்காட்சி நடந்துவருகிறது. நாளுக்கு நாள், வருடத்திற்கு வருடம், இந்த காட்சி இயக்கம் வலுத்துவருகிறது.

ராம்கார் காங்கிரஸ் பொருட்காட்சி முன் வருடங்களைக் காட்டிலும் விமரிசையாகவும், பிரயோசன முள்ளதாகவும் இருந்தது. சுமார் ஒரு லட்சம் ஜனங்கள் காட்சியைப் பார்வை யிட்டனர். இவ்வருடத்திய பொருட்காட்சியின் முக்கிய நோக்கம் யாதெனில், நமது புராதன கைத் தொழில்களும், வழக்கங்களுமே நமக்கு உகந்தவை யென்றும், மேல் நாட்டு நாகரிகமும் அவர்களது அருவருக்கத்தக்க பழக்க வழக்கங்களும் நமக்கு ஏற்றவையல்ல என்பதை நம்மனத்தில் பதிய வைக்க வேண்டு மென்பதே. இந் நோக்கத்திற்கு ஒக்க, பொருட் காட்சியில் குடிசை கட்டுவதற்கு நம் நாட்டில் அங்கங்கு அகப்படும் சாமான்களின் உபயோகம், கிராம சுகாதாரம், முதலியவைகளைப் பற்றிய சாலைகள் விசிடர்களால் (visitors) நன்கு கவனிக்கப் பட்டன.

இத்துடன் கூட, கதர்ச் சாலைகளும், இந்திய சோப், இரும்பு, பித்தளை சாமான்கள், தந்த சாமான்கள் முதலியனவும் வெவ்வேறுவித மண்பாத்திரக் கடைகளும் பார்க்க வெகு நேர்த்தியாக இருந்தன. சரித்திரங்களில் பெயர் போன டாக்கா மஸ்லின் துணி அங்கு நேரில் கண்ணால் பார்த்தபொழுது, நம்மை இந்த ஆங்கில அரசாட்சியும், நாகரிகமும் எவ்வளவு தூரம் முட மாக்கி விட்டன என்பது தெளிது விளங்கிற்று. படக்காட்சிச் சாலையும் இவ்வருடம் அதிக கூட்டத்தை ஆகர்ஷித்தது.

பொருட்காட்சிச் சாலையை ஒரு முறை நன்கு சுற்றிப் பார்த்து விட்டு வெளியில் வரும் ஒவ்வொரு இந்தியனுக்கும் இவ் வெண்ணமே தோன்றிற்று என்பது திண்ணம். "இக்காட்சிச் சாலை வெளிநாடுகளிலன்றோ நம் நாகரிகத்தையும் அதனுடைய மகிமையையும் பரவ அவசியமானது. நம் நாட்டிலேயே இதை மறந்த சின்னங்களாகக் காட்டுவது நமக்குப் பெருத்த அவமான மல்லவா?" ஆனால் நாம் மனம் தேறுவது எப்படி யென்றால், 'பழைய நாகரிகத்தை இம்மாதிரிக் காட்சி சாலைகள் முலம் ஏராளமாக நாட்டில் ஸ்தாபித்து நாட்டினருக்குப் புத்தி புகட்ட இடமிருக்கிறதே' என்றுதான்.

மன்னார்குடி டி. முன்சீப் கோர்ட்டு

1940ஞ O. S. No. 9

சுந்தரேசய்யர்—வாதி

மு. மெ. மெய்யப்பச் செட்டியார்—
பிரதிவாதி

ஷை நெம்பரில் ரூ. 353-13-9க்கு வாதியால் பிராமிசரின் நோட்டின் பேரில் தாவா துடரப்பட்டு, வாதியின் மனுவின்பேரில் Substituted service-க்கு உத்திரவாகி ம. டி. மு. கோர்ட்டில் 30-4-1940ல் ஷை நெம்பர் ஈரங்கி போடப்பட்டிருக்கும் விவரம் அறியவும்.

J. Rajagopalaiyer, B.A., B.L.
Pleader for Plaintiff.

முதலைக் கண்ணீர்

பாரதமணி பத்திரிகாசிரியருக்கு:—

இன்று வெளிவந்த பாரதமணியின் 74-வது முத்திலே 'அதிகப் பிரஸங்கம்' என்ற தலைப்பின் கீழ், 'அதிகப் பிரஸங்கி' சென்னையிலே 'இரு பத்திராதிபர்கள் புரியும் கொடும் போரிலே' என்னையும் இழுக்கப் பார்க்கிறார். 'அதிகப்பிரஸங்கி' யைப் போலவே, 'மாயக் கூத்தனுக்கும்' இவர்கள் யுத்தம் செய்வதில் ஆக்ஷேபனையே இல்லை. ஆனால் கம்பனை நான் வம்புசெய்வதாக இந்த 'அதிகப் பிரஸங்கி' கொள்வதையே நான் ஆக்ஷேபிக்கிறேன்.

கவிகளின் கற்பனா விசித்திரங்களைக் கண்டு மகிழ்ந்து நான் கண்டபடியே பிறருக்குக் காட்டி இன்புற வேண்டுமென்ற அவா ஒன்றே என்னைக் கட்டுரை எழுதும் துறையிலே இறக்கியது! தற்கால நாடகமேடைகளிலேபோல கம்பராமாயணத்திலே 'ஸ்ரீ ராமருக்கும் சூர்ப்பனகைக்கும் தர்க்கம் நடக்கிறது' என்று நான் எழுதியதற்குக் காரணம் கம்பரது பாடல்கள் அவ்வாறு இருப்பதை அறிந்து நான் இன்புற்றதேயாகும். தற்கால நாடகமேடை நிகழ்ச்சிகளை இழிவாகவும் ஆபாஸமாகவும் கருதுவதற்கு நான் யார்? நான் தற்கால நாடகங்களை எழுதுபவன் அல்லன்; அவற்றைச்சிலாகித்தோ தூஷித்தோ விமர்சனம் எழுதுவதும் என் தொழில் அல்ல; சில மேதாவிகளைப் போல, வால்மீகியையும் கம்பனையும் சீர்தூக்கி, 'வால்மீகி இங்குப் பிசகி விட்டான்' என்றோ 'வால்மீகிக்கு நாடகத்திறமை யில்லை' என்றோ, 'கம்பனுக்குக் கவிபாடத் தெரியாது' என்றோ, 'கம்பனைவிட உயர்ந்த கவி உலகிலேயே எங்கும் எக்காலத்திலும் எம்மொழியிலும் கண்டதில்லை' என்றோ எழுதவும் பேசவும் என்னால் இயலாது. வால்மீகி எங்கே? கம்பன் எங்கே? என்னுடைய 'பெரிய பேதைமைச் சின்மதி' எங்கே?

இன்னொரு சிறு விஷயம்: 'மாயக் கூத்தன்' பல்லாண்டுகளாகப் பல பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதிவருகிறான். அவன் ஒரு பத்திரிகைக்கும் அடிமைப்பட்டவன் அல்லன். ' 'சில்பஸ்ரீ' க்குப் போலவே, 'ஆனந்த விகடனுக்கும்' எழுதுவதுண்டு. ஆதலால், 'அதிகப் பிரஸங்கி' சில்பஸ்ரீ பத்திராதிபருக்குப் பக்கபலமாக 'மாயக் கூத்தன்' சூர்ப்பனகை என்னும் கட்டுரையை எழுதி அப்பத்திராதிபரைக் கேலிக் கூத்துக்கு ஆளாக்கினான் என்று கூறுவது அதிகப் பிரஸங்கித் தனமே யாகும். 'சில்பஸ்ரீ' ராமசந்திரனும் அந்த ராமசந்திரனைப் போலவே அசகாய சூரன் என்பதையும் அவருக்குப் பக்கபலம் வேண்டியதில்லை என்றும் 'அதிகப் பிரஸங்கி' க்குத் தெரியாது போலும். என் கட்டுரை அவரைக் கேலிக் கூத்துக்கு ஆளாக்கு மென்று அவர் கருதினால், அதை அவர் பதிப்பித்திருக்க மாட்டாரன்றோ? அறியாது பதிப்பித்துத் தமக்குக் கேடு விளைத்துக் கொண்டார் என்று சில்பஸ்ரீ பத்திராதிபரின்மேல் அனுதாபங் கொண்டு எவ்வளவு கண்ணீர் வடிக்கிறார் இந்த 'அதிகப் பிரஸங்கி'?

மாயக் கூத்தன்

நந்தவனமும், குரங்குகளும்

பிரம்மதத்தன் காசியில் அரசு புரியும் காலத்தில் ஓர் திருவிழா தினம். ஜனங்களெல்லோரும புது உடுப்புக்களணிந்து, சந்தன புஷ்ப பரிமளம் வீச, மிகக் கொண்டாட்டத்துடன், நிருத்திய கீதங்களனுபவித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது அந்நகரில் ஒரு பூந்தோட்டக் காப்பானும் கொண்டாட்டத்தில் களும் சரி, என்று ஒப்புக் கொண்டன. காவற்காரன் திருவிழாவுக்குச் சென்ருன்.

பிறகு, குரங்குகள் காவடி காவடியாய் ஜலமெடுத்து வந்தன. அதோடு ஜலத்தை சிக்கனமா யுபயோகிக்க விரும்பின. அதனுல் ஒவ்வொரு செடிக்கும் எவ்வளவு நீர்



கலந்துகொள்ள விரும்பினன். ஆயினும், செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டுமல்லவா ? அங்குள்ள குரங்குக்கூட்டத் தலைவனைக் கூப்பிட்டான். "தோட்டத்திலுள்ள பழங்களைத் தினமும் சாப்பிடும் நீங்கள், இன்று மட்டும் பாய்ச்சினுல் நான் லீவு பெறுவேன்" என்ருன். அவனிடம் விசுவாஸமுள்ள குரங்கு அவசியமென்று அறிய, செடிகளை வேரோடு பறித்து வேர்ப் பரிமாணத்தைக் கவனிக்கலாயின. அப்பொழுதுதான் திரும்பிவந்த தோட்டக்காரன் அதைக்கண்டு, குய்யோ முறையோ வென்று கத்தினன். "குரங்குகள் கையில் பூந்தோட்டத்தைவிட்டு, மோசம் போனேனே........" என்று வருந்தினன்.

பெற்றோர் பெருமை

[வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி]

(1) இந்தமா உலகினும் ஈன்றவள் பெரியவள்
அந்தவா னுலகினும் அளித்தவன் பெரியவன்
உந்துகா லதனினும் உள்ளமே பெரிததில்
வந்துசேர் துயரமே மாபெரி தெவர்க்குமே!

(2) அன்னையை யனையநல் லாதர வொன்றிலை
அன்னையை நிகர்கதி ஆவதும் ஒன்றிலை
அன்னையைப் போல்நமை ஆதரிப் பாரிலை
அன்னையை யேய்ந்தவோர் அன்புடை யவல்லை!

(3) தந்தையே புண்ணியம் தந்தையே நல்கதி
தந்தையே உயர்தவம் தந்தையே உயர்சிவம்
தந்தைநெஞ் சுவந்திடத் தன்கடன் செய்திடின்
சிந்தைநன் குவந்தருள் செய்யுமெத் தேவுமே!

(4) சற்குரு மகிழ்வொடு சாற்றிடும் நன்மொழி
நற்கதி நல்கிடும் நல்லறஞ் சார்ந்ததாம்
பற்பல குருவினும் பாரினில் மிக்கவள்
பொற்புற ஈன்றருள் புரிந்திடும் அன்னையே!

(5) நாடுநற் குணத்தொடு நாளுமீன் றவர்க்கிதம்
தேடுஞ்சே யெவரினும் சிறியவ னாயினும்
கூடுஞ்சி ரெவையுமே கொள்ளுமாண் பினனவன்
கேடிலா உயரிய கேண்மைய னாமவன்

(6) பெற்றவ ரெவரினும் பெரியவ ரவர்க்கிதம்
உற்றநற் பணிவிடை உவப்புடன் செய்திடின்
மற்றதன் மேலதாய் வழங்குமோர் நல்லறம்
பொற்றரை மீதிலை போதனை காணிதே!

(7) இவ்வுல கத்தவர் எவரிடுஞ் சாபமும்
செவ்விய நற்பரி காரத்தில் தீர்வதாம்
எவ்வமில் அன்னைநெஞ் செரிந்துசொல் சூளுரை
வவ்வுறு தகற்றிட வழியதே தொன்றிலை!

(8) ஓங்கிய மரத்திருந் தொருகனி வீழ்ந்திடும்
பாங்கியல் செடியிருந் தொருமலர் பார்விழும்
தாங்கியல் தந்தைதன் தனயன்மேல் வைத்திடும்
தீங்கில தாமன்பு தீர்வதில் என்றுமே!

நோயாளிகளுக்கு ஒரு வார்த்தை

[பே. நா. அப்புஸ்வாமி]

'நோயாளிகளுக்கு ஒரு வார்த்தை. நோயற்றவர்களும் வந்து கேட்கலாம்' என்று ஒரு விளம்பரம் போட்டிருந்தது. மிகவும் பிரக்கியாதி பெற்ற டாக்டர் ஒருவர் பேசப் போகிறார் என்பது குறித்திருந்தது. எனக்குப் போய்க் கேட்க வேண்டுமென்று ஆசை.

முதன் முதலில் நான் நோயாளியா? நோயாளி அன்றா? என்பதே சந்தேகத்தில் வந்துவிட்டது. எனக்குத் தலைவலி, கால் வலி, வயிற்று வலி, முதலிய வலிகளும் பலவிதமான நோய்களும் வந்ததுண்டு. வைத்தியப் புஸ்தகத்தைப் படிப்பதற்குப் பதிலாக என்னுடைய சுய சரிதையைப் படித்தால் போதுமென்று என்னிடம் ஒரு சமயம் ஒரு டாக்டர் சொன்னதுண்டு. என் சுய சரிதையை ஒரு காலத்தில் எழுதலாமென்பதும் உத்தேசம் தான். அது எப்படியிருந்தாலும், பேசுகிறவர் கெட்டிக்காரர். போய்க் கேட்கலாமென்று போனேன். அவர் சொல்லியதைக் கேட்டு, அப்படியே எழுதி யிருக்கிறேன். டாக்டர் சொன்னதாவது:—

நான் இன்று நீரிழிவு நோயைப்பற்றிப் பேசப் போகிறேன். உடலிலுள்ள உறுப்புக்களில் ஒன்றாகிய குண்டிக்காய் நோயுறுவதால் தான் நீரிழிவு என்னும் ரோகம் உண்டாகிறது என்று பலர் நினைக்கிறார்கள். இது தவறான எண்ணம். இந்த நோயானது உணவை யொட்டிய நோய் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில், உண்ணும் உணவின் பகுதியை நம்முடைய உடலானது பயன் படுத்திக் கொள்ள முடியாது திறமை யற்றுப் போகும் ஒரு சீர்கேடான நிலையில்தான் இந்நோய் ஏற்படுகிறது.

நாம் சாப்பிடும் உணவில் பேர்பாதிக்கு மேல் கார்போ-ஹைட்ரேட் வஸ்துவாக இருக்கிறது. கார்போ-ஹைட்ரேட் என்னும் ஆங்கிலச் சொல் மாப்பொருளையும் சர்க்கரைப் பொருளையும் குறிக்கும். உணவிலுள்ள மாப்பொருள், உடலிலே புகுந்த பின், சீரணமாகும்போது, சர்க்கரைப் பொருளாக மாறுகிறது. ஆதலால் மாப் பொருளும் யதார்த்தத்தில் சர்க்கரைப் பொருளே யாகும். நீரிழிவு நோயுற்ற ஒருவனுடைய உடலிலே செலுத்தப் படும் இந்தக் கார்போ-ஹைட்ரேட்டானது உடலோடு ஒட்டுவதில்லை. உடலால் பயன் படுத்தப்படுவதில்லை. வெறுமனே குவியத் தொடங்குகிறது—அடுப்பிலிட்ட வறட்டியிலுள்ள கல்லும் கட்டியும் எரியாமல் அடுப்பினுள் குவிந்து அடுப்பை நிரப்புவது போல. இப்படி உபயோகமற்றுக் குவியும் மாப்பொருளை—சர்க்கரையை—குண்டிக்காயானது முயன்று முயன்று, சிறு நீரின் வழியாய், உடலை விட்டு வெளியே அகற்றுகிறது. இந்த மாப்பொருளினால் உடலுக்கு யாதொரு பிரயோஜனமும் இல்லை. இதைச் சாப்பிடுவதும், சீரணிக்க முயலுவதும், வெளி யேற்றுவதும் உடலுக்கு ஏற்படும் வீண் வேலை. யாராவது எரியாத விறகை அடுப்பில் மேன்மேலும் இட்டு இட்டு, எரியாது குவியும் குப்பையை வாரி வாரி வெளியே போட்டுக் கொண்டே யிருப்பார்களா? அதைப் போலவேதான் உடலை யொட்டிய இந்த வீண் வேலை ஒன்றையும் கவனிக்காமல் வழக்கம் போல் சாப்பிட்டுக்கொண்டே போனால், நாள் ஒன்றுக்கு ஒரு பவுண்டு எடையுள்ள சர்க்கரை வீதம் மூத்திரத்தின் வழி வெளியேற்ற வேண்டி வரும்.

உடலிலே எரிக்கப்படாத — சீரணிக்காத — சர்க்கரை வீணாய் பயனற்ற கழிவுப் பொருள் என்பது மட்டுமல்ல. உடலானது பயன்படுத்தக்கூடிய அளவுக்குமேல் நித்தியப்படி சர்க்கரையையும் மாப் பொருளையும் சாப்பிட்டுக் கொண்டே போனால், சிறிது காலத்துக்குப் பிறகு அவற்றி லிருந்து சில விஷ வஸ்துக்கள் உடலில் உண்டாக்கப் படுகின்றன. இவ்

விஷப் பொருள்கள் நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக தங்கித் தங்கித் திரண்டு குவிந்து, உடலிலே அதிகமாகி மிகுந்து விடுகின்றன. அதனால் உடல் நஞ்சுறுகிறது. உடலுக்கு மயக்கம் உண்டாகிறது. நோயாளி தூக்கத்தில் ஆழ்கிறான். உரிய காலத்தில் சரியான சிகிச்சை செய்து அவனைக் காப்பாற்றினாலன்றி, அவனுடைய தூக்கம் தீராத் தூக்கமாகி விடுகிறது.

நீரிழிவு நோயோடு போராடுவதில் வைத்தியனுக்குப் பெரிய அசௌகரியம் ஒன்று இருக்கிறது. சாதாரணமான நோய்களில் எல்லாம் ஏதாவது நோவு இருந்து கொண்டே இருக்கும். சாதாரணமாக, நீரிழிவு நோயிலே நோவு கிடையாது. நோவு இருந்தால்தான் உடலில் நோய் இருக்கிறது என்கிற உணர்ச்சியை நாம் பெறுகிறோம். நோயை அகற்றி நோவைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற முயற்சியும் அப்பொழுதுதான் உண்டாகும். இந்தக் கொடிய நோயிலோவெனில், விசேஷமான நோவு ஒன்றும் இருப்பதில்லை. அதனால் தன்னுடைய உடலின் நிலைமையை மட்டிலும் கொண்டு நோயாளி தன்னுடைய உடல் நிலை ஒன்றையும் உணருவதற்கு இடமில்லை. தன்னுடைய அறிவும் தனக்கு முந்தி உள்ள நல்ல நிலையின் நினைவும், பிறருடைய அனுபவங்களுமே நோயாளிக்குத் தன் நிலைமையை உணர்த்தவல்லனவா யிருக்கின்றன. நீரிழிவு நோயினுங்கூடச் சிற்சில வேளைகளில் நோவுள்ள நிலைமைகள் ஏற்படுவதுண்டு. கால்வலி, பாதத்திலே தாங்க முடியாத வலி, உடம்பெல்லாம் அரிப்பு, கொப்புளங்கள், இவை போன்றவைகளால் நோவு உண்டாகலாம். ஆனால் நீரிழிவு நோயுற்றவன் ஒருவனுக்கு இவ்விதமான சங்கடங்களெல்லாம் உண்டாகித்தான் ஆக வேண்டும் என்பதில்லை. பொதுவாக என்ன நடக்கிறது என்றால், இந்நோயுற்ற ஒருவன் "களைப்பு வருகிறது" "அலுப்பாயிருக்கிறது", என்று சொல்லுவதைத் தவிர வேறொரு கஷ்டத்துக்கும் உள்ளாவதில்லை. சாகும் வரை அவன் வேறெந்தவிதமான கஷ்டத்துக்கும் உள்ளாகாமலே செத்துப் போகலாம்.

நோவற்றதாயும், அதிகமான கஷ்டத்தைத் தராததாயும் உள்ள இந்த நய வஞ்சக நோயைத் தடுத்துப் போராடுவதற்கு நல்ல மன உறுதி வேண்டும். அறிவு வேண்டும், முன் யோசனை வேண்டும். அறிவையும் குணத்தையும் சோதிக்கும் உரை கல்லுக்குச் சமானம் இந் நோய். இது மிகக்கொடிய வியாதி, கெட்டவியாதி. ஆயினும் இப்பொழுது நம்முடைய கைவசத்திலுள்ள துணைகளைக்கொண்டும் பலங்களைக்கொண்டும், இதனோடு போராடி இதை வெல்லக்கூடிய திறமை உடையவர்களாகி விட்டோம். இதனோடு போராடுவதன் பொருட்டு நோயாளியானவன் தன்னுடைய உடலைப்பற்றிச் சீராக அறிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவனும் தனக்குத் தானே வைத்தியனாக இருந்து கொள்ள முயல வேண்டும். இந் நோயைப் பற்றிய விஷயங்களை அவன் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். நீரில் சர்க்கரை இருக்கிறதா இல்லையா என்பதைக் காட்டும் எளிய சோதனை முறையை அவனே நடத்தத் தெரிந்து கொள்வது நல்லது. தெரிந்து கொண்டால் அடிக்கடி நீரைச் சோதிப்பது எளிதாகும். அதிகச் செலவும் ஏற்படாது. நீரில் சர்க்கரையில்லாமல் செய்வதே இந் நோய்க்குச் சிகிச்சை செய்வதில் முதல் படி.

இந்த விஷயத்தைக் கவனிக்காமல் ஒருவன் கண்டதைக் கண்டபடி சாப்பிட்டுக் கொண்டே போனால் என்ன ஆகும் தெரியுமா? இப்படி இஷ்டம்போல் நடந்தால், ஒவ்வொரு நாளிலும் சிறிது சிறிதாக நோய் பலக்கும், உடலின் பலம் குன்றும்; இவற்றால் நோயைத் தீர்ப்பது நாளுக்கு நாள் சிறிது சிறிதாகக் கடினமாகிக் கொண்டே வரும். "இப்படி எவ்வளவு நாள் இருப்பது? தக்க வைத்தியரைப் பார்த்து உடம்பைச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும்." என்ற தீர்மானம் ஒரு நாள் இல்லாவிட்டால், ஒரு நாள் நோயாளிக்கு ஏற்பட்டுத்தான் தீரும். அப்படித் தீர்மானம் ஏற்படும்போது நோய்

முற்றிவிட்டால் நோயை வளர வொட்டாமல் தடுப்பதும் அதைத் தீர்ப்பதும் முடியாத காரியங்களாகி விடக்கூடுமல்லவா? தக்க காலத்தில் அணை போட்டுக்கொள்வது மேல். வெள்ளம் அணை கடந்துவிட்டால் யாரால் என்ன செய்ய முடியும்? முதலிலே வைத்தியம் செய்யத் தொடங்கினால் சிற்சில ஆகாராதிகளை மட்டிலும் குறைத்துக்கொண்டால் போதும். காலம் தாழ்த்தி வைத்தியம் செய்யத் தொடங்கினால், பலவகை ஆகாரங்களைக் குறைத்து, நாவைக் கட்டி, முழுப் பத்தியம் போடும் படியாக வந்துவிடும். வந்தும் கூடப் பயன் அவ்வளவு இல்லாமல் போனாலும் போகும்.

இந்த கதையைக் கேட்டிருப்பீர்கள். ஒரு தேவதை ஓர் அரசனிடம் வந்தது. ராஜ்ய பரிபாலனத்தை விளக்கமாகக் கூறும் ஒன்பது புஸ்தகங்கள் தன்னிடம் இருக்கின்றன என்று சொல்லிற்று. அவற்றைப் பெற ஆவல் கொண்ட அரசன் அவற்றின் விலை என்ன என்று கேட்டான். தேவதை சொன்ன விலை அதிகம் என்று அவன் சொல்லவே, புஸ்தகங்களைக் கொடுக்க முடியாது என்று தேவதை போய்விட்டது. கொஞ்ச காலம் கழித்துத் தேவதை திரும்ப வந்தது. வந்தபோது அதனிடம் ஆறு புஸ்தகங்களே இருந்தன. ஆவலாய் விலை கேட்டான் அரசன். முன் சொல்லிய விலைக்கு இரு மடங்கு விலை கேட்டது தேவதை. அரசன் மறுபடியும் அவ்வளவு விலை கொடுக்கச் சம்மதியாமல் மறுத்து விட்டான். தேவதை புஸ்தகங்களை மறுபடியும் எடுத்துக்கொண்டு போய்விட்டது. இன்னும் கொஞ்ச காலம் கழித்துத் தேவதை வந்தது. அதன் கையில் மூன்றே மூன்று புஸ்தகங்கள் தான் இருந்தன. அவையும் கிழிந்தும், சிதைந்தும் போயிருந்தன. விலை கேட்டான் அரசன். முன் சொன்ன விலைக்கு நாலு மடங்கு விலை சொல்லிற்று அந்த தேவதை. சிதைந்து போய்க் கிடந்த சில காகிதங்களை நாலு மடங்கு விலை கொடுத்து வாங்கினான் அரசன். கதையின் பொருள் தெரிகிறதல்லவா? இதைப் போலவே தான் நீரிழிவு வியாதியிலும்.

நீரிழிவு நோயுற்றவன் முதன்முதலில் அடிப் படையாகத் தெரிந்துகொள்ள வேண்டியது சாப்பாட்டைப்பற்றி. சாப்பாட்டை ஒட்டிய பழைய முறைகளை அவன் அடியோடு மாற்றிக் கொள்ளுவது அவசியம். பசித்தபோது சாப்பிடுகிறது; நாவிற்கு வேண்டியிருப்பதைச் சாப்பிடுகிறது; வேண்டாததைத் தள்ளுகிறது; என்பதுதான் சாதாரணமாய் நடந்து வரும் முறை. இது நல்லதுதான். ஆனால் இது நோயற்ற காலத்தில், ஆரோக்கிய நிலையில் கையாளக்கூடிய முறை. நீரிழிவு ரோகம் ஏற்பட்டுவிட்டால் கையாள வேண்டிய முறை வேறு. பிடித்ததைச் சாப்பிடுவது என்னும் முறையை மாற்றி, உடலின் நன்மையின் பொருட்டுச் சாப்பிட வேண்டியதை மட்டிலும் சாப்பிடுவது என்ற புது ஏற்பாட்டைக் கைக்கொள்ள வேண்டும். இதனால் ஒரே கடும் பத்தியமாய் இருக்கவேண்டும், பிடித்தது ஒன்றையும் சாப்பிடலாகாது என்பதில்லை. சிற்சில வேளைகளில், மிதமாக, நாவிற்குப் பிடித்தவற்றையும் சாப்பிட்டுக் கொள்ளலாம். ஆனால் நாவிற்கு ருசியான ஆகாரங்களை, அவற்றின் ருசியின் பொருட்டே, அவற்றினால் ஊறும் சுகானுபவத்தின் பொருட்டே, சாப்பிடுவது என்னும் வழக்கத்தை விட்டுவிட வேண்டும். உடம்பிற்குப் போஷணையும் வலிமையும் அளிப்பதுதான் உணவு என்பதைத் தெரிந்து கொண்டு, அவற்றுக்கு ஏற்றபடி சாப்பிட்டு வரவேண்டும். நாவினால் ஊறும் ரஸ உணர்ச்சிகளைத் தவிர வேறுவகையான இன்ப நுகர்ச்சிகள் உலகத்தில் இருக்கத்தான் இருக்கின்றன. நாவைக் கட்டினால் மற்றைய உணர்ச்சிகளும் அதோடு அற்றுப்போவதில்லை. சாப்பிடுவதில் செலவிடும் நேரம் நம்முடைய நேரத்தில் சிறு பகுதியேயாகும். சாப்பாட்டு ருசியை ஒரு பொருட்டாக மதிக்காமல் மனதைத் திடப்படுத்திக் கொள்வது எளிது. ஆனால், முயற்சி வேண்டும்; மன உறுதி வேண்டும். நாவிற்கு ருசியாயும் உடலுக்குத் தீமையே செய்வனவாயும் உள்ள பக்ஷண வகைகளை

குழந்தைகளுக்கு கவலையற்ற கல்விப்பயிற்சி, பெண்ணின் விவாகம், ரம்மியமான இருப்பிடம், இன்பவாழ்க்கை, இவைகளை எல்லாம் கற்பக விருக்ஷம்போல் உங்களுக்கு அளிக்கத் தழைத்தோங்கி நிற்கும் ஸ்தாபனம்

இந்தியன் மியூச்சுவல் லைப் அஸோஸியேஷன் லிமிடெட்

டெலிபோன் : **3777**

10, மவுண்டு ரோட், மதராஸ்.

நினைந்து நினைந்து உருகுபவர்களை நாம் பார்க்கத்தான் பார்க்கிறோம். அவர்கள் வீணாகத் 'தம்மைத் தாமே வேதனைப் படுத்திக் கொள்ளுகிறார்கள். மேலும் தம்முடைய குறைகளையே மீண்டும் மீண்டும் நினைத்து வருந்துவது உடலுக்கும் நல்லதில்லை, மனதுக்கும் நல்லதில்லை. நாவை மேன்மேலும் வளர்க்காமல், சாப்பாட்டு ருசியைப் பற்றிய பழைய எண்ணங்களை மாற்றி, உணவுக்காக உடல் இல்லை, உடலுக்காகத்தான் உணவு என்கிற உண்மையைத் தெரிந்துகொண்டால், நோயற்ற சுக வாழ்வு வாழ்வது எளிதாகும். உலகத்திலே உள்ள பெரியோர்களிற் பலர் இந்நோய்க்கு உள்ளாகி யிருக்கிறார்கள். அவர்கள் எத்தனையோ சௌகரியங்களை அனுபவிக்கத்தான் அனுபவிக்கிறார்கள். தங்கள் சிநேகிதர்களோடு உறவாடிப் பேசி இன்புறுகிறார்கள். தம்தம் வேலைகளை ஊக்கத்துடனும் திறமையுடனும் செய்து மகிழ்ச்சி யடைகிறார்கள். நன்றாய் விளையாடுகிறார்கள். இனிதாய்ப் பொழுது போக்குகிறார்கள். ஆனால் சாப்பாடு என்னும் ஒரே ஒரு விஷயத்தில் மட்டிலும் கட்டுப்பாடு செய்துகொண்டு, அதை இன்ப நுகர்ச்சிக்கு இடமாகக் கொள்ளாமல் அதை ஒரு கடப்பாடாக வைத்துக் கொண்டு, நெறி தவறாமல் நடத்தி வருகிறார்கள். எல்லாரும் அப்படியே நடத்தினால் என்ன? அப்படி நடத்துவது கஷ்டமில்லை. மிகவும் எளிதுதான். நடத்திப் பார்த்தால் தெரியும். நாவின் சுவை சற்றேறக் குறையத்தான் குறையும். ஆனால் உடம்பிலே நோய் குறைந்து, நாளடைவில் ஆரோக்கியம் மிக மிக, மற்ற விதமான நல்வழிகளில் பெறும் ஆநந்தமானது பெருகும்.

இன்னொன்றும் தெரிந்து கொள்வது அவசியம். இந்த நோயுற்றவன் முற்றிலும் குணமடைந்து திடமான பழைய ஆரோக்கிய நிலைக்கு வரமுடியாது. ஆனால், பழைய சாப்பாட்டு வழக்கத்தை மாற்றிப் புதிய முறையைக் கைப்பற்றி, விடாமல் நடத்திக்கொண்டே வந்தால், இந்த நோயைத் தலை தூக்க ஒட்டாமல் செய்துவிடலாம். இப்படிச் செய்வதற்கு வேறொன்றும் வேண்டியதில்லை; அறிவும், மன உறுதியும், விடா முயற்சியும் மட்டிலுமே வேண்டும்.

இவை மூன்றும் உங்களுக்கு இருக்கிறபடியால், நீங்கள் நன்னிலையில் நீடூழி காலம் வாழ்வீர்களென்பது உறுதி— என்று டாக்டர் பிரசங்கத்தை முடித்தார்.

[ஓர் ஆங்கில வைத்தியப் புஸ்தகத்தினின்று தொகுத்தெழுதியது.]

இண்டஸ்ட்ரியல்
&
ப்ருடன்ஷியல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
ஸ்தாபிதம் 1913.
தலைமை ஆபீஸ்: பம்பாய்.

விவரங்களுக்கு எழுதவும்:
பிரான்ச் மானேஜர்,
167, மௌண்ட் ரோட், மதராஸ்.

பிரிவாற்றுமை

(கு. ப. ரா)

இளவேனிலின் இசைகவ்விய மலர் மார்பும் புளகப் புட்களும்,
கோடையின் குளிர்இளநீரும் குறுநிழலும் கூடைக்கனிகளும்,
மாரியின் மங்கிய வொளியும் பொங்கும் புதுமையும்
கூரியமின்னல் மிகையும்
பனியின் பருவதமும் பளிங்குக் காலையும் தொனித்ததுயர் இரவும்
இலையுதிரின் இளகிய நிழலும் ஈரமணமும்
தலைமேல் தாரகை வெளியும்,
நமது இணைப்பின் நடுவே வந்து களிமயக்கம் கலைக்கவில்லை!
நாம் பிரிவுகொண்ட பாழும் பொழுதில்தான்
ஊடே தோன்றி யிவை ஏக்கம் ஏற்றி
பாம்பைப்போல் தீண்டி பழம் நினைவூட்டி,
சூடேறியிருந்த சுகஇரவைச் சுட்டிக்காட்டி
தமது பழியைத் தீர்த்துக் கொள்ளுகின்றன!

——



சுந்தரி

"குகப்ரியை"

சுந்தரி நல்ல அழகி. நல்ல சிவப்பு. வாட்ட சாட்டமான சரீரம். பார்க்கப் பார்க்கப் புதுமையாகவே தோன்றும் முகம். கபடற்ற புன்சிரிப்பு, பிறரை வலுவிலேயே அவளுடன் உறவாடச் செய்யும். சுருண்டு படிப் படியாய்த் தொங்கும் குழலை வாரிப் பாதி பின்னலும், பாதி பின்னாமலும் அப்படியே "பிரஷ்" போல விட்டிருப்பது அவளுடைய அழகைத் தூக்கிக் காட்டும். கரு வண்டு போன்ற கண்கள் "துரு துரு" வென்று அலைந்துகொண்டே இருக்கும்.

மகாபலிபுரத்துக் கடுத்த பூஞ்சேரிதான் அவர்களுடைய சொந்த ஊர். அவள் பாட்டனர், மாவலிபுரத்து ஸ்தல சயனப் பெருமாள் கோயிலில் சுயம் பாகம். ஸ்ரீ தேவியின் கடாக்ஷம் எந்த சமயத்தில் யார் மீது வீசுமென்று சொல்ல முடியுமா? சுந்தரி பிறப்பதற்கு முன்னலேயே அவள் தகப்பனர் காஞ்சிபுரத்திலே சோதிட நிலையம் ஒன்று ஏற்படுத்தி ஏராளமாய்ப் பணம் குவித்து விட்டார்.

முதல் முதல் கலாசாலைக்கு வந்த பொழுது அவளைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. கலாசாலைக்கு வந்த பிறகும் கூட நான் கொஞ்சம் சங்கோசமுள்ளவளாகையால் சற்று எட்டியேதானிருப்பேன். ஆனல் அவள் இந்த நிலைமையை நீடிக்க விடவில்லை. தானே வலிய வந்து என்னுடன் பேசி விடுவாள். வகுப்பில் பாடம் நடந்து கொண்டிருக்கும் பொழுது சிற்சில இடங்களில் என் அபிப்பிராயத்தை அறிபவளே போல் என்னைக் கூர்ந்து பார்ப்பாள்.

அவள் பேசுவதில் அதிசாமர்த்திய சாலி. சர்வ சாதாரணமான விஷயங்களிலிருந்து அரசியல் விஷயங்கள் வரையில் எதிராளியைப் பேச ஒட்டாமல் திணற அடித்து விடுவாள். வடமொழியிலும் ஹிந்தியிலும் நல்ல தேர்ச்சி. "ஹிந்தி பிரசாரம் முதல் முதல் தொடங்கிய பொழுது கற்றுக்கொண்டாளாம். தானே எப்படித்தான் அபிவிருத்தி செய்திருக்கிறுள் பார்" என்று என் தாயார் ஆச்சரியப்படுவாள்.

அவள் ஹாஸ்டலிலேயே இருந்தாள். நான் வீட்டிலிருந்து போய்க்கொண்டிருந்தேன். சில சமயங்களில் நானும் அங்கேயே தங்கி விடுவதுண்டு. நாங்கள் தர்க்க சாஸ்திரம் எடுத்துக் கொண்டிருந்தோம். என் தம்பி "தொன்னைக்கு நெய் ஆதாரமா? நெய்க்கு தொன்னை ஆதாரமா?" என்று பரிகசிப்பான்.

என் பாட்டிக்கு அவளைக் கண்டால் வெகு பிரீதி. அவள் சரித்திர ஆராய்ச்சிக்காக கோயில் குளங்களைப் பற்றி விசாரிக்கிறுளென்று தெரியாது. அவளுக்கு ஸ்தல புராணங்களையும் கதைகளையும் சொல்லி விட்டு "அடாடா! என்ன பக்தி. என்ன சிரத்தை. நம்மாத்து ஜடத்துக்கு துளிகூட ஒன்றுமே தெரியவில்லையே" என்பாள். (இது எனக்கே உரிய கௌரவம்) சுந்தரி விஷமமாய்ச் சிரித்துக்கொள்வாள்.

ஃ ஃ ஃ

சாயங்காலம் ஐந்துமணி. "என்ன ராஜி, இங்கே கொஞ்சம் வாயேன்" என்று கூப்பிட்டாள் சுந்தரி. ஆனந்த மிகுதியினல் அவள் முகம் மலர்ந்திருந்தது. நான் சிரித்துக்கொண்டே "என்ன கண்ட்ராவி. சொல்லித் தொலையேன்" என்றேன்.

"எங்கள் வைஷ்ணவ பரிபாஷையிலே எப்படி மரியாதையாய்த் திட்டுகிறது தெரியுமா? 'தேவள் தலையிலே இடி விழ நான் பார்க்க'"

"உங்கள் பரிபாஷையை யார் கேட்டார்கள்? சங்கதியைச் சொல்லேன்" என்று அவள் கையைப்பற்றி

இழுத்து உட்கார வைத்தேன். பாரத மணியிலே " அழகு " என்ற புனைப்பெய ரால் கதைகள் வருகிறதே அது யார் எழுதுகிறார் தெரியுமா ?

" இதுதானா ? ஏன் அவர் எழுதுகிற கட்டுரைகளைப் படித்துவிட்டு அவர் மேல் காணாமலே காதல்கொண்டு விட்டாயோ ? அப்பா இந்திரன் சந்திரன் என்று புகழ் கிறார். நானும் படித்தேன்—ஏதோ பர வாயில்லை. மோசமில்லை. ஏன், உனக் கென்ன அதில் அவ்வளவு அக்கரை? "

"அடி பழிகாரி ! நான்தானடீ அது. பர வாயில்லையா ?" என்று சிரித்தாள். நான் திகைத்து விட்டேன்.

அவள் விஷமச் சிரிப்புடன் இதழ் ஒன்றை என்கையில் கொடுத்தாள். அதில் அவளது புகைப் படமும் கதையும் வெளி வந்திருந்தது. அந்தக் கதை வெகு அற் புதமாய் அமைந்திருந்தது.

நொடியில் விஷயம் புரிந்து விட்டது. ஓயாமல் சரத்சந்திர சாட்டர்ஜீயையும் மற் றும் தமிழ்நாட்டு சிறந்த எழுத்தாளர்களை யும் அவள் புகழ்ந்து கொண்டிருந்தது எதனாலென்று அப்பொழுதே எனக்குத் தோன்ற ஆரம்பித்தது.

அவளுடைய கதை பெரும்பாலும் சரத் சந்திரருடைய போக்கையே தழுவி அமைக்கப் பட்டிருந்தது. ஆஸ்திக நாஸ் திகக் கொள்கைகள் கூட அப்படியேதான். இடை இடையே வரும் கவிதைகள் பாரதி யாரின் கவிகளைப் போன்ற அவளுடைய சொந்தக் கவிதை.

"என்ன சுந்தரி! இதற்கு இவ்வளவு மூடு மந்திரமா? இவ்வளவு நாளாய் ஒளிப் பானேன்?"

"வேறொன்றுமில்லை. நீதான் வெறும் ஓட்டைவாய் ஆயிற்றே! காலேஜ் முழு வதும் விதைத்து விடுவாய். விதவிதமாய் விமரிசனங்கள் கிளம்பும். ஆசிரியரைத் தெரிந்து மதிப்புரைச் சொல்வதில் என்ன "ருசி" இருக்கிறது?"

எனக்கு மேலே பேசத் தெரிய வில்லை. பேசாமல் உட்கார்ந்தேன். லீலா என்ற இன்னொரு மாணவி தற்செயலாய் வந்த வள் "என்ன? ராஜீ, உட்கார்ந்துவிட்டாய்" என்றாள்.

"அவளா? யோக நித்திரை என்றால் தெரியுமா? 'தூங்காமற் றூங்கி' என்று தாயுமானார் சொன்னாராம். இவள் அவரை விட ஒருபடி மேலே போய்விட்டாள். "விழித்தபடியே தூங்கி விழுந்திடுவ தெக்காலம்" என்று பாடத் தொடங்கி னாள் சுந்தரி. எனக்கு 'குப்' பென்று சிரிப்பு வந்து விட்டது.

"என்ன ராஜீ! கல்யாணப் பிள்ளை எப் படி இருப்பா ரென்று ஞானக் கண்களி னால் பார்க்கிறாயோ ?

"யார் யாருக்கு கல்யாணம்?"

"யாருக்கா யிருந்தால்தா னென்ன? நான் வரனை வர்ணிக்கிறேன் கேளேன். பெரியவராய்,உலகளந்த பெருமாள் மாதிரி இருப்பாராம். ஆறடி ஆறங்குல உயரம். சுற்றளவு இரண்டடிதான். சூட்போட்டு நடந்து வருவதைப் பார்த்தாலே மன் மதாகாரமாய் இருக்குமாம். மூக்கு சாக்ஷாத் கருட பகவான்........." என்ப தற்குள் சுந்தரி இடை மறுத்து, "ஐயோ பாவம்! யாருக்கு ? வரன் லீலாவுக்கா, ராஜிக்கா ?"

"ராஜிக்குத்தான். உனக்குத் தெரி யாதா ? நாளைக்கு எட்டாம் நாள் கலியா ணம். என்ன? உனக்குச் சொல்லவே யில்லையா?"

"அடி நாசமற்றவளே. ஏன் சொல்ல வில்லை? நான் கதை எழுதியதைச் சொல்லவில்லை என்று நீ கலியாணத் தையே ஒளித்து விட்டாயே. மாப்பிள்ளை உலகளந்த பெருமாள் போலிருக்கிறாரே! யாராவது தூக்கி இடுப்பிலே வைத்துக் கொண்டுபோய் விடப் போகிறார்களே என்ற பயமா?"

"இதென்ன அநியாயம். அவளும் சொல்லுகிறாள். நீயும் கேட்கிறாயே. அவர் பெயர் திரிவிக்கிரம சர்மா. அதற்காக இப் படிக் கதை அளக்கிறாள்."

"ஆனால் சரி. எப்படி யிருப்பார், வாமன வதாரமா ?" என்று குறும்புச் சிரிப் புடன் கேட்டாள் சுந்தரி.

உ

நாங்கள் லாகூருக்கு வந்து இரண்டு வருடங்களாயின. என் கலியாணத்திற்குப் பிறகு அவளைச் சந்திக்கவே முடியவில்லை. எப்பொழுதாவது கடிதங்கள் வரும். அவளைப் பார்க்கா விட்டாலும் வாரந் தோறும் கதைகளும் கவிதைகளும் எங்களைத் தேடி வந்து விடும். ஏனென்றால் அவளது கதைகள் வெளிவ்ராத பத்திரிகையே கிடையாது.

கட்டுரைகளைக் கண்டுவிட்டால் நேரில் அவளையே காண்பதுபோல் ஆனந்தப்படுவேன். என் சிநேகிதிகள் அவளைப் புகழும் பொழுதெல்லாம் என்னுடல் பூரிக்கும். பெருமிதத்தினால் என் தலை நிமிரும். வட நாட்டிற்குப் போனால்தான் தமிழின் பெருமை நன்கு தெரிகிறது. ஒரு தமிழ் முகத்தைக் கண்டுவிட்டாற் போதும். உடனே அவர்களைப் பரிச்சயம் செய்துகொள்ள நெஞ்சு துடிக்கும். ஆகவே என் சிநேகிதிகள் அவளைப் பார்க்க வேண்டுமென்று மிகவும் ஆவலுடன் "ஒரு முறை லீலாவுக்கு இங்கே வரச் சொல்லுங்களேன்" என்று தொந்தரவு செய்ததில் ஆச்சரியமென்ன?

என் கணவரும் அதையேதான் சொல்லுவார்.

* * *

"சுந்தரியின் நடையே ஒரு தனி அழகு. அவள் வசனங்களிலேதான் என்ன கவர்ச்சி. என்ன இனிமை, ஜீவ சக்தி ததும்புகிறது பார். என்ன அற்புதமாய்த்தான் எழுதுகிறாள். ராஜி, அவளுடைய கதா பாத்திரங்களைக் கவனித்தாயா? ஒவ்வொன்றையும் அணு அணுவாய்ப் பிரித்து சித்தரிக்கிறாள் பார். எழுதினால் அப்படி எழுதவேண்டும்............ எந்த மடையன் அவளை அடையக் கொடுத்து வைத்திருக்கிறானோ?"

"மடையனென்ன? இஷ்டம்போல யாரை வேண்டுமானாலும் வரிக்கலாம். 'ஸ்வயம்வரம்' தானே."

"அது சரிதான். ஆனால், உலகத்தில் அதிருஷ்டத்திற்கும் புத்திசாலித்தனத்திற்கும் ஒன்றுக்கொன்று சம்பந்தமே கிடையாது. சொத்து ஏராளமாய்க் கிடைக்கிறது. சின்னஞ்சிறு பெண். வரன்கள் நீ நான் என்று போட்டி போடமாட்டார்களா? அதனால்தான் அருமையை அறிந்தவனாக வாய்க்கவேண்டுமே?"

"ஏன்? நீங்கள் அருமையை அறிந்தவர்தானே?"

"ஓகோ! என்ன? வரவர ரொம்ப அதிகப் பிரசங்கியாகிவிட்டாய்" என்று சொல்லுகையில், தபாற்காரன் ஒரு புத்தகத்தைக் கொண்டுவந்து கொடுத்தான்.

அது சுந்தரியின் "கமலையின் காதல்" என்ற கதை. அதனுடன் ஒரு கடிதமும் வைத்திருந்தாள். அதில் தனக்குக் கலியாணம் நிச்சயமாகி இருக்கிறதென்றும், வரன் மிஸ்டர் "பஞ்ச்" என்றும், அவர் சொந்தப்பெயர் பஞ்சாபிகேசன் என்றும் மேல் நாடுகளுக்குச்சென்று பட்டம் பெற்றவரென்றும், இது வரையில் தான் எதிர்பார்த்தபடி சகல நற்குணங்களும் பொருந்தியவரென்றும் எழுதியிருந்தாள். படித்தேன். "ஆழ்ந்த கண்கள் தானோ?" என்று கேட்டார் என் கணவர்.

"உருவத்தைப்பற்றிய புராணம் இல்லை. நான்தான் சொன்னேனே."

"அதையேதான் நானும் சொன்னேன். என்னைப்போலவே அருமையறிந்து சிறிக்கொண்டே இருக்கிற மகானுபாவன் தான் வருவானென்று."

"எத்தனை வயதானாலும் இந்த கிறுக்குப் போகிறதில்லை."

"எனக்கா கிறுக்கு. தேவியார் அவர்களுக்கு வெறும் கிறுக்குமட்டும்தான் போலிருக்கு."

"ஆமாம் இப்படியெல்லாம் சொன்னால் கெட்ட கோபம்வரும் தெரியுமோ?"

"எங்கே கொஞ்சம் கோபித்துக்கொள் பார்க்கலாம்," என்று சொல்லியவராய் என் கையிலிருந்த புஸ்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்.

* * *

"ராஜீ! ராஜீ! ஓடிவா ஓடிவா!" என்று உரத்த குரலிற் கூவினார் என் கணவர்.

"ஏன் அவ்வளவு அவசரம்" என்று கேட்டுக்கொண்டே வந்தேன். கையிலே ஒரு பத்திரிகை. அவர் முகத்திலே சந்தோஷம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. குனிந்துபார்த்தேன், என் கண்களையே நம்ப முடியவில்லை. ஆச்சரிய மிகுதியினால் அப்படியே திகைத்துவிட்டேன். திகைக்காமலென்ன செய்யமுடியும்? உலக இலக்கியங்களுக்குள்ளே சுந்தரியின் புத்தகம் 'நோபல்பரிசு' பெற்றுவிட்டதென்றால், யாருக்குத்தான் திகைப்பாயிராது. அடாடா! நெடுநாளாய் கடிதமே போடவில்லை என்றேனுமோ? அவள் எப்படி எழுதுவாள் பாவம், என்று எண்ணினேன். ஆனந்த மிகுதியினால் என் இதயம் தடதடவென்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. என்ன செய்வதென்றே புரியாமல் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தேன். அவளை விசாரிக்க சென்னைக்குப் புறப்பட்டோம்.

சுந்தரியின்வீடு பூட்டிக்கிடந்தது. எதிர்பார்த்ததற்கு நேர் மாறாக வீடு பாழடைந்து கிடந்தது. மிகுந்த சிரமத்தின் பேரில் மகாபலிபுரம் போயிருப்பதாய்த் தகவல் கிடைத்தது. மறுநாள் மகாபலிபுரம் போவதாய்த் தீர்மானித்தோம். முன்பு எப்பொழுதோ போனது; வழியா துறையா ஒன்றும் தெரியவில்லை. பூஞ்சேரி திராவிட மகா ஜனங்கள், நாங்கள் குகைக் கோயில்களைப் பார்க்க வந்திருப்பவர்களென்று எண்ணி "இங்கே இது இருக்கிறது, அங்கே அது இருக்கிறது" என்று தங்கள் சொந்தக் கற்பனைகளைக் கலந்து விதவிதமான ஸ்தல புராணங்களை சிருஷ்டித்து விவரித்துக் கொண்டிருந்தார்கள்.

ஊர் முழுவதும் சுற்றியாயிற்று. கோயில் மணியக்காரர், சயம்பாகிமுதல் ஒருவர் பாக்கி இல்லை, விசாரித்தாயிற்று. சுந்தரியாவது அவள்கணவனாவது அங்கே

வந்ததாகவே தெரியவில்லை. கோபுர வாயிலிலே பஞ்சுபோன்ற தாடி மீசையும் பட்டை நாமமுமாய் ஒரு பழுத்த கிழவர் உட்கார்ந்திருந்தார். "அவரைக் கேளுங்கள்" ஒன்று ஒருவர் சுட்டிக் காட்டினர். யாரோ ஒரு பெண் கடற்கரைப் பக்கம்போனதாக அவர் சொன்னர். கடற்கரைக் கோயிலுக்குப் புறப்பட்டோம். கோயிலின் முன்புறத்தில் செங்குத்தான சுவரின்மேல், குத்துக் கற்களுக்கு நடுவில் சோகமே உருவாய் உட்கார்ந்திருந்தாள் சுந்தரி. சிறைமண்டிக்கிடந்த அவள் கூந்தல் சடை சடையாய்க் காற்றிலே பறந்துகொண்டிருந்தது. மேலே அழுக்கேறி மண்டிக்கிடந்தது. கண்களை மூடிய வண்ணம் கற்சிலை போலவே உட்கார்ந்திருந்தாள். வரண்டு உலர்ந்து கிடந்த அவள் இதழ்களில் ஒரு ஏளனப் புன்னகை தோன்றிக்கொண்டிருந்தது.

காலடியோசை சமீபத்தில் கேட்டதும் திடுக்கிட்டு விழித்தாள். "ராஜீயா?" என்று அச்சரியத்துடன் கூவியவளாய்க் குதித்தோடிவந்து என் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகி ஓடிற்று. "இது என்னடி இது? என்ன சங்கதி சொல்லேன். எனக்கொன்றும் புரியவில்லையே?" என்றேன். அவள் அழுவதைப்பார்த்து என்னலும் சகிக்க முடியவில்லை. என் கண்களினின்றும் கண்ணீர் பெருக வாரம்பித்தது. "என்ன? உடம்பு சரியாயில்லையா?" என்று மிகவும் தணிந்த குரலில் கேட்டார் என் கணவர். சுந்தரி கொஞ்சம் சிரித்துக்கொண்டாள். "என்ன?" எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா என்று யோசிக்கிறீர்களா? அதெல்லாம் ஒன்றுமில்லை. பைத்தியம் பிடித்திருந்தாலும் எவ்வளவோ நல்லதாயிற்றே" என்று சொல்லுகையில், அவள் குரல் கரகரத்தது. மழை பாட்டம் பாட்டமாய்ப் பெய்து ஓய்வதுபோல், சற்றுப் பலமாய் விசித்து அழுவதும், சற்று அடங்குவதுமாய் இருந்தாள் சுந்தரி.

நான் மெதுவாய் அவள் முகத்தைத் திருப்பி, "சுந்தரி உன் கலியாணத்துக்குப் பிறகு மேல் விஷயம் எனக்குத் தெரியாதே? என்ன சங்கதி சொல்லேன். நீ கடிதமே எழுதாதிருந்தபோதுகூட ஏதோ சந்தோஷமாய்த்தான் இருப்பாய் என்றல்லவா எண்ணிக்கொண்டிருந்தேன். எனக்கு ஒன்றும் புரியவில்லையே, சொல்லம்மா" என்று கெஞ்சினேன்.

"சொல்லி என்ன லாபம்? யார்தான் என்ன செய்ய முடியும், ராஜி! நான் எதிர்பார்த்திருந்தபடி சகல நற்குணங்களும் பொருந்தியவர் என்று எழுதியிருந்தேனே ஞாபகமிருக்கிறதா? எந்தெந்த கதைகளினல் நான் உலகத்தாருடைய புகழை அடைந்தேனே, அந்தக் கதைகளே என்னை வஞ்சித்துவிட்டனவே. நீ கூட அடிக்கடி சொல்வாயே, பெரும்பான்மையான கதா புருஷர்கள் ஒரே மாதிரி யிருக்கிறார்கள் என்று. அவைகளை யெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு என்னைத் தன் வஞ்சக வலையில் வீழ்த்திவிட்டாரடி. முதலில் எல்லாவற்றையும் உண்மையென்றே எண்ணி என்மனதைப் பறிகொடுத்துவிட்டேனடி. என்ன படித்தாலென்ன, என்ன செய்தாலென்ன, பெண் மனம் எவ்வளவு சுலபத்தில் ஏமாந்துவிடும் என்பதைப் புருஷர்கள் கற்றுவைத்திருக்கிறார்கள். பசுத்தோல் போர்த்த புலி என்று தெரியாமல் ஏமாந்து போனேனே. அடாடா, என்ன பசப்பல், என்ன கபட நாடகம்? எல்லாவற்றையும் உண்மையென்று நம்பி என் ஹிருதயத்தை அவருக்கே அர்ப்பணம் செய்துவிட்டேனே! எல்லாம் போயிற்று. இந்தப் பாழும் உயிர் மட்டும் போகாமலிருக்கிறதே! அவன் ஏற்கனவே கலியாணமானவன். துரோகி, குடிகாரன், துர்க்குணங்களுக்கெல்லாம் எல்லை, என்று தெரிந்தும், அவனை மறக்க முடியவில்லையே. ராஜி, அன்பு என்றால் என்னவென்றுவது இந்தப் பதர்களுக்குத் தெரியுமென்று நினைக்கிருயா? இந்தப் பாழும் மனிதரின்மேல் அன்பு வைத்துவிட்டுத் தவிப்பதுபோல், கடவுளிடத்து அன்பு செய்யத் தெரிகிறதென்று நினைக்கிருயா? இதில் நூறில் ஒரு பங்குகூடக் கடவுளின்மேல் வைக்கத் தெரிய

ஆரம்ப பாடசாலைக்குரிய

எமது தமிழ்ப் பிரசுரங்கள்.

	அ.	பை.
முதல் வகுப்பு		
நமது தாய்மொழி வாசகம் I	2	6
கோபால் புதிய தமிழ் வாசகம் I	2	6
கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) (each)	1	0
இரண்டாம் வகுப்பு		
நமது தாய்மொழி வாசகம் II	3	6
கோபால் புதிய தமிழ் வாசகம் II	3	0
கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு பாகம் II	3	6
கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) (each)	1	0
மூன்றாம் வகுப்பு		
நமது தாய்மொழி வாசகம் III	4	6
கோபால் புதிய தமிழ் வாசகம் III	4	0
இயற்கை அற்புதங்கள்—முதல் புத்தகம்	3	0
நூதன முறை கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு I	6	0
இந்துதேச சரித்திரக் கதைகள் I	3	0
நான்காம் வகுப்பு		
நமது தாய்மொழி வாசகம் IV	5	0
கோபால் புதிய தமிழ் வாசகம் IV	4	6
இயற்கை அற்புதங்கள்—இரண்டாம் புத்தகம்	4	0
நூதனமுறை கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு II	8	0
இந்துதேச சரித்திரக் கதைகள் II	4	6
துரைத்தன விளக்கம் I	5	0
The Coronation English Reader, Primer (I & II)	6	0
ஐந்தாம் வகுப்பு		
நமது தாய்மொழி வாசகம் V	6	0
கோபால் புதிய தமிழ் வாசகம் V	6	0
இயற்கை அற்புதங்கள்—மூன்றாம் புத்தகம்	5	0
கம்பர் அல்லது கவியரசர்	5	0
நூதனமுறை கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு III	10	0
இந்துதேச சரித்திரக் கதைகள் III	6	0
துரைத்தன விளக்கம் II	6	0
The Coronation English Reader, Book I	6	0
ஆறாம் வகுப்பு		
கோபால் புதிய தமிழ் வாசகம் VI	7	0
The Coronation English Reader, Book II	8	0
The New Era Story Books, Book I	3	0
The Coronation English Grammar & Composition, Book I	6	0
ஏழாம் வகுப்பு		
கோபால் புதிய தமிழ் வாசகம் VII	8	0
பரதன்	6	0
The Coronation English Reader, Book III	10	0
The New Era Story Books, Book II	4	0
The Coronation English Grammar & Composition, Book II	9	0
எட்டாம் வகுப்பு		
கோபால் புதிய தமிழ் வாசகம் VIII	9	0
The Coronation English Reader, Book IV	12	0
The Coronation English Grammar & Composition, Book III	12	0
The New Era Story Books, Book III	6	0
Chandrahasa	6	0

ஜி. ஜீ. பால் அண்டு கம்பெனி,

புத்தக வியாபாரிகள்,

4, பிரான்ஸிஸ் ஜோசப்புத் தெரு, சென்னை.

வில்லையே" என்று சற்றுத் திணறினள். சுந்தரி.

"என்ன சுந்தரி! நீயே இப்படிப் பேசினல் என்ன அர்த்தம்? அவர் எங்கேயிருக்கிறர்? நீயேன் திருத்தக் கூடாது? நாளைக்கு என்ன நடக்குமென்று நமக்குத் தெரியுமா? எழுந்திரு போவோம். உனக்கு நோபல் பரிசு வந்திருக்கிறது தெரியுமா?"

அவள் அதைச் சட்டை செய்யாதவளாய் "திருந்துவதாவது மண்ணுங்கட்டியாவது. கதையா, நம்மிஷ்டம்போலத் திருத்தித் தங்கக் கம்பியாய் ஆக்கி விடலாம். ஆனல் வாழ்க்கையில் நடக்கிறதா?" என்று ஒரு பைத்தியச் சிரிப்புச் சிரித்தாள். மறுபடி "ஏதாவது நடுவில் கெட்டிருந்தால் திருந்தும். ஆதிமுதலே கபட நாடகம். என்னுடைய லக்ஷ்ய கதாபுருஷர்கள் எப்படி யிருக்கிறர்கள் என்று கவனித்து, வலை வீசி, வேண்டுமென்றே செய்த துரோகம். கல் நெஞ்சு" என்று சொல்லுகையில் அவள் குரலில் ஆவேசம் தொனித்தது. முகம் சிவந்து "எந்த மெய்யன்பை நான் கூறினேனே, அது இந்த உலகத்தில்——இல்லை" என்று சொல்லுகையில் அவள் முகம் பயங்கரமாய்த் தோன்றிற்று. "பூமிதேவியின் மடியைத் தவிர எனக்குச் சுகமான புகலிடம் ஏது? உன்னை ஒரு முறை பார்க்க வேண்டுமென்ற ஆவல் இருந்தது. அதுதான் உன்னை இங்கே தள்ளிக் கொண்டு வந்தது. அலை என்ன சொல்லுகிறது கேட்டாயா? "எல்லாம் பொய், பொய்," என்று வெறி கொண்டவள் போல் கத்திக்கொண்டே ஒரே பாய்ச்சலில் அலைகளின் குளிர்ந்த கரங்களுள் புகுந்து கொண்டாள் சுந்தரி. "அந்தம்மா பைத்தியம் அம்மா" என்று கூவினவனும் அவளைத் தப்புவிக்கத் தானும் குதித்தான், வழிகாட்டி.

நேஷனல் மியூச்சுவல்

அஷ்யூரன்ஸ் ஆப் இந்தியா, லிமிடெட்.

1938-ம் வருஷத்திய இன்ஷூரன்ஸ் ஆக்டில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

தலைமை ஆபீஸ்:

6, பிலிப்ஸ் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

அந்தஸ்தும் செல்வாக்கும் உள்ள கனவான்களிடமிருந்து சம்பளத்திற்கு கம்பெனியின் ஆர்கனைசர்களாக வேலை செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முந்திய அநுபவம் இருந்தால் சிலாக்கியம். தொழில் உத்தரவாதம் அவசியம்.

மற்ற விவரங்களுக்குக் காரியதரிசிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

உதய சிங்கன்

[ஒரு இராஜ புத்திர வீரன்]

பாத்திரங்கள் :

விமலசிங்கன் .... மீவார் தேசத் தரசன்.

ரஞ்சிதசிங்கன் ... விமலசிங்கனின் தம்பி. (கதை ஆரம்பத்தில் கனோஜ் மன்னனாகிய பிரதாப சிங்கனுடன் யுத்தம் புரிந்து கொண்டிருக்கிறான்).

ராம தேவன் ... விமல சிங்கனின் மந்திரி

உதய சிங்கன் ... ஒரு சேனைத் தலைவன் (விமலன் ஜனங்களுக்குச் செய்யும் கொடுமைகளைக் கண்டு அவன் மீது வெறுப்புற்றவன்.)

மங்கள சிங்கன் ... உதய சிங்கனுடைய நண்பன்

அஜித் சிங்கன் ... மீவார் நாட்டுச் சேனாதிபதி

ரகு வீரன் ... உதய ஸிங்கனின் ஆட்களில் ஒருவன்

தூதன், தண்டோரா பிரபுக்கள், முதலியவர்கள்.

அரசி ... விமல சிங்கன் மனைவி

ஹேமா ... விமல சிங்கன் புதல்வி; உதய சிங்கனுடைய காதலி.

அங்கம் 1 காட்சி 1

[இடம் : உதய சிங்கன் வீட்டில் ஒரு அறை.]

[உதய சிங்கன் குறுக்கும் நெடுக்குமாக உலவிக்கொண் டிருக்கிறான்.]

உதய :—என்ன அநீதி! ஒரு நாளைக்கு ஒரு புது வரியா? மன்னனும், மன்னன்!...ஸ்திரீ லோலனாகவும் மது பக்தனாகவும் இருப்பதுதான் அரச தர்மம் போலும்! இந்த அநியாயங்களை ஜனங்கள் எவ்வளவு நாள்தான் பொறுத்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்?...ஆம், விமலனுக்குக் கேடுகாலம் வெகு தூரத்திலில்லை! அதனால்தான் இப்படி புத்தி நிலை தவறி யலைகிறான்!... இவனுக்கு ஒரு மதியூகி, மந்திரி!...ராம தேவன்! பெயர் ஒன்றுதான் வெகுஅழகா யிருக்கிறது!... மந்திரி பதவி கிடைத்து விட்டதனால் என்ன அக்கிரமம் வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைத்துக்கொண் டிருக்கிறான்போ லிருக்கிறது!... நாளைக்கு வாட் போரில் என்னை வென்று விடலாம் மிக எளிதாக என்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறான்போ லிருக்கிறது! ...தன்னை யெதிர்த்து நிற்பவன் மீவாரிலேயே தலை சிறந்த வாள் வீரன் என்பதை நாளைக்கல்லவா உணரப் போகிறான் அவன்!...... அடே விமல், உதயன் உனக்கு யமன் என்று தெரிந்து கொள்! இந் நாட்டில் உன் ஆதிக்கமும், உனது மந்திரியின் கொடுமையும் எள்ளளவுமின்றி ஒழிக்கா விட்டால் என் பெயர் உதய சிங்கன் அல்ல!

[மங்கள சிங்கன் நுழைகிறான்].

மங்கள :—என்ன உதய, ஆழ்ந்த யோசனை செய்கிறாய்? நாளைக்கு நடக்கப் போவதைப்பற்றியா?.........இந்த வேடிக்கையைக் கேட்டாயா, உதய?........ நாளை உன்னை ஒழித்துவிட்டால் விமலன் ராமதேவனுக்குப் பத்துக் கிராமங்கள் பரிசாக அளிக்கப்போகிறானாம்!

உதய :—பேஷ் என்ன அற்புதமான யோசனை!......விமலனுக்குக்கூட அவ்வளவு தாராள புத்தி யிருக்கிறதா?... பத்து கிராமம் பரிசு!......ராமதேவனுக்குக் கொடுக்க வேண்டியதுதான்! ......அரசனுக்குத் தகுந்த மந்திரியாய் விளங்குகிறானல்லவா?......... அது கிடக்கட்டும், மங்கள, அஜித் சிங்கனைப்

பார்க்கச் சொன்னேனே, என்ன வாயிற்று?

மங்கள :—பார்த்தேன். இன்னும் சில நாட்களில் மீவாரிலுள்ள ஒவ்வொரு இராஜபுத்ர வீரனும் நமக்குதவி புரியுமாறு செய்துவிடுவதாக அவர் வாக்களித்துவிட்டார்.

உதயன் :—விமலன் அவர்மீது சந்தேகமே கொள்ளவில்லையா?

மங்கள :—அவர் பெரிய பேர்வழியாயிருக்கிறார். விமலன் மட்டுமல்ல, அந்த சந்தேகப் பிராணி ராம தேவனுக்குக் கூட சந்தேகம் ஏற்படவில்லை.

உதய :—அஜித் சிங்கன் நமக்காக உயிரையும் கொடுக்கத் தாயாராயிருக்கிறார்!... அவரல்லவோ உண்மையான ராஜபுத்ரர்!...மங்கள, எனக்கு யோசனைசெய்து செய்து தலை வலிக்கிறது......வருகிறாயா, சிறிது தூரம் சுற்றிவரலாம்?

மங்கள :—நான் எங்கு வேண்டுமானாலும் வரத் தயார். எனக்கு வேறு வேலை ஒன்றுமில்லை.

உதய :—அப்படியானால் வா, போகலாம்.

காட்சி 2.

[இடம்: அரண்மனையை அடுத்த பந்தய மைதானம். விமலசிங்கனும் ராம தேவனும் சண்டை ஆரம்பிக்குமுன் பேசிக்கொள்ளுகிறார்கள்]

விமலன் :—ராமதேவ், இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது?

ராம்தேவ் :—எல்லாம் தயாராகிவிட்டன, மஹாராஜ்! உதயனும் இன்னும் சில நிமிஷங்களில் வந்துவிடுவான்!

விமலன் :—இன்று அவனை நீ எப்படியாவது ஒழித்துவிட வேண்டும்...... ஹேமா எங்கே?

ராம்தேவ் :—அதோ, மஹாராணியின் பின்னால் உட்கார்ந்திருக்கிறாள்........ அவனும் வந்துவிட்டான், மஹாராஜ்! நான் போகட்டுமா?

விமலன் :—செய். (பெருமூச்சுடன்) இன்று ஒழிந்துவிட்டானானால் சௌகரியமாக இருக்கலாம்.........அப்பப்பா! இவனால் எவ்வளவு கஷ்டம்!

அரசி :—அதோ பாருங்கள், மஹாராஜ்! ஆரம்பிக்கப் போகிறார்கள்.

(கத்திகள் ஒன்றுடன் ஒன்று மோதிச் சண்டையிடும் சப்தம் சிறிது நேரம்)

ஹேமா :—உதயசிங்கர் ஜயித்து விடுவார்!

விமல :—பேசாமலிரு, ஹேமா.

பல குரல்கள் :—ஜெய், உதயஸிங்!

ஹேமா :—பார்த்தீர்களா, அப்பா! நான் என்ன சொன்னேன்?

விமல :—ராம தேவருக்கு அடிபட்டு விட்டது போலிருக்கிறது!......இப்படிக் கூப்பிட்டுக்கொண்டு வாருங்கள் அவனை! ....என்ன, ராம தேவா, இப்படி மோசம் செய்துவிட்டாயே!

ராமதேவ் :—மஹாராஜ்! நான் என்ன செய்யக்கூடும்?......உதயன் உண்மையிலேயே சிறந்த வீரன்......நான் இறவாமல் தப்பித்ததே ஒரு விந்தைதான்!

விமலன் :—போதும், போதும். நீ அவனைப் புகழ்வதைக் கேட்க நான் இங்கு வரவில்லை.........இன்று எப்படியாவது அவனை ஒழித்து விடுவாயென்றெண்ணினேன்.........உன்னால் அது முடியவில்லை.

ராம்தேவ் :—மஹாராஜ், நான் உண்மையைத்தானே கூறினேன்! எனக்குமட்டும் அவனை ஒழிக்கவேண்டுமென்ற ஆசையில்லையா ......வெகு சீக்கிரத்தில் தேசம் முழுவதையும் நமக்கு விரோதமாகக் கிளப்பிவிடுவான் போலிருக்கிறது... ......அந்தத் திருட்டுப்பயல் அஜித்சிங்கன்கூட இவனுக்கு உதவி செய்கிறானும்.

விமலன் :—என்ன? சேனாதிபதி அஜித்சிங்கனா?......(ரகசியமாக) ராமதேவா, அஜித சிங்கனையாவது நீ ஒழித்துவிடவேண்டும். இல்லாவிட்டால் நான் மீவாரைவிட்டே ஓடவேண்டியதுதான்.

ராமதேவ் :—மஹாராஜ்! அஜித் சிங்கனையொழிப்பது சுலபந்தான்.......பாருங்கள் நாளைபொழுது விடிவதற்குள் என் சாமர்த்தியத்தை! (தூதன் வருகிறான்)

தூதன் :—மஹாராஜ்!

விமலன் :—யாரது ? என்ன சமாசாரம்?

தூதன் :—பிரதாபசிங்கன் தங்கள் சகோதரர் ரஞ்சித் சிங்கனைத் தோற்கடித்து சிறையிலிட்டு விட்டான்......அவரை விடுவிக்க எவ்வளவு பணம் அனுப்ப வேண்டும் என்று எழுதி யனுப்புவதாகச் சொல்லச் சொன்னான்.

விமலன் :—சரி; நீ போகலாம். (தூதன் போகிறான்)

ராமதேவா! இதுவும் ஒரு நன்மை தான். ரஞ்சிதன் சிறையி லிருக்கும்வரை உதயன் மனம் அங்குதான் இருக்கும். நம்மை அதிகமாகத் தொந்திரவு செய்ய மாட்டான்.

ராமேதவ் :—மஹாராஜ்! ரஞ்சித் சிங்கனை மீட்பதற்கென்று ஒரு வரி போட்டு வசூல் செய்தால் என்ன ?......ஜனங்கள் சந்தோஷமாய்க் கொடுப்பார்கள்.

விமலன் :—அதுவும் நல்லயோசனைதான். அப்படியே செய்.........என்னுடன் அரண்மனை வரையில் வருகிறாயா ?

ராமதேவன் :—வாருங்கள் போகலாம்.

காட்சி 3.

[இடம்: உதயன் வீட்டில் அதே அறை. உதயனும் மங்களனும் வருகிறார்கள்.]

உதயன் :—மங்கள! இன்றைய சம்பவத்தைப் பற்றி எல்லாரும் என்ன பேசிக் கொண்டார்கள் ?.........பாவம், ராமதேவர் திணறிப் போய் விட்டார்.

மங்கள :—ராம தேவனுக்குக் கொஞ்சம் கூட வெட்கம் கிடையாது போலிருக்கிறது............விமலனிடம் உன்னைப் பற்றி என்னவென்னமோ அளந்தானும்.

உதயன் :—வேறு ஒரு சமாசாரமு மில்லையா ?

மங்கள :—வேறு ஒரு முக்கியமான சமாசாரம் இருப்பதனுல்தான் உன்னைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறேன்...... ரஞ்சித்சிங்கனைப் பிரதாபன் முறியடித்து சிறையிலிட்டு விட்டானும்.

உதயன் :—என்ன ? உண்மையாகவா...... நேற்றுகூட ரஞ்சிதன் தான் வெற்றி யடைந்தவன்போ லிருக்கிறது என்று சொன்னாரே அஜித்சிங்கர் ?

மங்கள :—நேற்று சாயங் காலத்திற்குள் வேறு மாதிரியாகி விட்டது......கூட அஜித்சிங்கன் போயிருந் தாரானல், இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்காது.

உதயன் :—விமலன் ரஞ்சிதனை மீட்க ஏதாவது ஏற்பாடு செய்யப் போகிறானு ?

மங்கள :—தெரியவில்லை. ஆனல் ஏதாவது வரி போடுவான் என்று நான் நினைக்கிறேன்...வரி போடுவதுதான் அவனுக்கு வெகு எளிதாயிற்றே!

உதயன் :—ரஞ்சிதனை விடுவிக்கப் பணம் ஒன்றுதான் தேவையா ?......அப்படியானல், நாமும் அதற்கேற்பாடு செய்ய வேண்டும். விமலன் வரி வசூல் செய்தால்கூட அவன் செலவிற்கே போதாதே அது!.........மங்கள, நீ இங்கேயே இரு, நான் அந்த விமலனைப் பார்த்துவிட்டு வருகிறேன்.

மங்கள :—நானும் வருகிறேன்......இங்கு உட்கார்ந்துகொண்டு நான் என்ன செய்யப் போகிறேன் ?

உதயன் :—சரி, வா. (போகிறார்கள்)

காட்சி 4.

[இடம்: அரண்மனையைச் சேர்ந்த பூந் தோட்டம்]

[விமலன் ராமதேவனுடனும் இரண்டு பிரபுக்களுடனும் பேசிக் கொண்டே வருகிறான்]

விமலன் :—ராமதேவ, அதோ இரண்டு பேர் வாயிற்காப்போனிடம் பேசுகிறார்களே, அர்வகள் யார் என்று பார்.

ராமதேவன் :—(சிறிது நேரம் கழித்து) உதயனும், அவனை ஒரு நிமிஷமும் பிரியாது திரிகிறானே அவனும். ஒரு மடையன்போ லிருக்கிறது..

விமலன் :...உதயனு? அவன் எதற்காக என்னைத் தேடி வரவேண்டும் ?.....

ராமதேவன் :.......ஸ்......ஸ்......ஸ்...ஸ்! கிட்டே வந்து விட்டார்கள்!

(உதயனும் மங்களனும் வருகி றார்கள்

விமல :—உதயசிங்கரா?— ஏது இவ்வளவு தூரம்? பூங்காவிற்கு என்னைத் தேடி வரும்படி என்ன நேர்ந்துவிட்டது?

உதய :—ஒரு துரோகியை ஒருவன் என்ன காரணத்திற்காக நாடி வரக் கூடும்?

விமல :—உதயசிங், உனக்கு நான் காட்டி வந்த மரியாதையெல்லாம் இதற்குத் தானா?...வெகு நன்றாயிருக்கிறது!... உனது துவேஷத்தினால் நான் அரசன், நீ ஒரு படைவீரன் என்பதைக்கூட மறந்து விட்டாய்போலிருக்கிறது... துரோகி! நீயா, நானா என்றுதான் தெரியவில்லை.

உதய :—ஆம்; துரோகிதான்; சகோதரத் துரோகி; தேசத் துரோகி. சண்டாளன் நீ. ஏதோ அதிர்ஷ்டவசத்தினால் உனக்கு அரச பதவி கிடைத்துவிட்டது.. இராஜபுத்திர ரத்தம் உன்னுடலில் எள்ளளவேனும் இருந்திருக்குமானால், இப்பேர்ப்பட்ட கொடியோனாய் ஒருநாளும் இருந்திருக்கமாட்டாய்.

விமல :—(கோபத்துடன்) நிறுத்து போதும்!

உதய :—உன் கோபத்திற்குப் பயந்து நிறுத்துபவனாயிருந்தால் நான் ஏன் இவ்வளவு தூரம் வருகிறேன்?...... விமல, அடே துரோகி, உன்னை அரச பதவியினின்றும் உதைத்துத் தள்ளி உனது சுக வாழ்வைக் கெடுக்காமற் போனால்......

விமல :—(கோபம்) ராமதேவ்! சங்கரா! இந்த நாயைப் பிடித்துக் கட்டுங்கள்!

உதய :—ராமதேவ், இங்குதான் இருக்கிறீர்களா? அடேடே! நாயா?...... எங்கே, வீரசிம்மங்களே! என்னைப் பிடித்துக் கட்டுங்கள் பார்க்கலாம் (சிறிது நேரம் மௌனம்) ஏன் விழிக்கிறீர்? ஆகட்டும் சிக்கிரம்! (சிரிக்கிறான்)

விமல .—(உரக்க) ராமதேவ்!...என்ன தயக்கம்?...ஆகட்டும்!

மங்கள :—ராம்தேவ்!... என்னிடமும் வாள் இல்லை; உன்னிடமும் இல்லை... நாம் இருவரும் மல்யுத்தம் செய்யலாமா? (சிரிக்கிறான்)

ராமதேவ் :—போதும் விளையாட்டு. மஹராஜ், இவர்களை வெளியில் போகச் சொல்லுங்கள்.

உதய :—விமல, நான் போகத்தான் போகிறேன். அதனால்தான் போவதற்கு முன் உன்னிடம் வந்தேன். போய் வரட்டுமா?

விமல :—போ, போ. பின்னாலேயே...... ....

உதய :—என்னைப் பிடிக்க ஆளனுப்புகிறீர்களா? செய்யுங்கள், மஹராஜ். சென்று வருகிறோம்.

(செல்கிறார்கள்)

விமல :—ராமதேவ், இவனுக்கு எவ்வளவு துணிச்சல்? இவன் பேசுவதையெல்லாம் கேட்டுக்கொண்டு பேசாமல் மரம்போல் நின்றுகொண் டிருந்தாயே! ...நல்ல வீரன் நீ!...இன்றிரவு அவன் வீட்டிற்குப் பத்து வீரர்களை அனுப்பி அவனைப் பிடித்துச் சிறையிலிட ஏற்பாடு செய்.

ராம் :—அப்படியே மஹராஜ்!

(போகிறார்கள்)

காட்சி 5

[இடம்: நகரத்தில் ஒரு தெரு. உதயனும் மங்களனும் வருதல்]

உதயன் :—மங்களா, நாமிருவரும் ராஜகிரிக்குச் செல்லவேண்டும்....எந்த நிமிஷத்தில் என்ன நேருமென்று எப்படித் தெரியும்?

மங்கள :—குதிரைகள்?

உதயன் ,—அதெல்லாம் ஏற்பாடு செய்துவிட்டேன்.

மங்கள :—அப்படியானால் போகலாம்; இப்பொழுதே புறப்பட வேண்டியது தானே?

உதயன் :— அஜித்சிங்கரைப் பார்த்து சொல்லிவிட்டுத்தான் போகவேண்டும்

......வருகிறாயா, அவர் வீட்டிற்குப் போகலாம்?

மங்கள :—சரி.

(போகிறார்கள்)

காட்சி 6.

[இடம் : அரண்மனையில் ஒரு கூடம்.

பாத்திரங்கள் : விமலனும், ராமதேவனும்]

விமல :—என்ன ராமதேவ், உதயன் அகப்பட்டானா?

ராமதேவ் :— அவனா?...... அரவல்லி மலைக்கு ஓடிவிட்டானாம். இனி அவனைப் பிடிக்க முடியுமா, என்ன?

விமல :—ஹூம், சரிதான். அப்படியானால் அவனைப் பிடிக்க ஒரு வழியும் இல்லையா?

ராமதேவ் :—இருக்கிறது......ஆனால் இவ் விஷயத்தில் ராஜ குமாரியின் பெயர் அடிப்படத் தாங்கள் அனுமதிப்பீர்களோ?

விமலன் :—நீ என்ன சொல்கிறாயென்றே எனக்குப் புரியவில்லை. கொஞ்சம் புரியும்படி சொல்......ஹேமலாவின் பெயரினால் என்ன ஆக வேண்டும்?

ராமதேவ் :—ராஜ குமாரியை உதயசிங்கன் காதலிக்கிறான் என்பது தங்களுக்குத் தெரியுமல்லவா?

விமலன் :—ஆம்.

ராமதேவ் :—ராஜ குமாரியின் ஸ்வயம்வரம் அடுத்த வெள்ளிக்கிழமை நடக்கப்போகிற தென்று விளம்பரம் செய்யுங்கள்.

விமலன் :—அது முடியாத காரியம். மற்ற தேச மன்னர்களெல்லாம் என்ன நினைத்துக் கொள்வார்கள்?...மேலும், ஹேமா அதற்கு ஒப்பமாட்டாள்.

ராமதேவ் :—அப்படியானால் (சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு) ஒரு வாட்போர் பந்தயமாவது வைப்பீர்களா? அதில் ஜயிப்பவருக்கு ராஜ குமாரியை மணஞ் செய்து கொடுப்பதாக விளம்பரஞ்செய்துவிடுகிறேன்.

விமல :— சரி, அப்படி வேண்டுமானால் செய். ஆனால் உதயன் நிச்சயமாய் வருவான் என்று உனக்குத் தோன்றுகிறதா?

ராம்தேவ் :—சந்தேகம் கூடவா? நீங்கள் பாருங்கள் என்ன நடக்கிறதென்று! ......அப்படியாயின், நான் போகலாமல்லவா?

விமல :—செய்......இரு. அஜித்சிங்கன் சமாசாரம் என்ன ஆயிற்று?

ராம் :—தெரியவில்லை இன்னும். தெரிந்ததும் வந்து சொல்கிறேன். (போகிறான்)

விமலன் :—கடவுளே! இந்த உதயனை ஏன்தான் படைத்தாயோ? இவனால் எனக்கு மன நிம்மதியே யில்லாமல் போய்விட்டதே!

அங்கம் 2 காட்சி 1

[இடம் : இராஜகிரி மலை. ஒரு குடிசை வாசல்]

[உதயன் உட்கார்ந்திருக்கிறான். மங்கள சிங்கன் வருகிறான்]

மங்கள :—உதய, அதோ பார்!

உதய :—வருவது யார்?

மங்கள :—தெரியவில்லை! அஜித் பாபு தான்!...என்னவோ நடந்திருக்கிறது போலிருக்கிறது!

உதய :—வரட்டும்; கேட்கலாம். (அஜித்சிங்கன் பிரவேசம்) என்ன அஜிதரே! என்ன சமாசாரம்?...மங்களா, கொஞ்சம் பழமும் பாலும் எடுத்துவா...... உட்காருங்கள், அஜிதரே!

அஜித் :—உதய, ரஞ்சிதனை விடுவிப்பதற்கு என்று வரிப் பணம் வசூல் செய்து அதை அந்த அயோக்கியன் தனது லீலைக்குச் செலவு செய்ய ஆரம்பித்து விட்டான்.

உதய :—பார்த்தாயா, மங்களா! நான் என்ன சொன்னேன்?

அஜித் :—நான் உனக்கு உதவி செய்வது அந்த தூர்த்தன் ராமதேவனுக்கு எப்படியோ தெரிந்து விட்டது.

அதய :—அடேடே! அப்புறம்?

அஜித் :—என்னைக் கொல்வதற்கு ஏற்பாடுகள் நடக்கின்றன.

மங்கள :—என்ன? தங்களையா?

அஜித் :—ஆம்; இரண்டு நாட்களுக்கு முன் இரவில் அரண்மனை வாயிலைத் தாண்டிச் சிறிது தூரம் வந்த

வுடன் இரண்டு முரடர்கள் என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள் ...ரகுவீரன் அதிர்ஷ்டவசமாக அங்கு வந்தான்......இல்லாவிட்டால் என்னைக் கட்டாயம் கொன்றிருப்பார்கள். மறு நாள் காலையில் என் மீது பாய்ந்திருக்க வேண்டிய ஒரு அம்பு என் குதிரை யின் கழுத்தில் பாய்ந்து அதைக் கொன்றுவிட்டது......இனிமேல் ஜாக் கிரதையா யிருக்க வேண்டுமல்லவா? என்ன உதயா, என்ன யோசனை செய் கிறாய்?

உதய :—இந்த ராமதேவன் செய்யும் அட் டூழியங்களுக்கு அளவே யில்லைபோ லிருக்கிறது. முதலில் அவனை ஒழித்து விட்டுப் பிறகுதான் விமலனைப் பற்றி யோசிக்க வேண்டும்போலிருக்கிறது. அஜித்ஸிங்! தங்கள் உதவி எங்களுக்கு மிக முக்கியம். நீங்கள் மீவாரிலேயே யிருக்க வேண்டியது அதைவிட முக் கியம்......உங்களுக்குத் துணையாக வேண்டுமானால், பவானிபட்டரை அழைத்துச் செல்லுங்கள்... மங்களா, பவானிபட்டரைக் கூப்பிடு......

அஜித் :—உதய, ரஞ்சிதரின் சமாசாரம் என்ன? அவரை விடுவிக்க ஒரு வழி யும் இல்லையா?

உதய :— மங்கள! (மங்கள சிங்கன் வரு கிறான்.)

மங்கள:—என்ன, என்ன?

உதய:—ரஞ்சிதரை விடுவிக்கப் போதிய பணம் சேர்க்க இன்னும் எவ்வளவு நாளாகும்?

மங்கள: ...இன்னும் 5, 6 நாட்களில் எல் லாம் தயாராகிவிடும்.

உதய :—கேட்டீர்களா, அஜிதரே! உத யனும் விமலனைப் போல் தூங்குவான் என்று நினைத்தீர்கள் போலும்!

அஜித் :—அப்படியானல் நான் சென்று வரட்டுமா, உதய? சென்றுவருகிறேன் மங்கள்.

உதய:—பவானி!......அஜித்ஸிங்குடன் செல்! (போகிறார்கள்)

காட்சி 2.

[நகரத்தில் ஒருவீதி. ரகுவீரன் வருகிறான்.]
[தண்டோரா சப்தம்]

தண்டோரா:—இதனால் மன்னாதி மன்னர் விமலசிங்க மஹாராஜா யாவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், அடுத்த வெள்ளிக்கிழமை பகல் 2 மணிக்கு அரண்மனையை அடுத்த புல்வெளியில் வாட்போர்ப் பந்தயம் நடக்கும். அதில் வெற்றிமாலை சூடுபவருக்கு ராஜகுமா ரியை மணம் செய்து கொடுப்பார் அர சர். ராஜபுத்திர வீரர்கள் யார் வேண்டு மாயினும் பங்கெடுத்துக் கொள்ளலாம். (டம் டம் டம்) (போகிறான்).

ரகுவீரன்:—இதை உதய சிங்கருக்குத் தெரியப்படுத்த வேண்டும். அவருக்குச் சொல்லாவிட்டால் ஆபத்துத்தான்!— அவருடைய காதலியல்லவா ராஜ குமாரி? (போகிறான்.)

காட்சி 3.

[இடம்: இராஜகிரியில் உதயன் குடிசை. உதயன் உட்கார்ந்து கொண்டிக்கிறான்.]

உதயன் :—மங்களா....மங்களா. (மங்கள் வருகிறான்.)

மங்கள:—என்ன? என்ன?

உதயன்:—சாப்பிட வேண்டாமா?

மங்கள:—அதைவிட முக்கியமான வேலை யொன்றிருக்கிறது......அதோ பார்!

உதய:—அடேடே! வருவது அரசனும் அமைச்சனும் போலிருக்கிறதே!... ... என்னைத் தேடித்தான் வருகிறார் களோ ஒரு வேளை?

மங்கள:—ஹூம், அவ்வளவு தைரியம் கூட இருக்கிறதா அவர்களுக்கு?...... வேட்டையாட வந்தவர்கள் வழி தப்பி விட்டார்கள் போலிருக்கிறது!

உதய:—குதிரைகளைக்கூடக் காணோமே! நடந்தல்லவோ வருகிறார்கள்!

மங்கள:—உதய, இதோ பார். இங்கு ஒளிந்து கொள்ளலாம். அவர்கள் வந்த தும் கொஞ்சம் வேடிக்கை செய்ய லாம். (ஒளிந்து கொள்ளுகிறார்கள்.)
(விமலனும் ராமதேவனும் வருகிறார்கள்.)

‘ஹிந்துஸ்தானி’ல் இன்ஷ்யூர் செய்து கொள்ளுங்கள்

ஏஜண்டுகளும் தேவை.

இதே வயசுள்ள ஆபீஸ்களில் முதல்தரமான இன்ஷ்யூரன்ஸ் நிலையம்.

*

<u>அதன் முன்னேற்றப் புள்ளி விவரங்கள்</u>

புது பிஸிநெஸ்	ரூ.	3	கோடி	14	லக்ஷத்திற்கு மேல்
நடைமுறையிலுள்ள பாலிஸிகள்	„	16	„	34	„
உயிர் நிதி	„	2	„	96	„
மொத்த ஆஸ்தி	„	3	„	36	„

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி, லிமிடெட்.

*

தலைமை ஆபீஸ் :
‘ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்’
ஸுரேந்திரநாத் பானர்ஜி ரோடு,
கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு :
‘ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்’
107, அரண்மனைக்காரத் தெரு,
மதராஸ்.

விமலன்:—ராமதேவரே, இப்பொழுது நாம் காட்டின் எந்தப் பக்கத்தில் இருக்கிறோமென்றே தெரியவில்லையே!...... அடேடே....நல்லவேளை...அந்தக் குடிசையில் யாராவது இருப்பார்கள் வா, பார்க்கலாம்...(நெருங்கி) ஓய், யாரையா உள்ளே? (பதிலில்லை) சரி, உள்ளே போய் பார்க்கலாம் வா. (ஒருவரும் அகப்படவில்லை) சே, உள்ளே கூட ஒருவருமில்லையே....சரி, இங்கு சற்று உட்கார்ந்து இளைப்பாறி விட்டாவது போகலாம்...அப்பாடா!

(உட்காருகிறார்கள்.)

ராம்தேவ்:—மஹாராஜ், இந்தக் காட்டில் தானே உதயன் வசிப்பதாகக் கேள்விப்பட்டோம்?...ஒருவேளை...இது... அந்த ராஜத் துரோகியின் குடிசை தானோ?

மங்கள:—(சற்று தூரத்திலிருந்து) ஆம், இது அந்த ராஜத் துரோகியின் குடிசை தான், ராமதேவரே!

விமல:—(திடுக்கிட்டு) யார் அது?

ராமதேவ்:—மங்கள சிங்கனின் குரல் போலிருந்தது. ஆம், அதோ அவன் வருகிறான்.

மங்கள:—எங்கள் தலைவர், ராஜத்துரோகி உதயசிங்கர், உங்கள் இருவரையும் தமது குடிலுக்கு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்.

விமல:—நீ என்ன செய்கிறாய் இங்கே?

மங்கள:—தங்களுக்குத் தெரியாதா, நான் உதய் சிங்கரின் வேலையாட்களில் ஒருவனென்று?

உதயன்:—(சிறிது தூரத்தில்) இல்லை, உதயனின் உண்மை நண்பர்களில் ஒருவன்! (நெருங்கிக்கொண்டே) வாருங்கள் விமலசிங்க மஹாராஜரே! ஏது அடியேனது குடிலுக்கு விஜயம் செய்யத் தாங்கள் மனமுவந்தது?...தாங்கள் சௌக்கியம்தானா, ராமதேவ்!... தங்களைக் கண்டு வெகு நாளாயிற்று! (ராமதேவ் தன் இடுப்பிலே தன்னை யறியாமலே கை வைக்கிறான்) பார்த்தீர்களா, ராமதேவரே, தாங்கள் இடுப்பைத் தொட்டுப் பார்த்துக்கொண்ட வுடன்தான் ஞாபகம் வந்தது. நாமிருவரும் வாட்போர் புரிந்து வெகு நாளாயிற்றல்லவா?

மங்கள:—மஹாராஜ்! எங்கள் தலைவர் கேட்ட கேள்விக்குத் தாங்கள் இன்னும் பதில் சொல்லவில்லையே. தாங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?

விமலன்:—வழி தவறிவிட்டது.

உதய:—ஓஹோ, சரிதான்......மங்களா, மன்னவனுக்குப் பழமும் பாலும் கொண்டுவா...பாவம், பசியுடன் வந்திருக்கிறார்கள், நமது குடிலுக்கு...மன்னாதி மன்ன! ஏழையேனின் குடிலில் கனிகளையும் பாலையும் தவிர தங்கள் பசியைத் தணிக்க வேறெதுவுமில்லை.

விமல:—அது போதும், உதய. நீ இல்லாவிட்டால் அதுகூட இல்லாமல் தவித்துப்போயிருப்போம்!

உதய:—மங்கள...பழங்களை இப்படி வை...சாப்பிடுங்கள், மஹாராஜ்....ராமதேவரே! தாங்களும் சாப்பிடுங்கள்!

(சாப்பிடுகிறார்கள்)

ஊரில் குடிகளெல்லாரும் க்ஷேமந்தானா, மஹாராஜ்!...ராமதேவரே, குடிகள் இப்பொழுது எத்தனை விதமான வரிகள் கொடுக்கிறார்கள்?...மஹாராஜ், ரஞ்சித்சிங்கரை விடுவிக்க எவ்வளவு பணம் அனுப்பினீர்கள்?.........பாவம், ராம்ஸிங்!

(விமலன் எழுந்திருக்கிறான்)

விமலன்:—உதய, நேரமாகிறது...நாங்கள் போகவேண்டும்...ஊர் செல்லும் பாதை எது? கொஞ்சம் தயவு செய்து காட்டுவாயா?

உதயன்:—ஆஹா! தங்களுக்கு அது கூடச் செய்யாவிட்டால் இவ்வுடல் இருந்துதானென்ன பயன்?

விமல:—விளையாடாதே, உதய. நான் உன் கையில் அகப்பட்டுக் கொண்டு விட்டால் என்ன வேண்டுமென்றாலும் பேசுவதா?

உதய:—மன்னிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும், மஹாராஜ்!...மங்கள, இவர்

களுக்கு மீவார் செல்லும் பாதையைக் காட்டிவிட்டு வா.

விமல :—சென்று வருகிறோம், உதய.

உதய :—நல்லது, அப்படியே செய்யுங்கள், மஹாராஜ்!

(விமல், ராமதேவ், மங்கள் போகிறார்கள்.) இன்னும் எவ்வளவு நாள்தான் நீ கொட்டமடிக்கிறாய் என்று பார்க்கலாம்...ரஞ்சிதரைப் பற்றிப் பேச்செடுத்தவுடன் முகத்தைச் சுளித்துக் கொள்கிறான்!... அயோக்கியன்! திருடன்! பகற்கொள்ளையடிக்கும் பாதகன்!...குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்குமல்லவா?...நான் இல்லாவிட்டால் தவித்துப் போயிருப்பானும்!... இந்த உபகாரத்திற்கு நன்றிகூடச் செலுத்தப் போகிறாயா? 'ஹ ஹ'!

(ரகுவீரன் வருகிறான்)

ரகுவீரன் :—ஜெய் பவானி!

உதய —யாரது?...ஓ, ரகுவீரா...என்ன சமாசாரம்?...மீவாரிலிருந்து நேரே வருகிறீர்களா?

ரகுவீர் :—ஆம், வெள்ளிக்கிழமை பகல் 2-மக்னிகு அரண்மனை மைதானத்தில் ஒரு வாட்போர் பந்தயம் நடக்கப் போகிறதாம்...ஜயிப்பவருக்கு ராஜகுமாரியை மணம் செய்து கொடுக்கப் போகிறானும் விமலன்...ராஜபுத்ர வீரன் எவன் வேண்டுமானாலும் பங்கெடுத்துக் கொள்ளலாம்.

(இதைக்கேட்டுக்கொண்டே மங்கள சிங்கன் வருகிறான்)

உதய :—என்ன மங்களா, சென்று விட்டார்களா வீரப்புலிகளிருவரும்?

மங் :—சென்றுவிட்டார்கள்...ராமதேவன் குனிந்த தலை நிமிராமல் சென்றுவிட்டான்.

உதய :—ஹூம்...அதிருக்கட்டும், ரகுவீரன் சொன்னதைக் கேட்டாயல்லவா?

மங் :—கேட்டேன். அதில் ஏதோ சூழ்ச்சி யிருக்கிறது என்று தோன்றுகின்றது...ராஜகுமாரி உன் காதலி என்பது விமலனுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம். அதைக்கொண்டு உன்னை வரவழைக்கலாமென்று இந்த யுக்தி செய்திருக்கிறான் என்று நினைக்கிறேன்.

உதய :—வெள்ளிக்கிழமை நான் எப்படியும் போக வேண்டியதுதான். ஹேமாவின் பெயர் இவ் விஷயத்தில் அடிபடும் வரையில் என்னால் இங்கு சும்மா உட்கார்ந்துகொண்டிருக்க முடியாது.

மங்கள :—வேண்டாம், உதய, இதில் சூது இருக்கிறது. அங்கு சென்றால் ஆபத்துத்தான்.

உதய :—உதயனால் ஆபத்துக்களி னின்றும் தப்ப முடியாதா?

மங்கள :—அதற்காகச் சொல்லவில்லை. நீ அங்கு போய் அகப்பட்டுக்கொண்டுவிட்டால் வேலை தடைப்பட்டுப் போகுமே என்றுதான் சொல்கிறேன்.

உதய :—இல்லை, அதெல்லாம் ஒன்றும் நடக்காது. என்னைப்பற்றிக் கவலைப் பட வேண்டாம் நீங்கள். நான் பத்திரமாய் வந்து சேர்வது என் பொறுப்பு ...மங்களா, நாளைக்குத்தானே ரஞ்சிதரை விடுவிக்கப் பணமெடுத்துச் செல்லப் போகிறாய்?

மங்கள :—ஆம்; பொழுது விடிவதற்குள் புறப்பட்டுவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

உதய :—சரி, அப்படித்தான் செய்.

காட்சி 4

[இடம் : பந்தய மைதானம். முன்போல் எல்லோரும் உட்கார்ந்திருக்கிறார்கள்.]

ராமதேவன்.—இத்தேசத்திலேயே சிறந்த வாள் வீரராகிய ராம்ஸிங்கரை எதிர்க்கக்கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா?...இவ்வளவு நேரம் நடந்த சண்டைகளில் அவர் வெற்றி மாலை சூடியுள்ளார்.... யாராவது வீரர் அவரை எதிர்க்க தைரியமுடையவரா யிருப்பரேல், முன் வருக.... (விமலனிடம்) மஹாராஜ்! அதோ வருகிறானே ஒரு வீரன், அவன் உதயன்தான் என்று நினைக்கிறேன்... ஆம், அவன்தான்... சந்தேகமில்லை... வெகு நன்றாய் மாறுவேஷம் போட்டுக்கொண் டிருக்கிறான்.

...இருந்தாலும், அவனது நடையழகும் கம்பீரமும் வேறு யாருக்காவது இருக்க முடியுமா?

[உதயனும் ராம்சிங்கனும் வருகிறார்கள்... சண்டை ஆரம்பிக்கிறது.]

(மெதுவாக)

ஷங்கர்! அவனைக் கைது செய்யுங்கள்.

(இரண்டு பேர்கள் உதயனைப் பிடிக்கிறார்கள்.)

உதய :—என்னை ஏன் பிடிக்கிறீர்கள்? விடுங்கள்!

ராமதேவ் :—(சிரித்துவிட்டு) உதய, உன் மாறு வேஷத்தினால் என்னை ஏமாற்றி விடலாம் என்று நினைக்கிறாயா?... உன்னைப் போல் எவ்வளவு பேரைப் பார்த்திருப்பேன்?

உதய :—பேடிகள்! அயோக்கியர்கள்!

ராமதேவ் :—மஹாராஜ்! ராஜத் துரோகத்திற்குரிய தண்டனையை வீரர் உதய சிங்கருக்கு அளிக்க வேண்டாமா?

உதய :—அடே ராம தேவ்!

விமல :—வாயை மூடு!... ராமதேவ், இவனை நாளைக் காலையில் தூக்கிலிட ஏற்பாடு செய்.

உதய :—அடே, நன்றிகெட்ட துராத்மா!

ராமதேவ் :—அந்த வீரரை சிறைக்கழைத்துச் செல்லுங்கள் இப்பொழுது!

(உதயனும் காவலாளிகளும் போகிறார்கள்.)

மஹாராஜ்! சூழ்ச்சி எவ்வளவு நன்றாய் பலித்தது பார்த்தீர்களா?...அப்பா! ஒரு வழியாய் இவன் கொட்டம் அடங்கியது!

(பெருமூச்சு)

காட்சி 5

[இடம்: இராஜ்கிரியில் உதயன் குடிசை. மங்களனும், ரஞ்சித சிங்கனும் இருவரும் வருகிறார்கள்.]

மங்கள :—(உரக்க) உதய!

ரஞ்சித் :—உதயசிங்கர் இந்தக் குடிலிலா இருக்கிறார்?

மங்கள :—ஆம்!... அதோ அஜித்சிங்கர் வருகிறார்...என்ன சமாசாரமோ தெரியவில்லை. (அஜிதர் வருகிறார்.)

அஜித :—மங்கள!... ரஞ்சித சிங்கரா? வருக, வருக, மன்னரே!

ரஞ்சித :—என்ன அஜிதரே! ஏதோ முக்கியமான சமாசாரம் கொண்டுவந்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே!

அஜித :—உமக்குத் தெரியுமல்லவா உதய சிங்கர் வாட் போர் பந்தயத்திற்குச் சென்றது?

ரஞ்சித் :—ஆம்...மங்கள சிங்கர் சொல்லித்தான் எனக்குத் தெரியும்... என்ன நடந்தது?

அஜித் :—விமலன் உதயனைக் கைது செய்து வைத்திருக்கிறான். நாளைக் காலையில் உயிர் துறக்க நேரிடும், நாம் ஒன்றும் செய்யாமலிருந்தால்!...

ரஞ்சித் :—என்ன? விமலன் இக்கொடுமை செய்ய எப்படித் துணிந்தான்?... மங்கள, புறப்படு... வாருங்கள் அஜித் சிங்கரே இப்பொழுது புறப்பட்டால்தான் காலையில் போய்ச் சேரமுடியும்.

மங்கள :—தங்கள் பசி......

ரஞ்சித :—இப்பொழுது ஒன்றும் வேண்டாம். கையில் வேண்டுமானால் கொஞ்சம் பழங்கள் எடுத்துக்கொள்.

(மங்களன் உடன்படுகிறான்)

சரி, வாருங்கள்; குதிரைகள் எங்கே? —பறக்க வேண்டும்.

(எல்லோரும் போகிறார்கள்.)

காட்சி 6

[உதயனை இரண்டு காவலாளிகள் தூக்கு மேடைக்கு இழுத்துவருகிறார்கள்]

(விமலன், ராமதேவன் வருகிறார்கள்)

விமலன் :—அவனை மேடைமீது ஏற்றுங்கள்!

உதய, உன் தெய்வத்திற்குக் கடைசிப் பிரார்த்தனை செலுத்து. நேரமாகிறது.

(சிறிதுநேரம் கழித்து)

என்ன விழிக்கிறீர்கள்? ஆகட்டும், சீக்கிரம்!

(சிறிதுநேரம்)

ராமதேவ் :—என்ன உதய, ஆழ்ந்த யோசனை செய்கிறாய்?......ஏன் நாம் அரசனுக்குத் துரோகம் செய்யத் துணிந்தோம் என்றா?

விமல :—ஏன் நிற்கிறீர்கள்? ஆகட்டும்?

(தூரத்தில் ஒரு குரல்)

"நிறுத்து!"

விமல :—யாரது?

ராமதேவ் :—ரஞ்சிதஸிங்!.........அரசே, இவனை சீக்கிரம் தீர்த்துவிடச் சொல்லுங்கள்!

விமல :—ரஞ்சிதரா? எப்படி தப்பி வந்தான்?

(ரஞ்சிதன் வருகிறுன்)

ரஞ்சித :—என்ன விமலா, உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?

விமல :—என்ன பிதற்றுகிறுய்?

ரஞ்சித :—உதயரை ஏன் கொலைசெய்கிறுய்?

விமல :—அவன் ராஜத்துரோகி!

ரஞ்சித் :—முதலில் அவரது விலங்குகளை நீக்கச்சொல்; பிறகு பேசலாம்.

விமல :—முடியாது!.........வெட்டுங்கள் அவனை! ஏன் தயங்குகிறீர்கள்?

ரஞ்சித :—உதயரைக் கொல்பவனை அந்தப் பீடத்திலேயே பலியிடுவேன்! அன்னை பவானிமீது ஆணை!......அடே, பேடி விமல்! உனக்கு ஆண்மை சிறிதேனும் இருந்தால் என்னுடன் சண்டைசெய்து என்னைக் கொன்றுவிட்டுப் பிறகு உதயரைக் கொல்!

(வாளையுருவுகிறுன்.)

விமலனும் வாளை யுருவ, சண்டை மூள்கிறது. ரஞ்சிதன் விமலனைக் கொல்லப்போகும் சமயத்தில், விலங்குகளைத் தகர்த்துக்கொண்டு உதயன் நடுவில் குதிக்கிறுன். அவனுக்குக் காயம்பட, "ஆ!" என்ற சப்தத்துடன் கீழே விழுகிறுன்.]

ரஞ்சித :—உதய, உதய! ஐயோ, ஏன் நடுவில் குதித்தனை?

உதயன் :—அண்ணனும் தம்பியும் சண்டையிடுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன் என்றெண்ணினீரா, ரஞ்சிதரே?.........ராஜபுத்ர ரத்தம் என்னுடலில் இருக்கும்வரை நான் அம்மாதிரி செய்யமாட்டேன்...இந்த நாட்டில் சமாதானமும் சந்தோஷமும் நிலைபெறச்செய்யலாம் என்று எண்ணியிருந்தேன்........?...

ரஞ்சித :—உதய, நான் ராஜ்யத்தை நன்ருய்ப் பாதுகாக்க மாட்டேனு?.........ஏன் இப்படிப் பேசுகிறீர்?

விமல :—உதய, நீயே உண்மையான இராஜபுத்ரன்!......சூரியதேவன் மீது ஆணையாக மீவார் ராஜ்யத்தை இன்று முதல் ரஞ்சிதன் கையில் ஒப்படைத்து விட்டேன்!......அது ஒன்றுதான் நான் செய்த பாபங்களுக்கெல்லாம் பரிகாரம்!.........உதய, உதய, என்னை மன்னிக்கமாட்டாயா?

உதய :—மன்னிப்பதற்கு என்ன இருக்கிறது, விமல?.........உன்னைக் கடவுள் ஆசீர்வதிப்பார்...... —நான் இன்னும் வெகு நேரம் இருக்கப் போவதில்லை...

விமல :—ஐயோ, தெய்வமே!

உதய :—விமல, வருந்தி என்ன பயன்? ....ஹேமா,...ஹேமா எங்கே?

விமல :—அஜிதரே, தயவுசெய்து ஹேமாவை அழைத்து வாருங்கள். செல்லும் சீக்கிரம்.........உதய, இனி நான் இதுவரையிருந்ததைப்போல மூடனுயிருக்க மாட்டேன், இது சத்தியம்! இது சத்தியம்!......உதய, நீதான் என்தெய்வம்!

உதய :—விமல,...ரஞ்சிதரே! மங்களன் எங்கே?

ரஞ்சித :—வந்துவிடுவான் இரண்டொரு நிமிஷங்களில்.

(ஹேமா வருகிறுள்.)

ஹேமா :—உதய, உதய!......யார் தங்களுக்கிந்தத் தீங்கு செய்தது?

உதய :—ஒருவரும் செய்யவில்லை, கண்மணி!......விதியின் விளையாட்டு இது! ......இதற்கு யாரை நொந்துகொள்வது?

ஹேமா :—ஐயோ, என் அரசே!........ உம்மைப் பிரிந்து நான் என்ன செய்வது?.................

உதய :—வருந்தாதே, ஹேமா.

(மங்களன் வருகிறான்.)

மங்கள :—உதய, உதய! என்ன இது?

உதய :—மங்கள்......மங்கள்.. ...ஹேமா ......ஹேமாசென்று வருகிறேன்...... உங்களெல்லாரையும் கடவுள் ஆசீர்வதிப்பார்!......ஜெய் பவானி!

ஹேமா :—ஆ, சென்றுவிட்டீரா, அதற்குள்? ஐயோ, என் செய்வேன்.

மங்கள :—உதய, உதய, உதய!

விமல :—உதய, ஓ ராஜபுத்ர வீர!

ரஞ்சித :—ஒரு மாணிக்கம் மறைந்தது. வீர உயிர் அகன்றது. இனி உதய சிங்கரைப் போன்ற ஒரு வீரரை, ஒரு நண்பரை, ஒரு பக்தரைக் காண்போமா?

[இச் சிறு நாடகத்தை எழுதியவர் சி. நா. சித்தரஞ்ஜன்.]

விக்கிரம வருஷத்தின் கலை வெற்றி!

ஹாஸ்யம்—நடிப்பு
நாட்டியம்—சங்கீதம்
முதலியன ஒருங்கே கூடிய
புராணப் படம்

ஊர்வசி-சாஹசம்

- P. B. ரெங்காச்சாரி
- K. சாம்பமூர்த்தி
- K. சுப்புலக்ஷ்மி
- M. R. கிருஷ்ணமூர்த்தி
- P. M. தேவன்

முதலியோர் நடித்தது

இம்மாதம் வெளிவரத் தயாரிலிருக்கிறது.

விவரங்களுக்கு:

வீனஸ் பிக்சர்ஸ்

ராயப்பேட்டை :: மதராஸ்

[கா. சி. வேங்கட ரமணி எழுதியது]

பாடம் 1

குழந்தை	தாய்
அப்பா	அம்மா
அண்ணன்	தம்பி
அக்கா	தங்கை
பெரியப்பா	சித்தப்பா
அத்தை	அத்திம் பேர்
பெரியம்மா	சிறு தாயார்

ஓடி வா, குழந்தைமணி, நீ எங்கே விளையாடப் போனாய்?

பந்தடிக்கப் போனேன், அம்மா. அப்பா ஊரிலிருந்து வந்து விட்டாரா?

அப்பா வரவில்லை, அத்திம் பேர் வந்திருக்கிறார். மாடியிலிருக்கிறார். அவரை சாப்பிடக் கூப்பிட்டுக் கொண்டுவா, மணி.

அக்காவும் வந்திருக்கிறாளா?

வந்திருக்கிறாள்.

கற்கண்டு கொண்டு வந்திருக்கிறாளா, அம்மா?

மைசூர் பாக் கொண்டு வந்திருக்கிறாள். நீ சாப்பிடும் பொழுது உன் இலையில் போடுகிறேன்.

இலையில் வேண்டாம், அம்மா, கையில் கொடு. நான் சாப்பிடப் போகிறதில்லை. மாடு கறந்தாய் விட்டதா? பாலை சாப்பிட்டுவிட்டு, படுத்துக் கொள்ளுகிறேன்.

குழந்தை மணி, வெறும் பால் போதாது. கொஞ்சம் பாலுஞ் சாதமுமாய் சாப்பிட்டுவிட்டு, படுத்துக் கொள். மாடிக்குப் போய் அக்காவையும் அத்திம்பேரையும் அழைத்துக் கொண்டு வா.

பொய்!

"சாகரன்"

எட்டாவது வகுப்பில் அன்று காலை அமர்க்களமாகி விட்டது. சோமு சொன்ன ஒரு ஒரு சிறு பொய், பையன்கள் எல்லோரையுமே ஆத்திரப் படுத்தி விட்டது.

வகுப்பில் உபாத்தியாயர் தலைக்கு மேலே ஒரு சரஸ்வதி படம் உண்டு. அதற்கு அன்று காலை ஒரு மாலை சூட்டுவதற்காக, சோமுவின் 'ஷேம்' வேணுகோபாலன், மேஜைமீது ஏறி மாலையைப் போட்டு விட்டுக்கீழே இறங்கினன். இறங்கிய மறு க்ஷணம் படம் பொத்தென்று கீழே விழுந்து உடைந்து விட்டது.

உபாத்தியாயர் வந்ததும். "யார் படத்தை உடைத்தது?" என்று கேட்டார்.

"வேணுகோபாலன் தான், சார்," என்று சொன்னன் சோமு. வாத்தியார், வேணுவை பிரம்பால் பிய்த்து விட்டார்!

வேணு அழுதான். அவன் முகத்தை மூடிக்கொண்டு அழுவதை சோமு பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான்.

மற்ற எல்லா பயன்களும், சோமுவை, அசாத்ய கோபத்துடன் விழித்து விழித்துப் பார்த்து முணு முணுத்தார்கள். சோமு அசைய வில்லை. கற்சிலை போல உட்கார்ந்திருந்தான்.

உாபத்தியாயர் கையிலிருந்த சரஸ்வதி படம் சோமுவின் கண்களில் பட்டது. உடைந்த அப்படத்துச் சரஸ்வதியும், தன் ஹிருதயம் உடைந்து கண்ணீர் விடுவது போல அவனுக்குத் தோன்றியது.

"வேணு அழுவதைக்கண்டா சரஸ்வதி கண்ணீர் பெருக்குகிருள்? அல்லது—நா.......ன்.......நான்...—பொய் சொல்லி விட்டேனென்று.........

வேணுவின் விம்மலையும், உடைந்த படத்தையும் மாறி மாறிப் பார்த்தான் சோமு.

"அழுதாயோ, உதை விழும், இன்னும்" என்றுவாத்தியார் வேணுவை மிரட்டினர்.

வேணு அழுகையை நிறுத்திக்கொண்டு விக்கினன். சோமு மனம் துடித்தது. வேணு வாய்விட்டுக் கதறியபோது கூட அவன் மனம் இளக வில்லை. விக்கியபோது அவன் ஹிருதயம் நைந்து போயிற்று.

மெதுவாக வேணுகோபாலனிடம் நகர்ந்தான்—நாத்தடுமாற "வேணு—என்னை மன்னித்துவிடு" என்றுன். அவன் குரல் கர கரத்தது. நடுங்கிற்று. அழுகை வந்து விட்டது.

வேணு தலை நிமிர்ந்து சோமுவைப் பார்த்தான். அவன் கண்களில் கோபக் கனல் வீசிக் கொண்டிருந்தது.

"சுண்டல் காரக் கழுதை! உன்னை மன்னிக்கக் கூட வேண்டுமா?" என்று சீறினன்அவன்.

சோமுவின் தகப்பனுர் மாலை வேளையில் கடற்கரைக்குச் சென்று சுண்டல் வியாபாரம் செய்பவராகையால், எல்லாப் பிள்ளைகளும் சோமுவை, "சுண்டல், காரம் சுண்டல்," என்று கேலி செய்வார்கள். உடனே சோமுவிற்குக் கோபம் பற்றிக் கொள்ளும். குமுறி அழுவான். வைவான்.

ஆனல் இன்று வேணுகோபாலன் அப்படி வைததும் அவன் கோபித்துக் கொள்ளவில்லை. மௌனமாக தன் இடத்திற்குப் போய்விட்டான்.

அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. மனம் விட்டுக் கதற வேண்டும் போலத் தோன்றியது.

"சரஸ்வதி, கலாநிதியே! இன்றிலிருந்து நான் பொய் சொல்லமாட்டேன். என்னை மன்னித்துவிடு!" என்று விக்கினன் சோமு.

2

மாலை, பள்ளிக்கூடம் விட்டதும், வீடு செல்லும்பொழுது பொய்யையும், மெய்யையும் பற்றி மனத்தினுள் போராடிக் கொண்டே, சென்றுன்.

வீடடைந்ததும், உள்ளே அவன் தகப்பனர் முக்கி முனகிக் கொண்டு படுக்கையில் படுத்திருப்பதைப் பார்த்ததும் திடுக்குற்றான்.

"அப்பா—உனக்கு என்ன ?" என்று படபடப்புடன் கேட்டான் சோமு.

"கண்ணே—திடீரென்று ஜுரம் வந்து விட்டது. இன்று வியாபாரத்திற்குப் போக முடியாது போலிருக்கிறது." என்றார் அவர்.

சோமு கவலையுடன் உட்கார்ந்தான். பிறகு, "அப்பா—இன்று வியாபாரத்திற்கு நான் போகட்டுமா ?" என்று கேட்டான்.

"உன்னால் முடியுமா கண்ணே ?"

"ஏன் முடியாது ?"

"முடியுமானல் போய்விட்டுவா ??

எழுந்து உள்ளே ஓடி, "அம்மா, இன்று பண்ணிய சுண்டல் எங்கே ?" என்று கேட்டான் சோமு.

தாயார் அன்று பண்ணிய சுண்டலை அவன் முன்பு கொண்டு வந்து வைத்து, "சோமு, நேற்று பாதி சுண்டலுக்குமேல் வியாபாரம் ஆகாமல் மிகுந்து விட்டது. அதையும் கலந்து விட்டேன். ஜாக்கிரதையாகப் போய் விட்டுவா." என்றாள்.

"அடே, எல்லாரிடமும் நல்ல சுண்டல், புதிதாகப் பண்ணியது என்று சொல்லு. நேற்று சுண்டலும் கலந்திருக்கிறது, என்று உளறி வைக்காதே!" என்றார் தகப்பனர்.

"பழைய சுண்டலைப் புதிது என்று சொல்வதா ?"

"பொய்!"

சுண்டலை கீழே வைத்துவிட்டு, "அப்பா நான் இன்று போகவில்லை" என்றான் சோமு.

"ஏண்டா?"

"நான் பழைய சுண்டலை புதிது என்று சொல்லமாட்டேன். பொய் சொல்ல என் மனம் கூசுகிறது."

"சீ கழுதை, எனக்கில்லாமல் உனக்கு என்னடா 'பொய்' வந்துவிட்டது?"

"நான் இன்று போகவில்லை, அப்பா"

"போய்த்தான் வேண்டும்! இல்லாவிட்டால் சோறு கிடையாது. பாதி சுண்டலாவது விற்றுவிட்டு வந்தால்தான் சோறு!" என்று இரைந்தாள் தாயார்.

"நான் பொய் சொல்ல வேண்டுமா?"

"உன்னை யார் பொய்ச் சொல்லச் சொன்னார்கள் ?"

"சுண்டல் பழசாயிற்றே!"

"நான் பெரியவன் சொல்கிறேன். என்னைவிட உனக்கு அதிகம் தெரிந்து விட்டதோ? போய், புளுகு என்று உட்கார்ந்திருந்தால் இலையில் சோறு வந்து விழுமோ? போடா—நாயே — போய் விற்றுவிட்டு வாடா—பொய்யாம்— புளுகாம்.........!"

தகப்பனரின் கோபத்தைக் கண்டு நடுங்கினன் சோமு. கூடையை எடுத்துக் கொண்டு, கடற்கரைக்குக் கிளம்பினன்.

3

கடற்காற்று, "ஓ" வென்று அடித்துக் கொண்டிருந்தது. தன்னைப் பார்க்கிற ஒவ்வொருவரும், "பொய்யன், வஞ்சகன்," என்று ஏசுவது போல சோமுவிற்குத் தோன்றியது.

கூட்டத்தை விட்டே ஓடி விட வேண்டுமென்று அவன் கால்கள் துடித்தன. ஆனல் கூட்ட முள்ள இடத்தில் தானே வியாபாரம் ஆகும்! ஆகையால் 'சுண்டல்' என்று கத்தினன் சோமு.

அவன் குரல் நடுங்கிற்று. அவன் கால்கள் தள்ளாடின.

"சுண்டல்" என்று கூப்பிட்டார் ஒரு கிழவர்.

சோமுவுக்கு அவரிடம் போக கால் எழவில்லை.

"கிழவர்—ஐயோ—அவரை ஏமாற்றி இந்தப் பழைய சுண்டலை விற்க வேண்டுமா ?"

வேறு திக்காக ஓடினன் சோமு.

ஆனல் கிழவர் கை தட்டினர். ஆர்ப்பாட்டம் செய்தார். "ஏ சுண்டல்" என்று கூவினர்.

சோமுவை அவன் அருகே இருந்தவர்கள் கிழவர் கூப்பிடுவதாகச் சொல்லி, அங்கே போகச் சொன்னார்கள்!

"நல்ல சுண்டல் தானா? சூடாக இருக்கிறதா?" என்று கேட்டார் கிழவர்.

சோமுவிற்கு வாய் எழவில்லை. தலையை அசைத்தான்.

ஆனால் கிழவர், தானாகவே கொஞ்சம் சுண்டல் எடுத்து மாதிரி பார்த்து விட்டு, "பேஷ்! அரையணாவிற்குக் கொடு!" என்றார்.

சுண்டலைக் கட்டிக் கொடுப்பதற்குள் சோமுவின் உடல் வியர்த்துக் குன்றியது. பொய்யைக் கண்டு கிழவர் மயங்கி விட்டாலும், பொய்யைக் கொடுக்கும் அவன் உள்ளம் பிளந்தது.

ஆனால் கிழவரிடம் அரையணா வாங்கிக் கொண்டு எழுந்ததும் சோமுவின் முகத்தில் சந்தோஷம் தென்பட்டது.

"ஏமாற்றி விட்டேன்!"

ஐயோ!......... மறுக்ஷணம் அவன் மனசாட்சி அவனைக் கொடூரமாகக் கேட்டது......

"ஏமாற்றி விட்டாயா? உன்னை நம்பிய ஒரு கிழவரை ஏமாற்றிக் காசு பறித்து விட்டாயா? பலே கெட்டிக்காரன் தான்! உண்மையே பேசுகிறேன் என்று காலையில் சொல்லி விட்டு, இப்பொழுது பொய்யில் கெட்டிக்காரனாகி விட்டாயா? சபாஷ்!........"

4

ஹிருதயத்தின் பரிகாசத்தை சோமுவால் சகிக்க முடியவில்லை. தூரத்தில் ஓரிடத்திற்குச் சென்று கூடையைக் கீழே வைத்து விட்டு விசித்து விசித்து அழுதான்.

"கடவுளே, உண்மையின் ஸ்வரூபமாகிய நீயே பொய்யையும் ஏன் சிருஷ்டித்தாய்? உன்னை நாங்களெல்லாம் பார்க்கக் கூடாது என்பதற்காக நீ ஏற்படுத்திய மாயையா இது? பொய்யில் இனிமையை வைத்து விட்டாய் - ஐயோ - அதில் எல்லோரும் மயங்கும்படியும் செய்கிறாயே! ஊராரும், என் பெற்றோர்களும் அதையே தூண்டுகிறார்கள். வாய் பொய்யில் இனிமை காண்கிறது. பிராணிகளும் இந்தப் பொய் இன்பத்தையே விரும்புகின்றனவே! ஐயோ, இது என்ன அக்ரமம்!" என்று அழுதான் சோமு.

அவனைச் சுற்றி யாருமில்லை. அவன் விம்மலைச் சமுத்திரம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. காற்று அவனைத் தடவிற்று. ஆகாயத்தில் சில பக்ஷிகள் ஏதோ ஒரு புது வஸ்துவைக் கண்டு விட்டதுபோல அவனைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டன.

அப்பொழுது மற்றொரு சுண்டல் விற்பவர் சோமு அழுவதைக் கண்டு, அவனிடம் வந்து, "ஏன் குழந்தாய் அழுகிறாய்?" என்று கேட்டார்.

சோமு பதிற்சொல்லாமல் அழுதான்.

"காரணம் என்ன, தம்பி, யாராவது காசைப் பிடுங்கிக்கொண்டு விட்டார்களா? அல்லது சுண்டலை அள்ளிக்கொண்டு போய் விட்டார்களா?"

"இல்லை," என்றான் சோமு.

"பின்பு எதற்காக அழுகிறாய்?"

"மாமா - பிறரை ஏமாற்றுவது எனக்குப் பிடிக்கவில்லை," என்று சொல்லிவிட்டு, சோமு விக்கி விக்கி அழுதான். சுண்டல்காரர் சிரித்தார்.

"ஏன் - உன்னுடையது பழைய சுண்டலோ," என்று ஒரு கண்ணை மூடியபடி, புன்னகையுடன் கேட்டார்.

"ஐயோ - அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"கட கட" வென்று சிரித்தார் சுண்டல்காரர்.

"குழந்தாய்—இந்த சுண்டல் வியாபாரத்தில் பதினைந்து வருஷமாகப் பரிச்சயமுள்ள எனக்கு இதுகூடத் தெரியாதா? நல்லது அப்படியானால் இப்பொழுது பழைய சுண்டலை விற்று எல்லோரையும் ஏமாற்ற வேண்டியிருக்கிறதே என்று வருத்தப் படுகிறாயோ?"

"ஆமாம்" என்றான் சோமு.

"அட பித்துக்குளி!" என்றார் அவர்.

வெற்றியைநிலைநாட்ட
மற்றொருமுயற்சி
"சுமங்கலி"
வரவேற்கத்தயாராயிருங்கள்!
சென்னைபடவிமா
சகர்களால்மிகச்
சிறந்தபடமென்று
தீர்ப்பளிக்கப்பட்ட
பில்ம் பாலெட்டில்
1939ம்வருஷத்திய
உயர்ந்தபடமெனத்
தீர்மானிக்கப்பட்ட
வந்தேமாதரம்
படத்தை சிருஷ்டித்த
அதேகோஷ்டியார்
உங்களுக்கு அளிக்கும்
சுமங்கலி
a B.N.REDDI · RAMNOTH · SEKAR production
திரைப்பட மகுடம் சூடவரும்
வாஹினியின் உன்னத சித்திரம்
"காத்திருக்கலாமே, இவளைக்காண!"
MADE AT NEWTONE STUDIOS

பிறகு சுற்று முற்றும் பார்த்து விட்டு தன் சுண்டலைத் திறந்து காட்டி, "இதோ பார்த்தாயா? இந்தச் சுண்டல் பண்ணி நாலு நாளாகிறது! நான் எல்லோரிடமும் 'புதுசு, சூடான சுண்டல்' என்று சொல்லித்தான் இதோ அரை ரூபாய் சம்பாதித்து விட்டேன். உன்னைப்போல அழுது கொண்டிருந்தால் முடியுமா? இதிலெல்லாம் நியாய அநியாயமே கிடையாது குழந்தை, வயிற்றுப் பிழைப்பு!" என்றார்.

"பொய்யாக இருந்தாலென்ன, மெய்யாக இருந்தாலென்ன, வயிறு நிரம்பினால் போதும்!" என்று அவர் உபதேசிப்பதைக் கேட்டுச் சோமு ஆத்திர மடைந்தான்.

"பட்டினியால் இறந்தாலும், நான் பொய் சொல்ல மாட்டேன்" என்றான்.

"அட பித்து!" என்று சிரித்துவிட்டு சுண்டல் காரர் நடையைக் காட்டினார்.

தலையில் கூடையை வைத்துக் கொண்டு நடந்தான் சோமு.

தூரத்தில் ஒரு வாலிபன், "சுண்டல்" என்று கூப்பிடவே, அவனிடம் "உண்மையைச் சொல்லிவிடுவது," என்ற தீர்மானத்துடன் சோமு சென்றான்.

"நல்ல சுண்டல் தானா?"

"ஆமாம்," என்று உளறினான் சோமு. பொய் அவனை அறியாமலேயே வந்து விட்டது!

5

வியாபாரத்தை முடித்துக் கொண்டு கடற்கரை ஓரமாகச் சென்ற பொழுது சோமுவின் உடல் நடுங்கிற்று. சமுத்திரத்தின் அலைகள், "ஏ பொய்யா! அயோக்யா" என்று திட்டுவது போல அவனுக்குத் தோன்றியது. வெட்கினான். நொந்தான்.

"பொய் சொல்லி இன்னொருவரையும் ஏமாற்றி விட்டேனே," என்று அலறினான்.

"என்னால் இனி உண்மையே பேச முடியாதா? நிஜம் சொல்வது அவ்வளவு சாதாரணமான காரியம் இல்லையோ?"

"ஆம்—ஆம்...உண்மை பேசத் தைரியம் வேண்டும்—ஆண்மை வேண்டும்—"

"அப்படியானால் நான் கோழையா? காலணாக் காசிற்காகப் பொய் சொல்லிவிட்டேனே!"

"ஐயோ, பொய்யே"

"பாழும் பிசாசே.

"என்னை விட்டுப் போக மாட்டாயா?" என்று கதறினான் சோமு.

அவன் தலை கிறுகிறுத்து, அவனை என்னமோ செய்தது. கூடையைப் பிடித்திருந்த அவன் கைகள் நழுவின. கூடை சமுத்திரத்தில் சாய்ந்தது. ஒரு பெரிய அலை சுண்டலையும், கூடையையும் அடித்துக் கொண்டு போய் விட்டது.

பக்கத்தில் உள்ளவர்கள் "ஐயோ" என்று அலறினார்கள்.

ஆனால் சோமு—?

வெறி பொங்கும் கண்களுடன் அம்மகா சமுத்திரத்தை நோக்கிய படியே அச்சிறுவன் நின்றான். தன்னை இத்தனை நேரமாக தவிக்க வைத்த அக் கூடை சமுத்திரத்தில் தத்தளிப்பதை அவன் திருப்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.